CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

XI

க்ருஷ்ண யஜுர்வேத ஸாரம்

மூன்றாவது அஷ்டகம்

ஶ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2005

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ருஷ்ண யஜுர்வேத ஸாரம்

மூன்றாவது அஷ்டகம்

KRISHNA YAJUR VEDA
3RD ASHTAKA

உரையாசிரியர் :
கருப்பத்தூர், வேதபாஷ்யமணி
ப்ரம்மஸ்ரீ K. R. சந்திரசேகர கனபாடிகள்

அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2005

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாம் வெளியீடு : 2005

பிரதிகள் : 100

உரிமை : பதிவுப் பெற்றது.

இலவச வெளியீடு

அச்சிட்டோர் :

ப்ரபு என்டர்ப்ரைசஸ்,

ஃபோன் : (044) 25544755 (pp)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ருதக்ஞதை

இந்த க்ருஷ்ண யஜுர்வேதம் மூன்றாவது அஷ்டகத்தை பிரசுரிப்பதற்கு பெரும் அளவில் பொருளாதாரம் தந்து உதவிய Dr. Rajam Aiyar Trust நிர்வாகிகளுக்கும் மற்றும் பலருக்கும் எங்கள் மனமார்ந்த க்ருதக்ஞதையை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அட்டவணை

முன்னுரை	1
1ம் ப்ரச்னம்	3
2ம் ப்ரச்னம்	54
3ம் ப்ரச்னம்	73
4ம் ப்ரச்னம்	87
5ம் ப்ரச்னம்	110
6ம் ப்ரச்னம்	118
7ம் ப்ரச்னம்	127
8ம் ப்ரச்னம்	152
9ம் ப்ரச்னம்	180

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

श्री रामजयः

ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேதம்

மூன்றாவது அஷ்டகம்

முன்னுரை

यस्य निश्वसितं वेदाः यो वेदेभ्योखिलं जगत्
निर्ममे तमहं वन्दे विद्यातीर्थमहेश्वरम् ॥

अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जन शलाकया
चक्षुरुन्मीलितं येन तस्मै श्री गुरवे नमः ॥

முதல் இரண்டு அஷ்டகங்களும் 8 (தலா) ப்ரச்னங்களை உடையது. மூன்றாவது அஷ்டகம் அத்யயன முறையில் 9 ப்ரச்னங்கள் என்றாலும் ஸ்ரீ வித்யாரண்ய பாஷ்ய ரீதியில் காடகம் முதல் மூன்று ப்ரச்னங்கள் சேர்த்து 12 ப்ரச்னங்களாக இருக்கின்றது. ஆயினும், அத்யயன முறையையும், ஸ்ரீவித்யாரண்ய பாஷ்யத்தையும் அனுஸரித்து தமிழாக்கம் செய்யப்படுகிறது. இதில் முதல் ப்ரச்னம் நக்ஷத்ரேஷ்டி (ஸத்ரம்) என்கிற ப்ரயோகத்தை விளக்குகிறது. 2, 3 ப்ரச்னங்கள் ஒவ்வொரு க்ரஹஸ்தனும் அக்னி ஹோத்திரியாகி ஒவ்வொரு பூர்ணிமா, மறுதினம் ப்ரதமை,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அமா, மறுதின ப்ரதமையில் அனுஷ்டிக்க வேண்டிய தர்ச பூர்ணமாஸேஷ்டிகளின் மந்த்ர பாகமான ஸம்ஹிதா முதல் காண்டம், முதல் ப்ரச்னம் துடக்கம் முதல் 13 அனுவாகங்களின் மந்த்ரங்களின் அர்த்தம், வினியோக முறை, அதன் ப்ரயோஜனம் போன்றவற்றை விளக்கு கின்றன.

நான்காவது ப்ரச்னம் புருஷ மேதம் என்கிற கர்மாவில் தேவதைகள், ஹவிஸ் இவைகளை ப்ரதி பாதனம் செய்கிறது.

ஐந்தாவது ப்ரச்னத்தில் முன் சொன்ன தர்ச பூர்ணமாஸேஷ்டியில் ஹோதா என்கிற ரித்விக் கினால் தேவதைகளையும், அவர்களின் மஹிமை களையும் தெரிவிக்கிற மந்த்ரங்கள் சொல்லப் பட்டுள்ளது. இதை யஜுர் வேத ஹௌத்ரமந்த்ர பாகம் எனச் சொல்லுவார்கள். ஆருவது ப்ரச் னத்தில் இதே போன்று பசு யாகத்துல் ஹோதா வினால் படிக்கத் தகுந்த மந்த்ரங்கள் உள்ளது. இதற்கு பசுஹௌத்ரம் எனப் பெயரிட்டுள்ளார் கள். 7 வது ப்ரச்னம் 'அச்சித்ர' எனப் பெயருடையது இதில் பல கர்மாக்களுக்கு உதாரணமாக அக்னி ஹோத்ரம் முதல் ஸோமயாகம் வரை உள்ள ப்ர யோகங்களில் அந்தந்த இடத்தில் தேவைப்படு வதும், அங்கு படிக்கப்படாததுமான மந்த்ரங் களை ப்ரதிபாதனம் செய்கிறது. ஆங்காங்கு உள்ள இட வெளியை பூர்த்தி செய்வதால் இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரச்னத்திற்கு அச்சித்ரம் எனப் பெயர். 8, 9 ப்ரச்னங்கள் அச்வமேத ப்ராம்மணம் எனப்படும். இதன் மந்த்ரங்கள் ஸம்ஹிதா 7வது காண்டத்தில் வெகுவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதன் விளக்கத்தையும், மேலும் தேவையான பல விஷயங்களையும், தெளிவாகத் தெரிவிக்கின்றன. இவ்விதம் அத்யயன முறையில் உள்ள 9 ப்ரச்னங்களை ஸ்ரீ வித்யாரண்யர் பாஷ்யம் செய்து விளக்கியுள்ளார். இதற்கு மேல் பாஷ்ய முறையில் உள்ள 3 ப்ரச்னங்கள் அத்யயன முறையில் காடகம் எனச் சொல்லப்படுகிறது. அதற்கும் விளக்கம் தனியாகக் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது அஷ்டகம் முதல் ப்ரச்னம்— "अग्निर्नः पातु कृत्तिकाः" எனத் தொடங்கி 6 அனுவாகங்களில் 63 பஞ்சாதிகளையும் அடக்கிக் கொள்வதுடன் முதல் மூன்று அனுவாகங்களில் பின் வரும் 3 அனுவாகங்களில் விதிக்கப்படுகிற இஷ்டிகளில் ப்ரதான ஹோம மந்த்ரங்களை வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வாறு இந்த ப்ரச்னம் மந்த்ரபாகம், ப்ராம்மணபாகம் (விதி பாகம்) கலந்து காணப்படுவதுடன் நக்ஷத்ரஸத்ரம் (இஷ்டி) என்கிற ஒரு கர்மாவை நன்கு ப்ரதிபாதனம் செய்கிறது. இதில் (15+15+7) என 37 இஷ்டிகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதில் உள்ள மந்த்ரங்கள் நக்ஷத்ரேஷ்டியில் உபயோகப்படுவதாக இருந்தாலும் போதாயனர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிற உதக சாந்தியிலும் இந்த் மந்த்ரங்களை விநியோகம் செய்விக்கிறார். உலக வ்யவஹாரத்தில் அச்வினீ முதல் ரேவதி முடிய 27 நக்ஷத்ரங்களாலும், வேதத்தில்,

उपरिष्टादषाढानां अवस्ताच्छ्रोणायै ।।

என்று உத்திராஷாடத்தில் பின்பாதி, திருவோணத்தின் முன்பாதி சேர்ந்து "अभिजित्" என்கிற ஒரு நக்ஷத்ரம் அதிகமாகச் சொல்லப்படுகிறது. இது ஜ்யோதிச் சாஸ்த்ர ஸம்மதமாகவும் கருதப் படுகிறது. ஆக 28 நக்ஷத்ரங்களாகின்றன. க்ருஷ்ண யஜுர் வேதத்தில் நக்ஷத்ரங்கள் விஷய மாக வருகிற இடங்களில் க்ருத்திகை முதல் பரணி முடிய சொல்லப்படுகிறது. இதை இரு பாகமாக பிரிக்கப்படுகிறது.

"देवनक्षत्राणिवा अन्यानि, यमनक्षत्राण्यन्यानि"

என்ற தேவ நக்ஷத்ரங்கள் சில, யம நக்ஷத்ரங்கள் சில என்றும்,

"कृत्तिकाः प्रथमम्, विशाखे, उत्तमं तानि देव नक्षत्राणि"

என்றும், க்ருத்திகை முதல் விசாகம் முடிய தேவ நக்ஷத்ரங்கள் என்றும்,

"अनूराधाः प्रथमं, अपभरणीरुत्तमं तानि यम नक्षत्राणि" என்றும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுஷம் முதல் அபிஜித் சேர்த்து பரணீ முடிய யம நக்ஷத்ரங்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்விதமாக சொல்லப்பட்டுள்ள நக்ஷத்ரேஷ்டிகளில் க்ருத்திகை முதல் உள்ள 14 நக்ஷத்ரங்களுக்கும் பூர்ணிமா தேவதைக்கும் உண்டான ஹோமத்திற்கு முன்பு ஹோதா என்கிற ரித்விக்கினுல் படிக்கத் தகுந்ததும், ப்ரார்த்தனு ரூபமாகவும், அந்தந்த தேவதைகளின் மஹிமையை ப்ரதிபாதனம் செய்வதாயுள்ள மந்த்ரங்கள், முதல் அனுவாகத்தில் சொல்லப்படுகிறது. இவற்றை யாஜ்யா புரோனுவாக்யா என்று சொல்வார்கள். புரோனுவாக்யா என்பது ப்ரதான ஹோமத்திற்கு முன் ஹவிர்க்ரஹண ஸமயத்திலும் யாஜ்யா என்பது ஹோமத்திற்கு முன்பும் படிக்கத் தகுந்தது. அனேகமாக ஒவ்வொரு மந்த்ரங்களும் 4 வரிகள் உடையன. ஆதலால் இரண்டு மந்த்ரங்களுக்கும் 8 வாக்யங்கள் ஆவதால் இதை நக்ஷத்ர அஷ்ட வாக்யம் எனவும் வ்யவகரிக்கப்படுகிறது.

அனுவாக: १—अग्निर्नः पातु कृत्तिका

அக்னி தேவதை

1. முதல் 4 வாக்யங்கள் க்ருத்திகேஷ்டியில் புரோனுவாக்யா என்பது. "अग्निर्न......जुहोतन" க்ருத்திகை நக்ஷத்ரத்திற்கு தேவதையான அக்னியும், அம்பா, துலா, நிதத்னி, அப்ரயந்தீ, மேகயந்தீ, வர்ஷயந்தி சுபுணீகா என்கிற பெயர்களை உடைய 7 நக்ஷத்ரங்களும் நம்மை காப்பாற்ற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேணும். இந்த நக்ஷத்ரங்களும் அதன் தேவதை யும் ப்ரகாசிப்பதாகவும் சரீர பலத்தை கொடுப்ப வையாகவும் இருக்கட்டும். ஓ ரித்விக்குகளே! யஜமானனே! இந்த உயர்ந்த ஹவிஸ்ஸை (புரோடாசத்தை) இந்த தேவதையின் முகத்தில் அதாவது வாக்கில் ஹோமம் செய்யுங்கள். என்பது மந்த்ரார்த்தம். இது ஆரம்ப மந்த்ரம் பிரார்த்தனுருபமாக அமைந்துள்ளது. மங்களகர மானதாகும்.

2. க்ருத்திகேஷ்டியில் யாஜ்யா.

यस्य भान्ति . . . दधातु ॥

எந்த அக்னி தேவனுக்கு உட்பட்டதாக இவ்வளவு உலகமும், ஜீவராசிகளும் அமைந் துள்ளதோ, எந்த அக்னி தேவனின் (ஹவிஸ்ஸை உட்கொள்ளும் ஸமயம்) புகையும் ஜ்வாலைகளும் ப்ரகாசிக்கின்றனவோ அந்த தேவன் க்ருத்திகா தேவதைகளினுல் சூழப்பட்டவனுக சிருந்து கொண்டு எங்களை நன்ருக அனுஷ்டிக்கப்பட்ட கர்மாவின் ப்ரயோஜனத்தை உடையவர்களாக செய்யட்டும்.

3. ரோகிணீ—ரௌஹிணேஷ்டியின் புரோனு வாக்யா.

प्रजापते . . . सवीरा: ॥

தனது தேவதையை பரிபாலிக்கிற ரோகிணீ நக்ஷத்ரம், தன் ஸாமர்த்யத்தால் உண்டாகிற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பல உருவங்களோடு கூடியவளாகவும், பகுவித மான காந்திகளை உடையவளாகவும், இந்த ஹவிஸ்ஸை ஏற்றுக்கொண்டு நம்மை கர்ம பலத் துடன் ஸம்மந்தப்பட்டவர்களாய் செய்விப்ப துடன், அந்த தேவதா ப்ரஸாதத்தால் புத்ராதி ஸம்பத்துகளுடன் . பல ஸம்வத்ஸரங்கள் ஜீவித்திருப்போமாக.

4. याज्या—"रोहिणी. . . यज्ञम्"

இந்த ரோகிணீ நக்ஷத்ர ஸ்வரூபமானது கிழக்கு திக்கில் உதயம் அடைந்து உருவம் பெற்ற எல்லா எண்ணங்களையும் ஸபலமாகச் செய்தும், தனது தேவதையை இந்த சரு'ரூபமான (அன்னம்) ஹவிஸ்ஸால் த்ருப்தி செய்விப்பவளாக வும், தேவதைகளுக்கு ப்ரியமாகவும் இருந்து கொண்டு எங்களது யாகத்தை (இஷ்டியை) வந்து அடையட்டும்.

5. ம்ருகசீர்ஷ நக்ஷத்ர புரோனு வாக்யா.

सोमो राजा. . .दधातु"

தேவதை ஸோமன் எஜமானனை புத்ராதி ப்ரஜைகளுடன் கூடியவனாகச் செய்து தனது ஸ்தானமாகிற ம்ருகசீர்ஷ நக்ஷத்ரத்துடன் கூடியவனாக இந்த கர்மாவை வந்து அடை யட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

6. याज्या—"यत्ते...चतुष्पदे"

ப்ரகாசத்துடன் கூடிய ஏ ஸோமனே, (சந்திரனே) உனக்கு ப்ரியமானதாகவும் அதனுலேயே எல்லாவற்றிற்தும் ப்ரிய காரணமாகவும் உள்ளதுமான நக்ஷத்ர ஸ்வரூபத்திற்கு உனக்கு இந்த ஹவிஸ்ஸை தருகிறேன். அதை ஏற்றுக் கொண்டு என்னைச் சார்ந்த நான்கு கால் ப்ராணிகள், மனுஷ்யர்கள் இவர்களுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணவும்.

7. திருவாதிரை நக்ஷத்ரம் - தேவதை ருத்ரன். (புரோனு)

"आर्द्रया...वीरान्"

ருத்ரன் என்கிற தேவதை க்ரூரனுக இருப்பதால் இவ்வாறு வேண்டப்படுகிறது. இந்த தேவன் தனது நக்ஷத்ரமான 'திருவாதிரையுடன் சேர்ந்தவனுக இந்த இஷ்டியை அடைந்து என்னுல் தரப்படும் ஹவிர் பாகத்தை பெற்று தேவதா ஸமூகத்தில் உயர்ந்தவனுகவும் பசுக்களுக்கு ஸ்வாமியாகவும் रुद्रः पशूनां अधिपतिः இருந்து கொண்டு என்னைச் சேர்ந்த புத்ராதிகளையும் வேலைக்காரர்களையும் ஹிம்ஸிக்காமல் இருக்கட்டும்.

8. याज्या—हेती रुद्रस्य...अरातिम् ।

இந்த ருத்ரனுனவன் தனது நக்ஷத்ரத்துடன் கூடியவனுக எங்களது 'பாபங்களை நாசம் செ...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வதுடன், எங்களது பாபத்தை ப்ரகாசப்படுத்தும் சத்துருவை வெறுப்பவனாகவும், இருந்துக் கொண்டு இந்த ஹவிஸ்ஸை ஸ்வீகரிப்பதுடன் அவனது க்ரூரமான ஆயுதங்கள் எங்களை ஒரு பொழுதும் ஒரு இடத்திலும் ஹிம்ஸிக்காமல் இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

9. புனர்வஸு நக்ஷத்ரம் — தேவதை அதிதி (புரோனு)

"पुनर्नो. . . यजामः"

இந்த அதிதி தேவதை எங்களை தனது ப்ரிய சரீரங்களான புனர்வஸு நக்ஷத்ரங்களுடன் அடிக்கடி எங்களது கர்மாவிற்கு வருவதுடன், மற்ற தேவதைகளை வரச் செய்து எங்களை சந்தோஷப்படுத்துவதால் நாங்கள் அவளது ப்ரஸாதத்தால் அடிக்கடி அந்த தேவதைக்கு ஹவிஸ்ஸை கொடுத்து ஸந்தோஷப்படுத்துகிறோம்.

10. याज्या—"एवान. . .पाथः"

எங்களால் ஸமர்ப்பிக்கப்படும் ஹவிஸ்ஸினால் (சரு) பாபமற்றவளாகவும், நக்ஷத்ர ஸ்வரூபத்தை வ்ருத்தி செய்பவளாகவும், இவ்வுலகிலுள்ளவர்களை போஷிப்பதால் ஆதார பூதமானவளாகவும், இரு நக்ஷத்ர ஸ்வரூபத்துடன் கூடினவளாக இந்த ஹவிஸ்ஸை சந்தோஷமாக புஜிக்கட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

11. புஷ்ய நக்ஷத்ரம். தேவதை ப்ருஹஸ்பதி. (புரோனு)

"बृहस्पतिः . . . अस्तु"

புஷ்ய நக்ஷத்ரத்தில் பிறக்கும் தருவாயிலேயே ப்ரீதியுடையவனுன இந்த ப்ருஹஸ்பதிதேவன், தேவதைகளுக்குள் முதன்மையானவனுகவும், பிறரின் ஸைன்யங்களே ஜெயித்து ஜெயசீலனுக வும் இருப்பதால் அவரது ப்ரஸாதத்தால் எங்க ளுக்கு எல்லா திசையிலும் அபயம் ஏற்படட்டும்.

12. याज्या—"तिष्यः . . .स्याम्"

புஷ்ய நக்ஷத்திரத்தின் அருளால் பால்ய யௌவனுவஸ்தைகளில் காப்பாற்றப் பட்டவனுக வும், ப்ருஹஸ்பதியின் ப்ரஸாதத்தால் முதுமை யில் காப்பாற்றப்படுபவனுகவும், இவர்களின் அருளால் எங்களின் சத்ருபாதை நீங்கி பயமில் லாதவனுக எல்லாவித நல்ல குணங்களேயும் போஷிப்பவனுவேன்.

13. ஆயில்யம், ஸர்பம் என்கிற பெயர் உடைய தேவதை. (புரோ)

इदं + आगमिष्ठाः

ஸர்பம் என்கிற பெயருடைய தேவதைகள்' பூமியிலும், ஆகாயத்திலும் வசிப்பவர்களாகவும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தனது நக்ஷத்ர தேவதையை அனுஸரிப்பவர்களாகவும் எங்களது அழைப்பை ஏற்று இந்த இஷ்டி காலத்தில் வருபவர்களாக இருந்து கொண்டு இப்பொழுது ஸமர்ப்பிக்கப்படுகிற ப்ரியமான ஹவிஸ்ஸை ஏற்கட்டும்.

14. याज्या—"येरोचने... जुहोमि"

எந்த தேவதைகள் சூர்ய மண்டலத்தில் இருப்பவைகளாகவும், மூன்றுவது உலக தேவதையை அனுஸரிப்பவர்களாகவும், ஆச்லேஷா நக்ஷத்ர ஸ்வரூபங்களால் இஷ்டத்தை பூர்த்தி செய்விக்கின்றதோ, அந்த தேவதைகளின் பொருட்டு, நெய்யுடன் கலந்த கரம்பம் (யவை மாவு) என்கிற ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கிறோம்.

15. மகம், தேவதை பித்ருக்கள். (புரோ)

उपहूताः ...जुषन्ताम्"

மனதைப் போன்ற வேகத்தை உடையவர்களும், எந்தவித கார்யத்தையும் செய்வதில் வல்லவர்களும், செய்யும் கார்யம் நல்லவைகளாக இருக்கச் செய்பவர்களும், தனது நக்ஷத்ரமான மகா ஸம்மந்த கார்யங்களை நிமித்தமாகக் கொண்டு, ஸ்வதா என்கிற ஹவிஸ்ஸால் பரிசுத்தமான கர்மாவை எங்களது அழைப்பை ஏற்று வந்து அடையட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

16. याज्या—"ये अग्नि. . . जुषन्तां"

பித்ருக்கள் பகுப்ரகாரம். அவர்களில் எவர்கள் சாஸ்த்ர ஸம்மதமான அக்னி ஸம்ஸ்காரத்தால் பித்ருத்வம் அடைந்துள்ளார்களோ, எவர்கள் அவ்வித மில்லையோ, எவர்கள் புண்ய வசத்தால் தேவ லோகத்தில் வசிக்கிறார்களோ, எவர்களை நான் அறிவேனோ, எவர்கள் என்னால் அறியப் படாதவர்களோ இவ்வித எல்லா பித்ரு தேவதைகளும் இந்த மகா நக்ஷத்ர ஸம்மந்தமான இஷ்டியை வந்து அடைய பிரார்த்திக்கிறேன்.

17. பூர்வபல்குனீ (பூரம்) தேவதை அர்யமா. (புரோனு)

"गवां. . . संविशेम"

இடையூறுகளை போக்குபவனும் (வருண) எல்லா ஜீவராசிகளுக்கும் நல்லது செய்பவனும் (மித்ர) அழகு வாய்ந்தவனும் (சாரு) ஆன ஹே அர்யமா தேவதையே, நீ பசுக்களையும், இந்த நக்ஷத்ர தேகத்தையும் காப்பவனாகக் கொண்டு நல்ல ஜீவனத்தோடு இருக்கும் உன்னை வெகு காலம் ஜீவிக்க வேண்டிய தனதாதாவான உன்னை வந்து அடைகிறோம்.

18. याज्या—येनेमा . . . रोरवीति"

முதுமை அற்றவனாகவும், ஆனால் உயர்வை அடைபவனும் பசு போன்ற பூர்வ பல்குனீ நக்ஷத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரங்களுக்கு ரிஷபம் போன்றவனுமான எந்த உன் எண்ணத்தை எல்லா தேவர்களும் அனுஸரிக்கிறார்களோ, எந்த உன்னால் எல்லா பூதகணங்களும் ஜெயிக்கப்பட்டதோ அப்பேர்பட்ட நீ எனது க்ஷேமத்திற்காக தேவலோகத்தில் கர்ஜிக்கிறாய்.

19. உத்திரம் (உத்திரபல்குனீ) தேவதை பகன். (புரோ)

श्रेष्ठोदेवानां ... सन्नुदेह"

ऐश्वर्यस्य समस्तस्य धर्मस्य यशसः श्रियः ।

ज्ञान वैरोऽग्ययोश्चैव षण्णां भग इतीरणा ॥

தனம், தர்மம், பெருமை, காந்தீ, புத்தி, வைராக்யம் என்கிற ஆறும் எவரிடம் குறைவற்றதாக இருக்கிறதோ, அவர் பகன் என (भगवान्) சொல்லப்படுகிறது.

இப்பேற்பட்ட ஏ பக தேவதையே, நீ தேவர்களுக்குள் உயர்ந்தவனாக இருப்பதால் உன்னை இந்த நக்ஷத்ர தேகங்கள் ஸ்வாமியாக ஏற்றுக் கொண்டுள்ளது. உனது பெருமை உனக்குத் தான் நன்கு தெரியும். அப்பேர்பட்ட நீ இந்த யாகத்தில் (இஷ்டியில்) சிதராததும் வீரர்களான புத்ராதிகளோடும் உயர்ந்த குதிரைகள், கோமாதாக்களுடன் கூடினதுமான பலத்தை என்க்கு ஸமீபமாக இருக்கச் செய்வாயாக.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

20. याज्या—भगोह . . . मदेम ॥

முன் சொல்லப்பட்ட பக தேவதை தனதான்யங்களுக்கும், உயர்ந்த மணி முத்து இவைகளுக்கும் (தாதா) கொடுப்பவனாக இருக்கிறான். இவ்வித பெருமையுடைய பகன் உத்திரபல்குனீ நக்ஷத்திர தேகங்களுக்கு ஸ்வாமியாக ஆனான். அப்பேர்ப்பட்ட தேவனின் அனுமதியைப் பெற்று தேவதைகளின் சந்தோஷத்தை அடைவேனாக.

21. ஹஸ்தம்—தேவதை ஸவிதா. (புரோ)

"आयातु . . . अच्छ"

தங்கமயமானதும், நன்றாக ஓடுவதுமான ரதத்தில் ஹஸ்த நக்ஷத்ரத்துடன் கூடினவனாக இந்த ஸவிதா எனது கர்மாவில், எனக்கு மிக ஸமீபமாக வர ப்ரார்த்திக்கிறேன். ஸௌபாக்யம், மற்றும் அறியப்பட்ட கர்மாவோடு கூடியதும், வேண்டியதை வாரி வழங்குவதும், ஆசையை பூர்த்தி செய்விப்பதும், சுத்தம் செய்விப்பதும், எனக்கு எதிரில் இருப்பதுமாக ஹஸ்த நக்ஷத்ர தேகமானது இருக்கட்டும்.

22. याज्या—"हस्त . . . यज्ञम्"

ஹஸ்த நக்ஷத்திர ஸ்வரூபமானது அழிவற்றதும், மிக உயர்ந்ததுமான தனத்தை கொடுக்கட்டும். நான் அந்த தனத்தை வலது கையினால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெற்றுக் கொள்வேனாக. (இதிலிருந்து பெருவது எதையும் வலது கையினால் என்பது விளங்குகிறது.) ஸவிதா தேவன் எங்களுடைய இந்த இஷ்டியை ஹஸ்த நக்ஷத்திரத்திற்காக அனுமதிக்கிறான். அந்த ஸவிதா தனதாதாவாக இந்த இஷ்டியில் அறிகிறோம்.

23. சித்திரை தேவதை த்வஷ்டா. (புரோ)

“त्वष्टा. . . विश्वा”

தேவர்களையும், மனுஷ்யர்களையும் அவரவர்களது வினையை அனுஸரித்துள்ள ரூபத்தை உடையவர்களாகவும், அதுபோன்ற எல்லா ஜீவ ராசிகளையும் உண்டுசெய்பவனாக உள்ள த்வஷ்டா தேவன், நல்ல அங்கங்களை உடையவளாகவும் யௌவனாவஸ்தையுடையவளாகவும், ப்ரகாசிப்பவளுமான சித்ரா நக்ஷத்ர ஸ்வரூபத்துடன் ஒன்றாக கலந்து என்னை அனுக்ரஹிக்கட்டும்.

24. याज्या—“तन्नस्त्वष्टा. . यज्ञम्”

த்வஷ்டா தேவனும், சித்ரா நக்ஷத்ரமும் என்னுடைய தனாதிகளை நன்றாக வளர அனுக்ரஹிக்க வேணும். அது மேன்மேலும் வளர வேணும். சித்ரா நக்ஷத்ர ஸ்வரூபமானது வீரர்களான புத்ராதிகளை கொடுப்பதுடன் என்னைச் சார்ந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்த இஷ்டியை பசுக்களாலும், குதிரைகளாலும் கூடியதாக செய்யட்டும்.

25. ஸ்வாதீ—தேவதை வாயு. (புரோனு)

"वायुर्नक्षत्रं. . .अरातीः"

வாயு தேவன் தனது நக்ஷத்ரத்துடன் ஒன்று பட்டவனுகவும் தீட்டிய காந்தியை உடையவனும், வேண்டியதை தருபவனும், சப்திக்கிறவனுகவும் இருந்துகொண்டு ஜீவராசிகளே தனது ஸம்மந்தத்தால் அவரவர் கார்யத்தில் ஈடுபடச் செய்து கொண்டு எனது சத்ருக்களேயும், எனக்கு தர வேண்டியதை தராதவர்களேயும் வெகு தூரத்திற்கு விரட்டட்டும்.

26. याज्या—"तन्नोवायुः . . . विश्वा"

என் ப்ரார்த்தனேயை வாயு தேவனும், ஸ்வாதீ நக்ஷத்ர ஸ்வரூபமும் கேள்ப்பதுடன் எனக்கு அதிக தனத்தை அள்ளித்தரவேணும். எல்லா தேவர்களும் எனது ப்ரார்த்தனேயை அனுமதிப்பதுடன், என்னே பாபங்களிலிருந்து விடுபட்டவனுகச் செய்யட்டும்.

27. விசாகம்—தேவதை இந்த்ராக்னி. (புரோ)

"दूरमस्मत् . . . अस्तु"

என்னிடமிருந்து பயந்தவர்களாக எனது சத்ருக்கள் வெகுதூரம் செல்லட்டும். இதை இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நக்ஷத்ர தேகங்களும் தேவதைகளும் செய்யட்டும், எல்லா தேவர்களும் எனது இஷ்டியை அங்கீகரிக்கட்டும். இவர்களின் அனுக்ரஹத்தால் எல்லா பக்கங்களிலும் பயமற்றவனாக இருப்பேனாக.

28. யாஜ்யா—"नक्षत्राणी ... अरातिम्"

நக்ஷத்ரங்களுக்குள் இரு சிரத்தை உடைய விசாக நக்ஷத்ர தேகங்கள் எங்களை காப்பாற்றுபவர்களாகவும், உயர்ந்தவர்களான இந்த்ராக்னீ தேவர்கள் உலகத்தை ரக்ஷிப்பவர்களாகவும், எங்களது சத்ருக்களை பல திக்குகளில் ஓடச் செய்து ஹிம்ஸிப்பவர்களாகவும், எனது சிரத்துடன் இருக்கும் சத்ருவான பசியை போக்கட்டும்.

29. பூர்ணிமா—தேவதா இஷ்டியில் புரோனுவாக்யா

"पूर्णापश्चात्...मादयन्ताम्"

பூர்ணிமா திதியின் அதிதேவதையான எனக்கு முன்புறம், பின்புறம், நான் இருக்கும் இடம் இவைகளில் எனது சத்ருவை ஜெயித்து விரட்டட்டும். தேவதைகள் பூர்ணிமையில் ஒன்று சேர்ந்தவர்களாக இருந்து கொண்டு என்னை இங்கும், ஸ்வர்கத்திலும் சந்தோஷிக்கச் செய்யட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

30. याज्या—पृथ्वी यज्ञम

பூர்ணயாக வ்யாபித்தவளும, நல்ல ப்ரகாசத்தோடு கூடியவளும, என்றும யுவதியாகவும், எங்களுடன் ப்ரியமானவளும, அழகுள்ளவளும், கெட்டவழியில இருந்து ஜீவராசிகளை நல்வழியில் ஈடுபடுத்துபவளுமாக இந்த பூர்ணிமா தேவதை இந்த யஜமானனை என் பொருட்டு இந்த இஷ்டியை பூரணமான பலததை (ப்ரயோஜனத்தை) கொடுப்பதாகச் செய்யட்டும்.

இவ்விதம், தேவ நக்ஷத்ரங்களின் ப்ரதான யாக மந்த்ரங்களின் கருத்துக்கள் சொல்லப் பட்டது. மேலே யம நக்ஷத்ர மந்த்ரங்கள் விளக் கப்படுகிறது.

अनुवाक:—२ "ऋध्यास्महव्यैः . . . नमसोपसद्य"

31. அனுஷம். தேவதை மித்ரன் (புரோனு)
"ऋध्यास्म...सवीरा:"

எல்லா ஜீவராசிகளுக்கும் ஸ்நேகிதனை மித்ர தேவனை, நாங்கள் நமஸ்காரத்தினாலும், ஹவிர் பாகத்தினாலும், த்ருப்தி செய்வித்து அவனுடைய ப்ரஸாதத்தால், வீரர்களான புத்ராதி ஸம்பத்துக்களுடன் வெகு ஸம்வத்ஸரங்கள் ஜீவிப்போமாக. மித்ரதேவனின் பெருமையானது எங்களுக்கும் இருக்கட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

32. याज्या—"चित्रं नक्षत्रं . . . अन्तरिक्षे"

எந்த நக்ஷத்திரத்தை ஜனங்கள் அனுராதா என்று சொல்கிறார்களோ, அது கிழக்கு திக்கின் ஆச்சர்யகரமாக உதயம் அடைந்துள்ளது. விஸ்தீர்ணமானதும் தங்கமயமானதும் தேவர்கள் செல்வதற்கு யோக்யமானதுமான ஆகாய மார்க்கங்களினால் மித்ர தேவன் இந்த நக்ஷத்திரத்தை அடைகிறான்.

33. ஜ்யேஷ்டா (கேட்டை) தேவதை இந்திரன். (புரோ)

"इन्द्रो ज्ये . . . दुरिष्टिम्"

வ்ருத்ராசுரவதத்தை இந்திரன் எந்த ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்தில் செய்தானோ, எந்த நக்ஷத்திரத்திற்காக நாங்கள் உயர்ந்த ஹவிஸ்ஸை தயார் செய்து, கெட்ட வழியில் திருப்பும் பசியை தீர்க்கிறோமோ அந்த நக்ஷத்ரமான ஜேஷ்டையை இந்திரன் அனுஸரிக்கிறான். [பசியானது ஸரியாக அனுஷ்டிக்கப்படாத யாக பலனாக சொல்லப்படுகிறது. ஏனெனில் அதை ரொம்பவும் கொடூரமாக மஹாபாரதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஒருவனுக்கு கிழத்தன்மை கஷ்டத்தை அளிக்கவல்லது. அதைவிட கைவசம் உள்ள தனம் சிலவாவது. இதைவிட கஷ்டம் புத்ரனின் மறைவு, இவ்வளவையும் விட அதிக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கஷ்டம் பசியினுல் ஏற்படுவது என்கிறது பாரதம்]

34. याज्या—"पुरन्दराय ... लोकम्"

அசுரர்களின் நகரங்களை அழிப்பவனும், ஆசைகளை பூர்த்தி செய்பவனும், கடுமையாக உள்ளவனும், பிறரால் ஜெயிக்க முடியாதவனும், சத்ருக்களை விரட்டுபவனும், மழையை அவ்வப் போது பொழிபவனுமான இந்திரனின் பொருட்டு இனிமையான ஹவிஸ்ஸை ஸம்பாதிக்கும் ஜ்யேஷ்டா நக்ஷத்ர ஸ்வரூபமான இந்த யஜமான னின் பொருட்டு விஸ்தீர்ணமான ஸ்தானத்தை கொடுக்கட்டும்.

35. மூலம்—தேவதை ப்ரஜாபதி (புரோனு)

मूलंप्रजां ... सहुंम्"

மூல நக்ஷத்திரத்தை உபாஸித்து வீரர் களான புத்ர பௌத்ராதிகளை அடைவோம். இந் நக்ஷத்ரத்தின் பெருமையால் திரும்பிவராத மார்க்கத்தால் ராக்ஷஸ தேவதையான நிருருதி யானது திரும்பிப் பாராமல் செல்லட்டும். எஜமா னனுன என் பொருட்டு மூல நக்ஷத்ர ஸ்வரூப மானது பசு முதலான பல வஸ்துக்களுடன் சேர்ந்து இருந்து பகல் போல் ப்ரகாசிக்க ப்ரார்த் திக்கிறேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

36. याज्या—"अहर्नो...ब्रह्म्"

மூலம் என்று எந்த நக்ஷத்ரம் சொல்லப்படுகிறதோ அது இந்த இஷ்டியில் பகல் போல் ப்ரகாசித்துக் கொண்டு எங்களை இந்த இஷ்டியின் ப்ரயோஜனத்துடன் (பலம்) கூடினவர்களாக செய்யட்டும். இந்நக்ஷத்திரத்தின் வலிமையால் நான் வாக்கினாலேயே ராக்ஷஸ தேவதையை விரட்டுகிறேன, என் குழந்தைகளின் பொருட்டும், என்பொருட்டும் உயர்ந்த பெருமை ஏற்பட வேணும்.

37. பூர்வாஷாடம் (பூராடம்) தேவதை, அப் (ஜலதேவதை) (புரோ)

"यादिव्या...भवन्तु"

பூமி, ஆகாயம், மூன்ருவது உலகம் இவைகளில் குடிக்க இனிமையாக இருக்கும் தீர்த்தம், தனது நக்ஷத்ர தேகங்களால் ஆசைகளைப் பெற்று என் பொருட்டு வேண்டாததை அழிக்கவும், எனது சௌக்யத்திற்கு காரணமாகவும் இருக்க ப்ரார்த்திக்கிறேன். எங்கும் உள்ள நீர் எனக்கு அனுகூலமாக இருக்கட்டும் எனப் பொருள்.

38. பூர்வாஷாட

याज्या—"याश्च कूप्याः. . . भवन्तु"

கிணறு, நதீ, ஸமுத்ரம், சிறிய நதீ, பல இடங்களில் இருந்து பெருகி ஒன்று சேருவது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதலான ஜலங்களின் இனிமையான பாகத்தை பூர்வாஷாட நக்ஷத்ர தேகங்கள் அருந்துவதால் என் பொருட்டு அவைகள், நான் வெறுப்பதற்கு நாசத்தை உண்டு பண்ணுவதாகவும் எனது சுகத்திற்கு காரணமாகவும், இருக்க விரும்பு கிறேன்.

39. உத்திராஷாடம்— தேவதை விச்வேதேவர் கள், (புரோனு)

"तन्नो विश्वे. . . कल्पताम्

விச்வேதேவர்கள் எனது வேண்டுகோளை காது கொடுத்து கேழ்க்க வேணும், அது ஸமயம் உத்திராஷாட நக்ஷத்ர ஸ்வரூபங்கள் எனது இஷ்டியை வந்து அடைய வேணும். பசுக்களின் விஸ்தாரத்திற்காக இந்த நக்ஷத்ரம் ப்ரஸித்தி அடைந்து எஜமானனை என் பொருட்டு பயிர் தொழிலையும், அதற்கு மழையையும் அவ்வப் போது உண்டு பண்ணட்டும்.

40. याज्या—"शुभ्रा: . . . यज्ञम् "

சுத்தமானதுகளும், ப்ரகாசிப்பதாயும், என் றும் யுவதியாகவும், நல்ல அழகு வாய்ந்ததாயும் கார்யங்களை செய்வதில் ஸாமர்த்யமுள்ளவை களும், தைர்யசாலிகளும், தனது தேவதைகளான விச்வேதேவர்களை எங்களது ஹவிர்பாகத்தினுல் போஷிப்பவைகளாயும் உள்ள, ஸ்த்ரீ ரூபமான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உத்திராஷாட நக்ஷத்ர சரீரங்கள் விரும்பத் தகுந்த எனது இஷ்டியை வந்து அடைய ப்ரார்த் திக்கிறேன்.

41. அபிஜித் நக்ஷத்ரம்—தேவதை "ப்ரம்மா" (புரோனு)

"यस्मिन् ... मानम् "

எந்த நக்ஷத்ர வேளையில் (அதாவது உத்திரா ஷாடம் பின்பாதி திருவோணம் முன்பாதி சேர்ந் துள்ள காலம்) ப்ரம்மாவானவர் பூமி முதலான தும், ஸ்வர்க்காதி லோகங்களையும் ஜெயித்து வெற்றி பெற்ருரோ, அந்த அபிஜித் நக்ஷத்ர மானது, எனது சத்ருக்களின் பொருட்களை எனக் காக ஸம்பாதித்து அவர்கள் திரும்பிப் பெறமுடி யாமல் செய்து, என்னிடத்தில் இருக்கச் செய் யட்டும்.

42· याज्या—"उभौ लोकौ ... कामम् "

எந்த நக்ஷத்ர வேளையில் ப்ரம்மாவானவர் பூமி, ஆகாயம் இரு உலகத்தையும் ஜெயித்தாரோ (புராண ப்ரஸித்தம்) அந்த நக்ஷத்ரமானது என்னை தேவதைகளின் மத்யத்தில் ப்ரகாசப்படுத் தட்டும், ப்ரம்மா போல் நாங்களும் எங்களது சத்ரு ஸேனைகளை அந்த வேளையில் ஜெயிக் கிறோம். எல்லா தேவர்களும் எங்களது ஆசை களை அங்கீகாரம் செய்ய வேண்டும். (ஏற்றுக் கொள்ள வேணும்).

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

43. திருவோணம். தேவதை விஷ்ணு (புரோனு)

"शृण्वन्ति . . . यजामः"

அழிவற்றதாக கர்ம பலத்தை காப்பதா திருவோண நக்ஷத்ர ஸ்வரூபத்தை எல்லோரும் கேட்டு அறிவதுபோல் நானும் அந்த நக்ஷத்ரத் தின் பெருமையான வார்த்தையை கேழ்ப்போனு வும், குணத்தினுல் உயர்ந்ததும், நன்கு ப்ரகாசிப் பதும், தனது தேவதையான விஷ்ணுவை காப் பாற்றுபவனும், மூன்றுவித தாபமற்றதும் எங்களை நோக்கி இருப்பதுமான, இந்த ச்ரவண நக்ஷத்ர ஸ்வரூபத்தை ஹவிர்பாகத்தால் த்ருப்தி செய்விக்கிறோம்.

44. श्रोणा—"त्रेधा . . . कृण्वती"

இம்மந்த்ரம் த்ரிவிக்ரமாவதாரத்தை தெளிவு படுத்துகிறது. தனது மூன்று காலடிகளால் மூன்று உலகத்தை அளந்த ஸ்ரீ மஹாவிஷ்ணு வின் ஸ்வரூபத்தை, தேவர்களால் பெரிதும் துதிக்கப்படுவதை, திருவோண நக்ஷத்ர ஸ்வரூ மானது, பெருமையை விரும்புவதும், எஜமான னின் பொருட்டு மாசற்ற பெருமையை கொடுப் வளாகக் கொண்டு அடைகிருள். (ஸ்த்ரீ ரூப மானவள்,)

45. அவிட்டம், தேவதைகள் எட்டு வஸுக்கள் (புரோனு)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

"अष्टौ . . . स्वस्ति"

அழகான உருவம் கொண்ட எட்டு வஸுக்களும், அவிட்ட நக்ஷத்ரங்களின் நான்கு ஸ்வரூபங்களும் சேர்ந்து எனது இஷ்டியை காப்பாற்றட்டும். அந்த உருவங்கள் ப்ரகாசத்தோடும், முதுமை அற்றவைகளாகவும் இருக்கின்றன. ரஜோ குணத்தை உடைய மனுஷ்ய லோகத்திற்கு மேலே உள்ளதும், ஸம்வத்ஸர தேவதையை உடையதும் நாசமற்றதுமான ஸ்வர்க்க லோகத்தை இடையூறு இல்லாமல் அடைவேனாக.

46. याज्या—"पुरं स...वारान्"

எட்டு வஸுக்களும் கிழக்கு திக்கில் எனது கர்மாவை ரக்ஷிக்கட்டும். அவிட்ட நக்ஷத்ர மூர்த்திகள் தெற்கு திக்கில் எனக்கு நேராக இருந்து வரட்டும். நாங்கள் இந்த நக்ஷத்ர மூர்த்திகளை நேரிடையாக பூஜிக்கிறோம். எங்களது பாபத்தை வெளிப்படுத்தும் சத்ரு இங்கு வரவேண்டாம்,

47. சதயம்—தேவதை வருணன் (புரோனு)

"क्षत्रस्य...घ्नन्तः"

க்ஷத்திரிய (அரசர்) குலத்திற்கு அரசனான வருண தேவதை நக்ஷத்ரங்களுக்குள் மற்றோரை வஸிக்கச் செய்யும் சதபிஷக் மூர்த்தி. இவ்விருவரும் சேர்ந்து தேவதைகளுக்கு அவ்வப்போது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹவிர்பாகத்தை கொடுப்பதற்காகவே எனக்கு அதிகமான ஆயுஸ்ஸையும் அதற்கு வேண்டிய ஆயிரக்கணக்கான மூலிகைகளையும் தரட்டும்.

48. यांज्या—यज्ञं सो...भेषजानि''

தேவதையான வருணன் என் இஷ்டிக்கு வர வேணும். எல்லா தேவர்களும் கூட இந்த இஷ்டியை வந்து அடைய வேணும். அன்புடன் கூடிய சதய நக்ஷத்ரம் (மூர்த்தி) எனக்கு அதிகமான ஆயுஸ்ஸையும், அதற்குண்டான ஒஷதிகளையும் தரவேணும்.

49. பூர்வப்ரோஷ்டபதா (பூரட்டாதி) தேவதை அஜஏகபாத் (புரோனு)

"अजएकपात्_गोपाः"

அஜஏகபாத் என்கிற அக்னி மூர்த்தியானது ஆதித்ய உருவத்துடன் கிழக்கு திக்கில் உதயமாகிறான். இதனால் எல்லா ஜீவர்களையும் தனித்தனியாக சந்தோஷப்படுத்துகிறான். இப்பேர்ப்பட்ட ஸூரியனின் ப்ரேரணையை எல்லா தேவர்களும் அடைகிறார்கள். பூர்வப்ரோஷ்டபதா நக்ஷத்ர மூர்த்திகள் நாசமற்ற கர்ம பலத்திற்கு காப்பாளர்களாவார்கள்.

50. याज्या—"विभ्राजमान...यन्तिसर्वे"

நன்கு ப்ரகாசிக்கிறவனும், மற்றவைகளையும் ப்ரகாசிக்கச் செய்பவனும், கொடுமையான ரச்மி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களை உடையவனுமான அஜஏகபாத் என்கிற அக்னிமூர்த்தி ஆதித்யனுகி ஆகாயத்தை அடைந்தான். இவ்விதமான தேவனை பூர்வ ப்ரோஷ்டபதா நக்ஷத்ர மூர்த்திகள் அனுஸரிக்கின்றன.

51. உத்திரப்ரோஷ்டபதா — (உத்திரட்டாதி)
தேவதை அஹிர்புத்னியன் (புரோ)

"अहि... सर्वे"

ஸ்ரீ ருத்ரமூர்த்திகளின் ஒருவர் அஹிர்புத்னியன். இது காரணப் பெயர். அஹி: என்கிற சொல் குறைவற்ற ஸ்வபாவத்தையும், ஆதி ஸ்ருஷ்டியில் உண்டானவர் என்பதை புத்னிய: என்கிற சொல்லும் தெளிவுபடுத்துகிறது. இவர் தனது சக்தியினுல் உலகம் முழுவதும் வ்யாபித்துள்ளார். இவ்விதம் உள்ளதால், இவர் தேவர்களுக்குள்ளும், மனிதர்களுக்கும் உயர்ந்தவர். இவரை ஸோமபானம் செய்யும் ப்ராம்மணேத்தமர்களும் உத்திரப்ரோஷ்டபதா நக்ஷத்ர தேகங்களும் பூஜிக்கிருர்கள்.

52. याज्या—"चत्वार... उपसद्य"

4 உருவங்களை உடைய உத்திரப்ரோஷ்டபதா நக்ஷத்ரமானது. இந்த இஷ்டியை எனது க்ஷேமத்திற்காக வந்து அடைவதுடன் அஹிர்புத்னிய ரூபத்தையும் நமஸ்கரித்து ஸ்தோத்திரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்கின்றன. ஊனமான அங்கமுள்ள தேவன் அஹிர் புத்னியன்.

53. ரேவதீ—தேவதை பூஷா (புரோனு)

"पूषारेवती. . ."

சரீர பலத்தை காப்பவர்களும், பசுக்களை காப்பவர்களும், அன்னத்தால் ஏற்படும் பலத்தை உடையவரும், சுத்தமான இந்த ஹவிஸ்ஸை உண்பவர்களும், எனது இஷ்டியை நல்ல மார்க்கத்தால் வந்து அடைபவர்களுமாக ரேவதீ நக்ஷத்ரமும், அதன் தேவதையான பூஷாவும் உள்ளனர்.

54. याज्या—"शुद्धान्...पशून्"

ரேவதீ நக்ஷத்ர ஸ்வருபமானது எனது கன்றுகளை காக்கட்டும். பூஷா தேவன் எனது பசுக்களை ரக்ஷிக்கட்டும் குதிரைகளையும்கூட, இவ்விருவர்களும், நெல், யவை, கோதுமை போன்ற நாநாவிதமான தான்யங்களை கொடுக்கவல்ல இந்த இஷ்டியை அனுஷ்டிக்கும்படி செய்ய வேணும்.

'55. அச்வினி—தேவதை அச்வினௌ (புரோ)

''तदश्विनौ. . . श्मवतौ''

அச்வயுக் என்கிற நக்ஷத்திரத்துடன் கூடின அச்வினீ தேவதைகள், நன்கு பழக்கப்பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குதிரைகளால் வருபவர்களாகவும், மதுரமான ஹவிஸ்ஸால் நக்ஷத்ர ஸ்வரூபத்தை த்ருப்தி செய்விக்கிறவர்களும், மந்திரங்களால் ப்ரகாசிப்பவர்களுமாக இருந்து கொண்டு இந்த இஷ்டியை வந்து அடைய வேண்டுகிறேன்.

56. याज्या—"यौ देवानां... अश्वयुग्भ्याम्

தேவ வைத்யர்களும், ஹவிஸ்ஸை (மருந்தாக) அவரவர்களுக்கு கொடுப்பவர்களும், ஜகத்திற்கு தூதர்கள் போன்றவர்களும், நாசமற்ற கர்ம பலத்தை காப்பவர்களும், தனது நக்ஷத்ர சரீரங்களை போஷிப்பவர்களுமான அச்வினீ தேவதைகளுக்கும், நக்ஷத்ர ஸ்வரூபத்திற்கும் நமஸ்காரத்தை தெரிவிக்கிறோம்.

57. அப பரணீ—தேவதை யமன் (புரோ)

"अपपाप्मानं .. कृणोतु"

அபபரணீ நக்ஷத்ர ஸ்வரூபமானது எனது பாபங்களை நசிக்கச் செய்யட்டும். ப்ரகாசிக்கின்ற யமன் இந்நக்ஷத்ரத்தை அனுக்ரஹிக்கட்டும். எதனால் எல்லா உலகத்திற்கும் தர்மராஜாவாக இருக்கிறாரோ அதனால் நான் செல்லும் மார்க்கத்தை பயமற்றதாகவும், செல்வதற்கு அருகதையாகவும் செய்ய வேண்டுகிறேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

58. याज्या—"यस्मिन् . . . भरन्तु"

அபபரணீ நக்ஷத்திரத்தை நிமித்தமாகக் கொண்டு யமன் யாகத்தை குறித்துச் செல்கிருன், தேவர்கள் அபபரணீ நக்ஷத்ரத்திற்கு தேவதையாக இருக்கச் செய்தார்கள். இந்த அபபரணீ நக்ஷத்ரம் குறித்து ஹவிர்பாகத்தை கொடுக்கிறோம். எனது பாபங்களை நசிக்கச் செய்யட்டும்

59. அமாவாஸ்யா—தேவதா புரோனுவாக்யா

"निवेशनी.. संविधाना"

உயர்ந்த க்ருஹங்களில், ஆயிரம், லக்ஷம் என்கிற ரீதியில் மணி, முத்து போன்ற விலையுயர்ந்த பொருட்களை அபிவ்ருத்தி செய்து சரீர புஷ்டியையும் கொடுத்து, மேன்மேலும் தனாபிவ்ருத்தியை செய்பவளான அமாவாஸ்யா திதி அபிமான தேவதையானது எங்களைக் குறித்து வந்து எங்களை வாழவைக்க ப்ரார்த்திக்கிறேன்.

60. याज्या—"यत्ते देवा . . . सुवीरम् "

எந்தக் காரணத்தால் எல்லா தேவதைகளும் அந்தந்த ஸமயத்தில் ஹவிர்பாகத்தை அடைகிருர்களோ, எந்த மஹிமையால் எனது அனிஷ்டத்தை போக்குகிருயோ, அவ்வித ஸௌபாக்ய மஹிமையை உடைய நீ எனக்கு தனஸம்ருத்தியையும், புத்ராதி ஸம்பத்தையும் கொடுத்து இந்த இஷ்டியை பூர்ண ப்ரயோஜனம் உள்ளதாகச் செய்வாயாக.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவ்விதம் வ்யவஹாரத்தில் உள்ள 28 நக்ஷத்ரங்களின் இஷ்டி மந்த்ரங்களுக்கு பொருள் கூறப்பட்டது இனி இப் ப்ரச்னத்தின் ரீதி அனுவாகத்தில் விதிக்கப்படுகிற சாந்த்ரமஸீ முதலான 7 இஷ்டிகளின் மந்த்ரங்களின் பொருள் கூறப்படுகிறது.

अनुवाकः ३—"नवो नवो भवति"

இதில் சாந்த்ரமஸ்யாதி இஷ்டிகளுக்குண்டான யாஜ்யா புரோனுவாக்யா மந்த்ரங்களுடன் வேறு சாகையில் சொல்லப்பட்டதும், போதாயன மஹர்ஷியால் ஒவ்வொரு இஷ்டியிலும் சேர்த்து அனுஷ்டிக்கத் தகுந்ததாகக் கூறப்பட்ட அக்னி, அனுமதி தேவதைகளைக் கொண்ட இரண்டு ப்ரதான யாகத்தின் மந்த்ரங்கள். அது போன்று 37 இஷ்டிகளிலும் ஸ்விஷ்டக்ருத். ஹோம மந்த்ரங்களும் வ்யாக்யானம் செய்யப் படுகிறது. இவைகளில் சில மந்த்ரங்களின் ஆரம்ப பதங்கள் சிலவற்றால் கூறப்படுகிறது, சில மந்த்ரங்கள் பூர்ணமாகச் சொல்லப்பட்டுள்ளன. ஆரம்பப் பதங்கள் சிலவற்றால் சொல்லப் படுவதற்கு ப்ரதீக க்ரஹணம் எனச் சொல்வார்கள். இதில் 20 மந்த்ரங்கள் உள்ளன. 14 மந்த்ரங்களுக்கு ப்ரதீக க்ரஹணம் செய்யப்பட்டுள்ளது.

61. சந்த்ரனை தேவதையாக உடைய இஷ்டி. (புரோனு)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

''नवो नवो. . . आयुः''

இவ்விரண்டு மந்த்ரங்களும் கப ரோகத்தால் பீடிக்கப்பட்டவன் அனுஷ்டிக்க வேண்டிய இஷ்டி மந்த்ரங்கள். இதை ரிஷி, சந்தஸ், தேவதைகளை நினைத்து ஜபித்தால் அல்லது அந்த ''आदित्येष्टिः'' ஐ அனுஷ்டித்தால் மஹாரோகமானது தீருகிறது. அவ்விரண்டு மந்த்ரங்களை தேவதா ப்ரகாசமாக இருப்பதால் இங்கும் விநியோகிக்கப்படுகிறது.

சந்திரன் சுக்லபக்ஷத்தில் அன்றுடம் வ்ருத்தியாலும், க்ருஷ்ண பக்ஷத்தில் அதாவது (தேய்பிறையில்) குறைவதாலும் புதியவனாகத் தெரிகிறான். இதுபோன்று சூரியனும் சந்திரனுக்கு தனது ரச்மிகளால் ப்ரகாசத்தை கொடுத்தும், மறைத்தும் செய்வதால் அன்றுடம் புதுமையாகத் தெரிகிறான். ஸூரியனுக்கு மண்டலத்தில் குறைவு, வ்ருத்தி இல்லாவிடினும், உத்திராயண, தக்ஷிணாயன காலங்களில் தனது ப்ரகாசத்தின் வெப்பத்தின் அதிகம், குறைவினால் புதுமையாகத் தெரிகிறான். இந்த ஸூரியன், பகல்களுக்கு கொடிபோன்று அடையாளமுள்ளவன். மேலும் ப்ரதிதினம் உஷக்காலத்தில் கிழக்கே உதயம் ஆவதால் அதைக் கண்டு அக்னி ஹோத்ரத்தை அனுஷ்டித்து தேவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுப்பதற்கு காரணமாகிறான். இவ்விதமான ஸூர்யன் இந்த இஷ்டிமூலம் அதிகமான ஆயுஸ்ஸை கொடுக்க பிரார்த்திக்கிறேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

62. याज्या—"यमांदित्याः . . :गोपाः"

சாஸ்த்ர ரீதியில் அமாவாஸ்யை அன்று சந்திரனின் 1 கலை மிகுதி உள்ளதாகத் தெரிகிறது. அதை சுக்ல பக்ஷத்தில் (வளர்பிறையில்) தனது கிரணங்களின் சக்தியால் தினம் ஒரு கலை அதிகமாகவும், க்ருஷ்ணபக்ஷத்தில் (தேய்பிறையில்) தினம் ஒரு கலையை தேவர்கள் சாப்பிடுவதால் குறையவும் செய்கிறார்கள், ஆதித்ய மூர்த்திகள். இதையே "प्रथमां पिवते वह्निः" என்கிற உபநிஷத் வாக்யம் சொல்கிறது. இவ்விதமான சந்திரனும், ஸோமராஜன், வருணன், ப்ருஹஸ்பதி இதுபோன்ற உலகத்தை காக்கும் தேவர்களும் ரோகத்துடன் கூடின எங்களை வ்யாதியைப் போக்கி அரோக த்ருடகாத்ரர்களாக செய்ய வேண்டும்.

63. அஹோராத்ர தேவதைகளையுடைய இஷ்டி (புரோனு)

"द्वे विरूपे. . .एतम्"

பகல், இரவு என்பது வெளிச்சமும், இருட்டும், இது போன்று விபரீதமான குணங்களை உடையதானாலும், ஒரேவிதமான எண்ணத்தை உடையவர்களாக அபிமான தேவதைகள் இருப்பதுடன், ஒரு மனிதனை இரண்டு கலர் கொண்ட வஸ்த்ரம் எவ்விதம் சரீரத்தை மறைக்கிறதோ, அதுபோல் உலகத்தை தங்களது ஸ்வரூபத்தால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூடுபவர்களாகவும், ஒரே தினுஸான விஸ்தார மான ஸம்வதஸர காலம இந்த இஷ்டியை பெரிதுபடுததுகிறவாகளாகவும, வயாபிததவர் களாகவும' சகதமான்களாகவும, அனுபவிகக் தகுந்தவர்களாகவும உள்ள இந்த அஹோராத் தேவதைகளை நான் கூப்பிடுகிறேன். எனது அழைப்பிற்கிணங்கி இந்த இஷ்டி நடககும ஸமயம அவச்யம வர ப்ராாததககிறேன.

64. याज्या—"वय. . .गमेम"

இஷ்டியை அனுஷ்டிக்கும் நாங்கள் மந்த்ரங் களுடன் ஒருமைப்பட்டு ரத்னம்போல் உயர்ந் ஹவிஸ்ஸினால் தேவர்களினால் அளிக்கத்தகு தது, இந்த தேவதைகளை வ்ருத்தி செய்பவ களாகி எங்களது கடுமையான பாபத்தை கடந்து இந்த இஷ்டியினால் க்ஷேமத்தை அடை கிறோம்.

65. உஷா என்கிற தேவதையுடைய இஷ்டியில் (புரோனு)

"प्रत्युव. . . चक्षुषा"

இந்த உஷா என்கிற தேவதை ப்ரதிதின வருபவரையும், தனது வருகையால் விடியு காலையை உண்டுபண்ணுபவளாகவும், இதனு த்யுலோகத்தின் பெண் போன்றவளாகவு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எல்லா ப்ரஜைகளுக்கும் பெரும் உபகாரத்தை செய்பவளாகவும், எல்லோராலும் காணப்படுவளாக தனது ப்ரகாசத்தால் எங்களது இந்த இஷ்டியையும் ப்ரகாசப்படுத்துகிறாள்,

66. याज्या—"तमो...सूर्यस्य च"

எல்லோரையும் தூக்கத்தில் இருந்து எழுப்பி தனது கார்யங்களால் ஈடுபடுச் செய்கிறவரும், இருட்டில் இருந்த உலகத்தை ப்ரகாசத்தோடு சேர்ப்பவரும், தானும், ஸூர்ய ரச்மிகளும் ஒரே ஸமயம் உலகத்தை வ்யாபிப்பதால், மாலையில் நக்ஷத்ரம் உதிப்பதுபோல் பகலை உண்டு பண்ணுகிறாய்.

67. நக்ஷத்ரத்தை தேவதையாக உடைய இஷ்டி (புரோனு)

"संभक्ते ... आगमत्"

பூஜையை உடையதும், ப்ரகாசமான கிரணங்களை உடையதும், சரீர காந்தியை உடையதும், எல்லோராலும் பார்க்கத் தகுந்ததாயும் உள்ள இந்த நக்ஷத்ர ஸ்வரூபமானது இந்த இஷ்டியை வந்தடைந்து எங்களால் கொடுக்கப்படும் ருசிகரமான ஹவிர்பாகத்தை பெற வேணும்.

68. याज्या—'प्रनक्षत्राय...वीरवत्तमम्'

நக்ஷத்ரம் என்கிற பெயருடைய இந்த தேவதையின் பொருட்டு அம்ருதத்திற்கு ஒப்பான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹவிஸ்ஸை கொடுக்கிறோம். அவர் ஐச்வர்ய முதலான குணங்களுடன் இந்த கர்மாவை செ விக்கச் செய்து எங்களுக்கு சரீர புஷ்டியையும் சூரர்களான புத்ராதிகளையும், பெரும் தனத்தை யும் தரவேணும்.

69. ஸூர்ய தேவதையுடைய இஷ்டி (புரோனு)

"उदुत्यं ... सूर्यं"

எல்லா உலகத்திற்கு தெரிய வேண்டு என்று, ரச்மிகள் ஸூர்யனை மிகவும் உயர்ந் ப்ரதேசத்தில் (ஆகாயத்தில்) அக்னி போ ப்ரகாசமுடையவனுகச் செய்கின்றன.

70. याज्या—"चित्तं...तस्थुषश्च"

வெளுப்பு, சிகப்பு என்கிற பலவித வர்ண களை உடைய கிரணங்களை ஸேனை போன் வனுய்க் கொண்டு எல்லோராலும் பார்க்க த்குந்தவனுகி, மித்ரன், வருணன், அக்னி இன் போன்ற எல்லோருக்கும், கண் அதிபதி தேவ யாகி, ஊர்ந்து செல்வதும், இடத்தைவிட்டு அசை யாத்துமான ஸர்வ ப்ராணிகளுக்கும், உயி போன்றவனுக உலகத்தை வ்யாபித்துள்ளான்.

71. அதிதி (பூமி) தேவதை இஷ்டி (புரோனு)

"अदितिर्नः... अंहसः"

பூமி தேவதையானது எங்களை சத்ருக்க டமிருந்து காப்பாற்றட்டும். சுகத்தை கொடு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நட்டும், பாபங்களில் இருந்து விடுபட்டவனாகச் செய்ய வேண்டும்.

72. யாஜ்யா—"மஹீமூஷு ... ஸுப்ரணீதிம்"

பெருமை வாய்ந்தவளும், நல்ல கர்மாவை செய்கிறவர்களுக்கு தாயாரைப் போன்று நல்லதைச் செய்பவளும், ஸத்யத்தை காப்பவளும், பல் அரசர்களால் ஆளப்பட்டவளும், முதுமை அற்றவளும், பெரும் விசால ப்ரதேசமாக இருப்பவளும், நல்ல சுகத்தை கொடுப்பவளும், ச்ரமமில்லாமல் கார்யத்தை செய்விப்பவளுமாக உள்ள இந்த அதிதி (பூமி) தேவதையை எங்களது ரக்ஷணத்திற்காக கூப்பிடுகிறோம்.

73. விஷ்ணு தேவதை இஷ்டி (புரோனு)

"இதம்விஷ்ணு...பாம்ஸுரே"

மஹாவிஷ்ணுவானவர் தனது த்ரிவிக்ரமாவதாரத்தால் பூமியை ஒரு அடியாகவும், பாதத்தின் அளவு ஆகாயத்தை இரண்டாவதாகவும், ஸ்வர்க்கத்தை மூன்றாவதாகவும் அளந்தால் உலகம் முழுவதும் அவரது பாதத்திற்குள் உள்ளதாக ஆகிறது. இவ்விதம் மஹிமை உடையவர்

இந்த மந்த்ரமானது எந்த கர்மாவிலும், ஏதாவது தவறு ஏற்படின் அதற்கு ப்ராயச்சித்தமாக உச்சரிக்கப்படுகிறது. ஸ்ரீ மஹாவிஷ்ணு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வின் ஸ்மரணத்தரல் யாவும் பூர்ணமாகிறது என்பது பொருள்,

74. याज्या—"प्रतद्विष्णुः . . . विश्वा"

எஜமானனுக்கு வீர்யம் ஏற்பட மஹாவிஷ்ணு துதிக்கப்படுகிருர். பூமியில் இருக்கும் பயங்கரமான சிம்மமானது எவ்விதம் உயரே தாவி மலை மேல் இருக்கிறதோ, அதுபோன்று முதலில் சிறிய உருவம் எடுத்து (வாமனாவதாரம்) பிறகு எல்லா உலகத்தை தனது காலின் அடிக்கே போருமல் அளந்தாரோ அந்த மஹாவிஷ்ணுவின் பெருமை ரொம்பவும் உயர்ந்ததாகும்.

75. வேறு வேதத்தில் செய்யச் சொல்லப்பட்டதும் இந்த 37 இஷ்டிகளிலும் அனுஷ்டிக்கத் தகுந்ததும், அக்னி தேவதாகமான யாக்த்தில் புரோனுவாக்யா.

"अग्निः मूर्धा . . जिन्वति"

இந்த அக்னிதேவதை ஸூர்யனாகி, த்யுலோகத்திற்கு சிரஸ் போலும், பூலோகத்தில் எரிப்பது சமயல் போன்ற கார்யங்களினுல் காப்பவனுகவும் தண்ணீரை காரணமாக உடைய ஸகல ஜீவராசிகளுக்கும் வயிற்றில் இருக்கும் அக்னியாகவும் ஆகி எல்லோரையும் சந்தோஷப்படுத்துகிருன் (ஹவிஸ் அஷ்டாகபால புரோடாசம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

76. याज्या—"भुवो ... वाहम्"

அக்னி பகவான் பூலோகத்திற்கும், அங்கு செய்யப்படுகிற யக்ஞத்திற்கும், அதற்குக் காரணமான ரஜோ குணத்திற்கும் நிர்வாகி ஆகிருன். ஏ அக்னியே, ஸூர்யனுக ஆகி அவனுடைய ரதத்தில் பூட்டப்படுகிற உயர்ந்த ஜாதி குதிரைகளுடன் ஒன்ருகி த்யுலோகத்தில் தலை போன்று உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கிருய், அந்த சிரஸ் ஸ்வர்க்கத்தில் இருப்பது போன்றதாகும். ஏ அக்னியே, இந்த கர்மாவில் ஹவிஸ்ஸை வகிக்கும் ஜ்வாலைகளை உண்டு பண்ணுகிருய்.

77. எல்லா நக்ஷத்ரயாகத்துடன் அனுஷ்டிக்க வேண்டியதும், வேறுசாகையில் சொல்லப் பட்டதும், அனுமதி தேவதை யாகத்தின் (புரோனு)

"अनुनो ... मयः"

ஹவிஸ் சரு அன்னம்

அனுமதி என்கிற இந்த தேவதை எங்களால் செய்யப்படும் இந்த இஷ்டியை தேவர்களின் முன்னிலையில் கொண்டாடட்டும். ஹவிஸ்ஸை வகிக்கும் இந்த அக்னியும் யஜமானனின் பொருட்டு, சுகத்தை தர எண்ணட்டும்.

78. यज्या—"अन्विदनुमते ... तारिष:"

அனுமதி தேவதையே, இந்த யாகத்தை ஏற்றுக்கொள், எங்களுக்கு சுகத்தைச்செய், இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகத்தில் ப்ரியமுள்ளவளாக இரு. எங்களது ஆயுஸ்ஸை விஸ்தாரமாகச் செய்.
போதாயன ஸூத்ரம்—

आग्नेयमष्टाकपालं अनुमत्यैचरुं" इति सर्वत्र अनु-षजति

79. எல்லா இஷ்டிகளிலும் (37) ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்கு (புரோனு)

"हव्यवाहं . . . आहुवेम"

எல்லா தேவதைகளுக்கும் கொடுப்பதற்காக ஹவிஸ்ஸை வகிப்பவரும், பாபத்தை போக்குபவரும், ராக்ஷஸர்களை கொல்பவரும், எதிர் ஸேனையை ஜெயிப்பவரும், ஜ்வாலையால் ப்ரகாசிப்பவரும், அது இல்லாமலும் ப்ரகாசிப்பவரும், கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஆஹவநீயம் போன்ற பல இடங்களில் இருப்பவரும், எங்களது கர்மாவை குறைவற்றதாகச் செய்பவரும், நல்லதாகச் செய்பவருமான அக்னியை அழைக்கிறோம்.

80. याज्या—"स्विष्टमग्ने . . . आयुः"

ஏ அக்னியே! இந்த ஹவிஸ்ஸை குற்றமற்றதாகச் செய்து காப்பாயாக, என்னுடைய சத்ரு ஸேனைகளை சுற்றிலும் விரட்டி அடி. எங்களுக்கு நல்லதும், உயர்ந்ததுமான மார்க்கத்தை உபதேசம் செய். நன்கு ப்ரகாசத்தோடும், முதுமை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அற்றதுமான தீர்க்கமான ஆயுஸ்ஸை எங்களுக்கு கொடுப்பதினால் ப்ரகாசிப்பாயாக.

बोधायनसूत्रम्—स्विष्टकृत् संप्राज्ये "हव्यवाह" स्विष्टम् ॥

अनुवाकः ४—"अग्निर्वा अकामयत"

இதுவரை சொல்லப்பட்ட மந்த்ரங்களை எந்தந்த இஷ்டியில் உபயோகம் செய்யவேண்டுமோ அவைகளை வரிசையாக விதானம் செய்யப்படுகிறது. முதலில் க்ருத்திகேஷ்டி விதாயக வாக்யங்கள். இந்த 37 பஞ்சாதிகளிடம் கடைசியில் வரும் "அக்னயே ஸ்வாஹா" முதலான ஸ்வாஹாகார மந்திரங்களை உபஹோம மந்த்ரம் என வ்யவஹரிக்கப்படுகிறது. இந்த மந்திரங்கள் யாவும் கூட உதகசாந்தியில் விநியோகிக்கிறார் போதாயனர்.

ப்ரதான யாகத்திற்கு ஸமீபத்தில் அனுஷ்டிக்கப்படுவதால் இதை உபஹோம மந்த்ரம் எனச் சொல்லப்படுகிறது. அந்தந்த நக்ஷத்ர ஸ்வரூப நாமதேயங்களாகவும் கருதப்படுகிறது. இந்த அனுவாகத்தில் தேவ நக்ஷத்ரங்களின் இஷ்டிகளும், பூர்ணமா திதியில் அனுஷ்டிக்கத் தகுந்த பூர்ணிமேஷ்டியும் ஆக 15 இஷ்டிகள் விதிக்கப்படுகிறது. புரோடாசம் என்பது பச்சரிசிமாவை வறுத்து வென்னீர் கலந்து ஆமை உருவம் போல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்து அதை கபாலம் என்கிற சிறிய ¼ ரூபாய் நாணயவடிவமான சுட்ட மண் சில்கள் மேல் வைத்து மந்த்ர பூர்வமாக வேகவைத்த ஹவிஸ் ஸாகும்.

இது 1 கபாலம் முதல் 15 வரை பல எண்ணிக் கைகளில் பக்வம் செய்யப்படுவதால் அந்தந்த எண்ணிக்கையை உடைய புரோடாசம் எனப்படு கிறது. சரு என்பது. அரிசி, யவை, கோதுமை போன்ற தான்யங்களினுல் ஏற்படும் அன்னம், ஆங்காங்கு இதை தெளிவுபடுத்தப்படுகிறது. மேலும் இந்த கல்பத்தில் (காலம்) அக்னியாகவும், நக்ஷத்ரமாகவும் இருக்கும் தேவதை சென்ற கல்பத்தில் மனுஷ்யனுக இருந்து, தான் எல்லாவற் றையும் சாப்பிடத்தகுந்தவனுகவும், தேவர்களுக்கு ஹவிஸ்ஸை வஹிப்பவனுகவும், அதுபோன்று நக்ஷத்ர ஸ்வரூபமாகவும் ஆக விரும்பி, அது ஸம யம் (கல்பத்தில்) இருந்த அக்னி தேவனின் பொருட்டும், நக்ஷத்ர தேவதையின் பொருட்டும் இஷ்டியைச் செய்து ஹவிஸ்ஸை கொடுத்து இந்த கல்பத்தில் அந்தந்த தேவதையாகவும், அந் தந்த குணங்களோடு கூடியவனுகவும் ஆனுன். ஆதலால் தற்சமயம் இருக்கும் அதிகாரியான மனுஷ்யனுக்கு எந்த விருப்பம் உள்ளதோ அவன் அந்த விருப்பத்தைக் கொடுக்கும் தேவதைக்குப் ப்ரியமான ஹவிஸ்ஸை இஷ்டி மூலம் கொடுத்து, அந்த ப்ரயோஜனத்தை (பலத்தை) அடையலாம், அல்லது இடையூறு இல்லாதவரை இந்த ஜன்ம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லேயே அடையலாம், அல்லது இடையூறு நீங்கி ஜன்மாந்தரத்திலும் பெறலாம் இந்த யாகத்தின் ஸ்வரூபத்தையும் அறிகிறவனும் (அதாவது அதிகாரியாக இல்லாததால்) இதை சொன்னபடி செய்கிறவனும் இந்த ப்ரயோஜனத்தை அடைவான். நம்பிக்கையுடனும், சொல்லியுள்ள ப்ரகாரம் அனுஷ்டிப்பது அவசியம்.

முதல் இஷ்டியானது. க்ருத்திகேஷ்டி—அக்னி, க்ருத்திகா தேவதைகளின் பொருட்டு, எட்டு கபாலங்களில் பக்வம் செய்யப்பட்ட புரோடாசத்தை ஹவிர்பாகமாக தேவர்களின் மத்யத்தில் எல்லா அன்னத்தையும், சாப்பிடக் கூடிய ஆசையுள்ளவன் அனுஷ்டிக்க வேண்டும். இந்த இஷ்டியில் ''अग्नये स्वाहा'' என்கிற ; மந்த்ரங்களால் உபஹோமத்தை ஆஜ்யம் (நெய்) த்ரவ்யத்தால் ப்ரதான ஹோமம் செய்து தர்சபூர்ணமாஸ இஷ்டியில் செய்யப்படும் நாரிஷ்ட ஹோமத்தையும் செய்து, பிறகு செய்ய வேண்டும். இதுபோன்று 37 இஷ்டிகளிலும், உப ஹோமம் உண்டு.

2. இஷ்டி ரௌகிணம்—இப்போது இருக்கும் ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரஜாபதி இந்த இஷ்டியால் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்து அவர்களில் ரோகிணி நக்ஷத்ர தேவதையை அடையவிரும்பி அடைந்ததால், தற்போது உள்ள யஜமானன் தனக்கு ப்ரியமான வஸ்துவை அடைய விரும்பி, ப்ரஜாபதி தேவனுக்கும், ரோகிணீ ஸ்வரூபத்திற்கும், 'சரு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அன்ன ஹவிஸ்ஸை கொடுக்கவேணும். இங்கு 4 உபஹோமங்கள்.

3. ம்ருகசீர்ஷேஷ்டி — ஸோமன் தேவதை, சாமை என்கிற தான்யம், பாலில் தேவதைக்காக தயார் செய்ய வேண்டும். அதிகாரி ஸோமன். ப்யிர்களுக்கு ராஜாவாக விரும்பி அடைந்ததால், தன்னை சேர்ந்தவர்களுக்குள் ராஜாவாக இருக்க நினைப்பவன் அனுஷ்டிக்க வேண்டியது. இதில் 6 உபஹோமங்கள்.

4. ஆர்த்ரா நக்ஷத்ரேஷ்டி—தேவதை ருத்ரன், பாலில் ப்ரியங்கு (ஹவிஸ்) தான்யம், பசுக்களை விரும்புபவன். 4 உபஹோமங்கள்.

5. புனர்வஸ்வேஷ்டி—தேவதை அதிதி. (பூமி) சரு அன்னம் ஹவிஸ், இந்த பூமி ஆரம்ப காலத்தில் (இந்த இஷ்டியை செய்யும் முன்பு) பயிர் களற்றதாயும் கரடுமுரடாகவும் இருந்து, பயிர் களையும், மரங்களையும் உண்டுபண்ண எண்ணி அனுஷ்டித்து அதை அடைந்ததால், எவன், ப்ர ஜைகளையும், பசுக்களையும் உண்டுபண்ண எண் ணுகிறானோ அவன் அதிகாரியாவான். இங்கு 4 உப ஹோமங்கள். "ஆபூரிः" என்று பதம்

6. திஷ்யேஷ்டி, (புஷ்யம்) தேவதை ப்ருஹஸ் பதி, நீவார சரு பாலில். ப்ரம்மவர்ச்சஸ் என்கிற காந்தியை விரும்புபவன். 3 உபஹோமங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

7. ஆச்லேஷேஷ்டி, ஸர்பம் என்கிற பெய ருண்டைய தேவதைகள், கரம்பம் (தயிர் கலந்த யவை மாவு) நெய். சத்ருக்களான அசுரர் களுடன் யுத்தம் செய்ய விரும்பிய தேவர்கள் இந்த இஷ்டியை செய்து தனக்கு அடங்கியவர் களாக அசுரர்களை செய்தார்கள், அதுபோன்று சத்ருக்களை அடக்க நினைப்பவன் அதிகாரி. 3 உபஹோமங்கள்,

8. மகாநக்ஷத்ரேஷ்டி பித்ருக்கள் தேவதை, 6 கபால புரோடாசம். பித்ரு லோகத்தில் பெருமையாக இருக்க நினைப்பவன் அதிகாரி. 5 உபஹோமங்கள்.

अनघाभ्यः अगदाभ्यः अरुन्धतीभ्यः स्वाहा

என்று பதம் பிரிவு.

9. பூர்வ பல்குனேஷ்டி, தேவதை அர்யமா, பசுகர்மன் அதிகாரி. சரு ஹவிஸ், 3 உபஹோமங் கள்.

10. ஐச்வர்யம் முதலான 6 குணங்களையும், பிறரால் பூஜிப்பதை விரும்புபவன் அதிகாரி, உத்திரபல்குனேஷ்டி தேவதைபகன், 3 உப ஹோமங்கள்.

11. ஸவித்ரேஷ்டி (ஹஸ்தம்) தேவதை ஸவிதா, 60 தினங்களில் அறுவடை செய்த நெல்லின் அரிசி மாவு புரோடாசம், 12 கபாலம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi .

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாவரும் தன்னிடம் நம்பிக்கை உடையவர்களாக வும், அதனால் எல்லா கார்யங்களை செய்ய பிறருக்கு அனுமதிதர வல்லவனாகவும் விரும்புபவன் அதிகாரி. 6 உபஹோமங்கள்.

ददते, पृणते, प्रयचुते, प्रतिगृह्णते,

இவைகள் நக்ஷத்ர சரீரங்கள்.

12. சித்ரேஷ்டி—த்வஷ்டா தேவதை, 8 கபால புரோடாசம். புத்ர, பௌத்ராதி பகுவித ஸந்ததிகளை விருப்புபவன் அதிகாரி. 4 உபஹோமங்கள்.

13. நிஷ்ட்யேஷ்டி. (ஸ்வாதீ) ஒரு கன்று மட்டும் ஈன்ற பசுவின் பால் ஹவிஸ். எங்கும் தடங்கல் இல்லாத ஸஞ்சாரத்தை விரும்புபவன். 4 உபஹோமங்கள்.

14. வைசாகேஷ்டி தேவதை இந்த்ராக்னி. 11 கபால புரோடாசம், தன்னைச் சார்ந்தவர்களில் உயர்வு விரும்புபவன். 4 உபஹோமங்கள்.

15. பூர்ணமி திதியில் பூர்ணிமாதேவதா மான இஷ்டி. நெய் ஹவிஸ். ஏதாவது ஒரு விருப்பத்துடன் அனுஷ்டித்து அதை அடையலாம். 3 உபஹோமங்கள் சாரீ: பதம்.

இவ்விதம் தேவ நக்ஷத்ரங்களின் இஷ்டிகளை செய்ய வேண்டிய முறைகளைச் சொல்லி 5வது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகத்தில் "अभिजित्" நக்ஷத்ர இஷ்டியையும் சேர்த்து யம நக்ஷத்ர இஷ்டிகள் விதிக்கப் படுகிறது.

अनुवाकः—५ "मित्रो वा अकामयत"

16. அனுராதேஷ்டி (அனுஷம்) தேவதை மித்ரன். சரு (அன்னம்) ஹவிஸ், எல்லா உலகத்திலும் உயிர் தோழனுல் ஸம்பாதிக்கப்பட்ட தனத்தை விரும்புபவன் 4 உபஹோமங்கள். எல்லா இஷ்டிகளிலும், தேவதைக்கும் நக்ஷத்ர ஸ்வரூபங்களுக்கும் சேர்ந்தே ஹவிர்பாகம் கொடுக்கப்படுகிறது. உபஹோமங்களில் தேவதா பதம் தவிர மற்றவை நக்ஷத்ர சரீரத்தை தெரி விக்கக் கூடியவை.

17. ஜ்யேஷ்டேஷ்டி (கேட்டை) இந்திரன் தேவதை. பெரிய நெல்லின் அரிசிமாவில் 11 கபால புரோடாசம். அதிகப் பெருமையையும், பெரியவனுக இருப்பதையும் விரும்புபவன். 4 உபஹோமங்கள், "अभिजित्" என்று பதவிபாகம்.

18. ப்ரஜாபதயேஷ்டி அல்லது நைருருதேஷ்டி (மூலம) இவ்விடத்தில் ப்ரஜாபதி சப்தமானது உக்ர தேவதையான நிருருதியைக் கூறுகிறது, தனது குலாசாரத்தைக் காக்கும் 'ப்ரஜையையும், தனது வேலைக்காரர்களில் உண்மையாக உழைப்பவனையும் மூலம் (முக்ய காரணம்) எனக் கூறப்படுவதால் அதை விரும்புபவன் அதிகாரி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சரு (அன்னம்) ஹவிஸ், நிருருதி தேவதை, உபஹோமங்கள்.

19. ஜலாபிமானி தேவதைகள் ஸமு ராஜனை தனக்கு வசமாக்க எண்ணி அனுஷ்டித் ஜயத்தை அடைந்தார்கள். அதுபோன்று ஸமு ரம் போன்ற பெரிய ஆசையை அடைய விரும் அபிஷ்டிய அனுஷ்டிக்கவும். அப அபிமா தேவதை, சரு ஹவிஸ், 5 உபஹோமங்கள்.

20. உத்திராஷாடேஷ்டி—விச்வே தேவர்க தேவதை, சரு ஹவிஸ், ஜயிக்க முடியாத சத் ஜயத்தை விரும்புபவன். 4 உபஹோமங்கள் வி பதம்.

21. அபிஜிதிஷ்டி, ப்ரம்மா தேவதை, ஸத் லோக யஜமானனாக விருப்பமுள்ளவன். அதாவ ஸ்ருஷ்டி கர்த்தாவாக விரும்புபவன், சரு, 4 உ ஹோமங்கள்.

22. ச்ரோணேஷ்டி, (திருவோணம்) தேவ விஷ்ணு, ஸ்தோத்ரத்தையும், பிறருல் தூஷிக்க படாண்மையையும் விரும்புபவன், 3 கபால பு டாசம், 4 உபஹோமங்கள்.

23. ச்ரவிஷ்டேஷ்டி (அவிட்டம்) வஸுக்க தேவதை, 8 கபால புரோடாசம், தேவதைக ளுள் முதன்மையை விரும்புபவன். 4 உபஹோ மங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

24. சதபிஷஜேஷ்டி, (சதயம்) வருணன் தேவதை. கரும்பு, நெல் அரிசி 10 கபால புரோடா, சம். எந்த கார்யத்தையும் செய்யும் திறமை, பிறரால் ஜயிக்க முடியாமையை விரும்புபவன். 3 உபஹோமங்கள்,

25. பூர்வப்ரோஷ்டபதேஷ்டி, அஜஏகபாத் தேவதை, சரு ஹவிஸ், சரீர காந்தியையும், வேத சாஸ்த்ர அப்யாஸத்தால் ஏற்படும் காந்தியையும் விரும்புபவன். 4 உபஹோமங்கள்.

26. உத்திரப்ரோஷ்டபதேஷ்டி, அஹிர் புத்னியன் (ருத்ரன) தேவதை. தனக்கு ஆதார மாக பூமியை விரும்புபவன். 3 உபஹோமங்கள். பூமி கபாலம், அதாவது, 1 கபால அளவிற்கு பூமியை சுத்தி செய்து அங்கு புரோடாசத்தை பக்வம் செய்வித்து ஹோமம் செய்வது, இது ஹவிஸ்.

27. ரைவதேஷ்டி, (ரேவதீ) பூஷா தேவதை, பசு காமன், சரு ஹவிஸ், 3 உபஹோமங்கள்.

28. ஆச்விநேஷ்டி, தேவதை அச்வினி தேவர்கள், 2 கபால புரோடாசம், ஒரு யோஜனை (சுமார் 10 மைல், அல்லது 100 மைல் தூரம்) அவ்வளவு இடவெளியில் இருந்து கொண்டு அந்த சப்தத்தை கேழ்க்கும் ஸாமர்த்யத்தையும், வயதான காலத்திலும் நன்றாக கேழ்க்கும் காதை விரும்புபவன் அதிகாரி. 4 உபஹோமங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

29. அபபரணீஷ்டி, யமன் தேவதை, தன்னைச் சேர்ந்தவர்களுக்குள், பெருமையை விரும்புபவன், சரு ஹவிஸ், 4 உபஹோமங்கள்.

30. அமாவாஸ்யா காலம், அமாவாஸ்யா தேவதை, நெய் ஹவிஸ், 3 உபஹோமங்கள். பலம்: பதவிபாகம், எவ்வித விருப்பத்தையும், அடையலாம்,

இவ்விதம் யம நக்ஷத்ரேஷ்டிகள் விதிக்கப் பட்டன, இனி சாந்த்ரமஸ்யாதி 7 இஷ்டிகள் 6வது (கடைசீ) அனுவாகத்தில் விதிக்கப்படுகின் றன,

अनुवाकः—६ चन्द्रमा वा

31. சாந்த்ரமஸேஷ்டி, சந்திரன் தேவதை, சுத்தமான ஜலம் முதலியதில் தெரியும் ப்ரதி பிமபாபிமானி தேவதையும், முன் சொன்னபடி கல்பாந்தரத்தில் இந்த இஷ்டியை சந்த்ரலோக வாஸத்தையும், சந்திரன் இருக்கும் வீட்டில் வசிப் பதையும். க்ரமமாக பகல், இரவு, பக்ஷ, மாஸம், ருது, வத்ஸரம் என்கிற காலாபிமான தேவதா யோகமாக சென்று அடைய நினைத்து அனுஷ் டித்து அடைந்ததுபோல் தற்போதும், அது போன்ற ஆசையுடையவன் அனுஷ்டிக்க வேண்டிய இஷ்டி, 15 கபால புரோடாசம், 7. உபஹோமங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

32. பகல், இரவு என்பது தொடர்ந்து வருவ தனால் ஜீவராசிகளின் வயது (ஆயுஷ் காலம்) பெறுகுகிறது அல்லது குறைகிறது என்பதால் அவ்விரண்டிற்கும் கட்டுப்பட்டவர்களாவர். இக் கட்டுப்பாடு இல்லாமல் இருக்க இரு புருஷர்கள் கருதி அந்த ஸ்வரூபத்தையே அடைந்தார்கள். அதுபோன்ற எண்ணமுடையவன் இங்கு அதிகாரி. சரு ஹவிஸ், அஹோராத்ராபிமானி தேவதை, ஒருதாய் வயிற்றில் பிறந்து வெளுப்பு மாடு, கறுப்புமாடு பாலில், கருப்பு, வெளுப்பு நெல் அரிசியை பக்வம் செய்து வெளுப்பு, கருப்பு (இருட்டு) வர்ணமுடைய அஹோராத்ர தேவதை களுக்கு கொடுக்க வேண்டும்.

33. உஷஸேஷ்டி, உஷாதேவதை. சரு ஹவிஸ். உஷா தேவதை பூர்வகல்பத்தில் ஸூரிய னின் அன்பையும், சௌபாக்யத்தையும் விரும்பி இந்த இஷ்டியைச் செய்து அதை அடைந்தது போல், தற்போதும், தன்னவர்களின் ப்ரியத்தை யும், சௌபாக்யத்தையும் விரும்புபவன் இதை அனுஷ்டிக்க வேணும். விடியற்காலம், உஷா. அதன் கார்யம் ப்ரகாசம் அதாவது வ்யுஷ்டி, இத னுடைய முக்கால ஸம்பந்த வாசக பதங்கள் வ்யூஷிஷீ, வ்யுச்சந்தீ, வ்யுஷ்டா என்பன. உபஹோமங்கள்.

34. எல்லா நக்ஷத்ரத்திற்கும் பொதுவான தேவதை நக்ஷத்ரம் எனப் பெயர். சரு ஹவிஸ்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதில் விசேஷம், இந்த சருவை தேவதையை உத்தேசித்து பிரிககும ஸமயம் யஜமானன் தனது இடத்தில் இருந்து கொண்டு ஜபிக்க வேண்டும், அதுதான் இந்த இஷ்டியின் காமனையும், அதை உடையவன் அதிகாரி. 10 உபஹோமங்கள், நக்ஷத்ர தேவதை விக்ரஹம், அதனது முக்கால ஸ்வரூபம், இவைகளின் அனிஷ்டத்தை போக்கும் சக்தி, இஷ்டத்தை ஸம்பாதிக்கும் சக்தி, கிரண ரூபம், உடல் ப்ரகாசம், அனுக்ரஹ சக்தி, ப்ரம்ம வர்சஸ் என 10 ஸ்வரூபங்களுக்கு உபஹோமங்கள்,

मन्त्रः "यथात्वं...भूयासमिति"

ஏ நக்ஷத்ர தேவனே! நீ எவ்விதம் தேவர்கள் மத்தியில் உயர்ந்தவனாக இருக்கிறாயோ அது போல் மனுஷ்யர்கள் மத்தியில் நானும் உத்தமனாக இருக்க வேண்டும்.

35. ஸனர்யேஷ்டி, ஸூர்யன், நக்ஷத்ர விக்ரஹங்கள் தேவதை. சரு ஹவிஸ். ப்ரகாசங்களுக்கு தலைவனாக இருக்க விரும்புபவன் அதிகாரி. 3 உபஹோமங்கள்.

36, ஆதித்யேஷ்டி, அதிதி. (பூமி) தேவதை சரு ஹவிஸ், 2 உபஹோமங்கள், பூமியில் ஸ்திரமாக இருக்க விரும்புபவன் அதிகாரி.

37. வைஷ்ணவேஷ்டி, (தேவதைவிஷ்ணு) யக்ஞ ஸ்வரூபம், சரு ஹவிஸ், 3 உபஹோமங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகருபமாக விஷ்ணுவை சொல்லி இருப்பதால் அவரது த்ருப்தியால் முடிவு வரை யக்ஞத்தை அனுஷ்டித்து பலனை அடைகிறான்.

இவ்விதம் 37 இஷ்டிகளும் அதன் மந்த்ரங்களின் கருத்தும் சொல்லப்பட்டது. இவையாவும் சேர்ந்து, 1 கர்மா எனவும், இதை நக்ஷத்ரேஷ்டி, நக்ஷத்ரஸத்ரம் எனவும், இதை அனுஷ்டிப்பவன் பாபங்களைக் கடந்து மறுபிறவி அற்றவனாகிறான் என்று போதாயன ஸூத்ரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

सूत्रम्—नक्षत्रसत्रेण ज्योतिरानन्त्याय ज्योतिषा यजेत, तेन इष्टवा पापं निर्णुद्य अपपुनर्मृत्युं जयतीति ह स्म आह बोधायनः ।।

முதல் இரு அனுவாகங்களில் சொல்லப்பட்ட அஷ்ட வாக்யங்களுக்குள், அவரவர் ஜன்ம நக்ஷத்ர வாக்யங்களையும், அன்றையதின நக்ஷத்ர வாக்யங்களையும் ஜபிப்பதால் அந்த தேவதா ப்ரஸாதத்தை அடையலாம். மந்த்ரங்களின் ரிஷி, சந்தஸ், தேவதா த்யானம் அவச்யம். மேலும், முறைப்படி ஔபாஸநாக்னியில் தர்சபூர்ணமாஸ ஸ்தாலீபாகத்தைச் செய்தவர்கள்

"ये पुरोडाशाः ते चरवः"

என்கிற வாக்யத்தை அனுஸரித்து ஔபாஸநாக்னியிலேயே சருவாக ஹவிஸ்ஸை ஸமர்ப்பித்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரயோஜனத்தை அடையலாம். அனுஷ்டானத்தில் அங்கக் குறைவால் அதிகாரி இல்லாதவன் இதை அறிவதனாலேயே ப்ரயோஜனத்தை அடைவதாகச் சொல்லியுள்ளது. "य उवैन एवं वेद"

2-வது ப்ரச்னம்

अनुवाकः १—"तृतीयस्यामितो दिविसोम आसीत्" எனத் துடங்கி प्रतितिष्ठति प्रजया पशुभिः यजमानः। என்று முடிவடைகிறது. இதில் 10 அனுவாகங்கள் உள்ளன. இவைகள் ஸம்ஹிதா முதல் காண்டம் முதல் ப்ரச்னம் ஆரம்பம் முதல் 8 அனுவாக மந்த்ரங்களின் வ்யாக்யானமாக அமைந்துள்ளன. மந்த்ரங்களின் விநியோகம், அதன் ப்ரயோஜனம் அவச்யம், இவைகளைத் தெரிவிக்கின்றன. மூன்றுவது ப்ரச்னம் மிகுதி 5 அனுவாக மந்த்ர வ்யாக்யானமாக உள்ளது. இந்த மந்த்ரங்கள் தர்ச, பூர்ணமாஸ இஷ்டிகளில் உபயோகப்படுவதால், அதன் ப்ராம்மண பாகமான இவ்விரண்டு ப்ரச்னங்களும் தர்ச பூர்ண மாஸ ப்ராம்மணம் எனப்படுகிறது. மேலும் இந்த ப்ரயோகத்திற்கு வேண்டிய மந்த்ரங்கள், 5வது 7வது ப்ரச்னங்களிலும், ஸம்ஹிதா முதல் காண்டம் 6வது ப்ரச்னத்திலும் சொல்லப்பட்டுள்ளன. இந்த மந்த்ரங்களின் விநியோகங்கள் போதாயன, ஆபஸ்தம்ப மஹர்ஷிகளால் ஸூத்ரரூபமாக சொல்லப்பட்டுள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தர்சேஷ்டி என்பது அமாவாஸ்யை அடுத்த ப்ரதமை திதி சேரும் தினத்தில் அனுஷ்டிக்கத் தகுந்தது. பூர்ணிமையும், அடுத்த ப்ரதமையும் சேரும் தினத்தன்று பூர்ணிமாஸேஷ்டியின் அனுஷ்டானம், இதை தர்ம சாஸ்த்ரத்தில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. சுமார் 15 தினங்கள் இடைவெளி இருந்த போதிலும் இரு ப்ரயோகங்களும் சேர்ந்து 1 கர்மாவாகச் சொல்லப்பட்டுள்ளது. முதலில் பூர்ணிமாஸ இஷ்டியும், பிறகு தர்ச (அமாவாஸ்யா) இஷ்டியும் செய்யத் தகுந்தது. இவ்விரண்டிலும், தலா 3 யாகம் வீதம் 6 ப்ரதான யாகங்கள். பூர்ணிமையில் ஆக்னேய, உபாம்சு அக்னீஷோமீயம் என்று 3ம், அமாவாஸ்யேஷ்டியில் ஆக்னேய ஐந்த்ரம், ஐந்த்ரம் பய: என்று 3 யாகங்களும் ஆகும். ஐந்த்ர யாகத்தை ஸாந்நாய்ய யாகம் என்று சொல்லப்பட்டுள்ளது.

இதற்கு இந்திரன் தேவதை. தயிர், பால் கலந்தது ஸாந்நாய்யம். இத்தயிரை ஸம்பாதிக்க ப்ரதான யாகத்தின் முன்தினமே பசும்பாலை காய்த்து தோய வைக்கவேண்டும். அதற்கு பசும்பால் தேவை. இப்பாலைக் கறக்கும் முன் கன்றை ஊட்ட விடவேண்டும். பிறகு தாயாரிடமிருந்து பிரித்துக் கட்டினால்தான் மாலையில் பால் கறக்க முடியும். இவையாவும் உலகத்தின் இயல்பாக இருப்பினும் கர்மாவின் அங்கமாக மாட்டினிடமிருந்து, கன்றைப் பிரித்து, மாட்டை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேயக் காட்டிற்கு அனுப்புவதற்கும் மந்த்ரங்கள் உள்ளன. இதற்கு ஸாதனமாக, கையில் வெறுங் குச்சிக்குப் பதிலாக இலை நிறைந்த புரசுக் கிளையைச் சொல்லியுள்ளது. அதை (கிளையை) ஸம்பாதித்து, சுத்தப் படுத்துவதற்குண்டான மந்த்ரம்தான் ஸம்ஹிதா ஆரம்பம், அதற்குமுன் அந்த புரசின் மஹிமையைத் தெரிவிக்கிறது இந்த ப்ராம்மண ப்ரச்ன ஆரம்பம்.

அதாவது இங்கிருந்து மூன்ருவது உலகமான ஸ்வர்க்கத்தில் ஸோமலதா என்கிற யாக ஸாதன வஸ்து இருந்ததாகவும், அதைக்கொண்டு வரும் (இவ்வுலகத்திற்கு) போது, அதன் இலை கீழே விழுந்ததாகவும், அவ்விடத்தில் ஒரு மரம் முளைத்ததாகவும், இது ஈச்வர ஸங்கல்பம் என்று சொல்லப்பட்டு, அம்மரத்தின் அடிபாக ஸமீபம் தேவர்கள் ஒன்றுகூடி ப்ரம்மவிசாரம் செய்ததைக் கேட்டதால் இந்த மரத்திற்கு, பர்ணம், ப்ரம்ம என்ற பெயர் ஏற்பட்டது. அதன் கிளையில் முதல் தினம் காலை தாயிடமிருந்து கன்றை பிரித்துக் கட்டவும்,, தாயை மேய அனுப்பவும் இக்கிளையை உபயோகப்படுத்த வேண்டும். இக் கிளையானது, வடகிழக்கை நோக்கி வளர்ந்ததாகவும், அதிக இலைகள் உள்ளதாகவும் இருப்பது அவச்யம். 'காயத்ரீ சந்தஸ்ஸால் ஸோமலதை கொண்டு வந்ததால், அதற்கு 3 பாதங்கள் போல் இதற்கும் மூன்று மூன்று இலைகள் சேர்ந்துள்ளது பொருத்தமாகும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இலை அதிகமாக இருப்பது யஜமானன் பசுமானாக இருப்பான். மேலும் இந்த இஷ்டிக்கு உகந்தபால் கொடுப்பதற்கு முன் அப்பசுவின் பால், கன்றுக்கும். யஜமானனைச் சார்ந்தவர்களுக்கும் மட்டுமாக இருந்தது. இனி அது தேவர்களுக்கு கொடுப்பதால் அதிகம் விருத்தியாக வேண்டுமென வேண்டப்படுகிறது. இம்மாடுகள் காட்டில் துஷ்ட ம்ருகங்களால் தீண்டப் படாமலும், ரோகமற்றவைகளாகவும், க்ருமிகள் அண்டாததாகவும், மலடு அற்றதாகவும் இருக்க ப்ரார்த்திக்கப்படுகிறது. வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதால் இந்தப் ப்ரயோகம் மிகவும் உயர்ந்ததாகும். மாட்டை காட்டிற்கு மேய அனுப்பிவிட்டு இக்கிளையை பூமியில் கீழே வைக்காமல், உயரே வைத்து ரக்ஷிப்பது, உலகத்தில் இருக்கும் கர்ப்பங்களை ரக்ஷிப்பதற்கு ஸாதகமாகும். மேலும் கிழக்கு, வடக்கு நுனியாக வைப்பது ஸ்வர்க்க ப்ராப்திக்குக் காரணமாகவும் ஆகிறது என்று முதல் அனுவாகத்தில் கூறப் பட்டுள்ளது,

இரண்டாவது அனுவாகத்தில் இஷ்டிக்கு வேண்டிய தர்ப்பங்களை கொண்டு வரஸாதகமான சிறிய கத்தி முதலானதில் ஸம்மந்தப்பட்ட மந்த்ரங்களின் பொருள் கூறப்படுகிறது. முதல் அனுவாகத்தில் தர்ச இஷ்டிக்கு மட்டும் உபயோகப் படும் அதிக மந்த்ரத்தை வ்யாக்யானம் செய்யப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பட்டது. இனி இரண்டிற்கும் பொதுவான மந்த்ரங்களின் விநியோகம் கூறப்படுகிறது.

अनुवाकः २—"देवस्यत्वा"

இந்த அனுவாகத்தில், 2 காலத்தில் அனுஷ்டானம் செய்யப்படும் இஷ்டிகளுக்கு அவச்யமான தர்ப்பைகளை ஸம்பாதிக்கும் வழிகளை நியமத்துடன் (கட்டுப்பாடுடன்) சொல்கிறது. ஆரம்பமே மந்த்ரபாகத்தில் இல்லாததும் ப்ராம்மண பாகத்தில் மட்டும் இருப்பதுமாகும். இம்மந்திரத்தில் நாம் செய்யும் கார்யம் எதுவானாலும் அது ஸவிதா தேவனின் ப்ரேரணையாலும், அச்வினி தேவதைகளின் கைகளாலும், பூஷாதேவனின் நுனிக்கைகளாலும் செய்கிறேன் என தேவதாத்யான புரஸ்ஸரம் ஆரம்பிக்கப்படுகிறது. இந்த மந்திரம் இவ்விரண்டு ப்ரச்னங்களில் பல இடங்களில் வந்தாலும் இதே பொருள் உடையதுதான். தர்ப்பை அறுக்க சிறிய கத்தி, அல்லது குதிரை அல்லது காளை மாட்டின் பக்க எலும்பு, இதை மந்த்ரம் சொல்லி எடுத்து, அதைப் பெருமைப்படுத்தி அக்னியில் காய்ச்சுவதால் அதில் ஸம்மந்தப்பட்ட ராக்ஷஸர்களை பொசுக்கி, தர்ப்பங்களை அதன் கனுதெரிந்து அறுப்பதால் அதை மேன்மேலும் வ்ருத்தி செய்பவனாகவும், தேவதைகளின் ஸ்மரணத்துடன் செய்வதால், உலகத்தில் அரசனின் ஊழியன் தைர்யமாக அவனுக்குச் சேரவேண்டியதை எடுத்துச் செல்வது போலும், கிழக்கு முக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாக வேதியின் கடைசியில் இருந்து செய்வதால் மந்த்ரங்களின் ஸாமர்த்யத்தால் எந்த திக்கிலிருந்து கொண்டு வந்ததாலும் அது கிழக்கு திக்கில் இருந்தே கொண்டு வந்ததாகவும், கர்ப்பமானது மழையின் நீரால் கனுவில் இருந்து வளர்வது போல் இவனது வம்சமும் வ்ருத்தி யடையும்

இது போன்று வேதத்தில் சொல்லப்பட்ட எந்தக் கார்யமும், தேவதா ஸ்மரண பூர்வம் செய்வதால் அது அந்த தேவதையை த்ருப்தி செய்விப்பதோடு, மனுஷ்ய ஸ்வபாவத்தால் ஏதாவது தெரியாமல் பிசகு நேர்ந்தாலும் அது ஸமாதானமாவதும் மந்த்ர ஸாமர்த்தியமே. தர்ப்பமுஷ்டிகளை எடுப்பதற்கு, கீழே கயறு பறத்துவது, அதில் முஷ்டிகளை வைப்பது, கட்டுவது, தரையில் வைக்காமல் உயரே, கிழக்கு அல்லது வடக்கு நுனியாக வைப்பது இது போன்ற கட்டுப்பாடுகளுடன் கார்யங்களை செய்வது, இவனது குடும்ப க்ஷேமத்திற்கும் காரணமாகிறது.

மேலும் மந்த்ரங்கள் ஒன்றாக இருந்தாலும், அந்தந்த ஸூத்ரக்காரர்கள் சொன்னபடி செய்வது தான் சரி. தனது ஸூத்ர ப்ரணேதாவான மஹர்ஷி சொல்லாமல் இருந்தால் அது அவச்யமாகவும் இருக்குமேயாகில் பிற ஸூத்ரத்தில் இருந்து எடுத்துக் கொள்ளலாம். மஹர்ஷிகள் பெரியோர்கள் அவர்கள் மனதில் தோன்

Sri Venkatesh Sastri Collection, Nandigudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

றியதை எழுதியுள்ளார்கள். அது ஏன் என்று விசாரிக்க நமக்கு அதிகாரமோ, தகுதியோ கிடையாது. சொல்லியுள்ளதற்கு ஸாமர்த்யம் இருந்தால் ஸமஞ்ஜஸம் செய்து கொள்ளலாம். இதை அனுஸரித்தே பல இடங்களில் மந்த்ரங்களின் விபாகங்கள், (பிரிவு) உபயோகங்கள், ஸ்ரீ போதாயனமகர்ஷி, ஸ்ரீ ஆபஸ்தம் பமஹர்ஷி இவர்களுக்குள் வேறுபாடுகள் காணப்படுகிறது. ப்ராம்மண பாகத்தில் வேதத்தில் பல இடங்களில் हि, वै, षा, இது போன்ற எழுத்துக்கள், மற்ற வேதம், அல்லது உலக நடையில் ப்ரஸித்தியை தெரிவிப்பதாக அமைந்துள்ளன. சில இடங்களில் மந்த்ர ஸ்வரூபமே பதில் சொல்வதாக அமைந்துள்ளது.

"रूपमेवास्यैतत् महिमानं व्याचष्टे,"

என்றும், "यथायजुरेवैतत्" என்றும்

'आशिषमेव एतामाशास्ते"

என்பதால் விருப்பத்தை அடைகிருன் (பிரார்த்திக்கிருன்) என்றும் சொல்லப்படும். இவைகள் ப்ராம்மண பாகங்களுக்கு பொதுவானது.

இவ்விதம் தர்ப்பத்தை ஸம்பாதித்ததும், அக்னியை வ்ருத்தி செய்யும் சமித்ஸம்பாதனம் ஸாந்நாய்ய (தயிர் பால்) ஸம்பாதனமும் அடுத்து வரும் அனுவாகத்தில் சொல்லப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாக: ३—"பூர்வேத்யுரிமோ"

அமாவாஸ்யை காலைவேளையில் இத்மம், (ஸமித்) தர்ப்பம், இவைகளை தயார் செய்து கொண்டு மாலையில் மறுதினம் இந்திரனுக்கு ஹவிஸ் (தயிர்பால்) தயார் செய்ய வேண்டும், அதற்கு இரண்டு சிறிய மண் சொம்புகள், இதில் 1ல் மூன்று உலக ரூபமாக எண்ணப்பட்ட 3 பசுக்களின் பாலைக் கறந்து அதை மந்த்ர பூர்வமாக சொம்பில் மூன்ருகப் பின்னிய பவித்ரத்தை; மாட்டிலிருந்து பிரிக்க ஸாதனமாக இருந்த பூவரசு கிளையில் ப்ராணுபாண த்யானத்துடன் சேர்த்து வைத்து, அதை கிழக்கு நுனியாக வைத்துக் கொண்டு, மஹேந்திரனின் பொருட்டு கறக்கிறேன் என்று மேன்மேலும் உரக்க மூன்று தடவை விட்டு; மேலும் மஹேத்திரனின் உடன் வரும் தேவதைகளுக்கும் உபயோகப்படும்படியாக மந்த்ரம் இல்லாமல் விட்டு அப்பாலை காய்த்து அன்று மாலை அரிசி கஞ்சியால் அக்னிஹோத்ரம் செய்து, அதன் மிகுதியால் தோயவைத்து ஜலத்துடன் கூடிய மண்ணில்லாத, அதாவது; இருப்பு, மரத்தாலான மூடியால் மூடி, மேலே பத்ரமாக இருக்கும்படி வைக்க வேண்டும். இது மறுதினம் தயிராகும். இதற்குப் பெயர் ஸாயம் தோஹம், மறுதினம் காலை பாலைத் தயார் செய்வது ப்ராதர் தோஹம் எனப்படும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதில் மந்த்ர பூர்வ உத்பவனம் இருப்பதால் எந்த வர்ணத்தவனும் பால் கரக்கலாம் என்றும், அக்னிஹோத்ர ஹவிஸ்ஸில் உத்பவனம் இல்லாததால் வேதோக்த கர்மாவில் ஸம்மந்தப்பட்ட மூவர்ணத்தவர்களே கறக்க வேண்டும என்றும தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று மூடும் தட்டு, கறக்கும் பாத்ரம இவைகளிலும காரணத்துடன் தீர்மானம செய்யப்பட்டுளளது. மூடும் தட்டு மணணிலலாமல இருப்பது தேவ ஸமபந்தம் "अमृन्मयं देवपात्रं" என்றும கறக்கும் பாத்ரம மரமாக இருந்தால் மரத்தில் அக்னி இருப்பதால் (கடைவதால் தெரிகிறது) அவர் அதை ருசிப்பதால் ஹவிஸ்ஸில் ஸாரம் போய் விடுவதாகவும், அதனுல் மரமில்லாத பாத்ரத்தையும் சொல்லி, பிறகு புரோடாசம், சரு இவைகள் தான் தேவதைகளுக்கு ப்ரதானம், அது மட்டும் மர சம்மந்தம் இலலாமல் இருப்பது அவச்யம், மற்றவை தோஷமில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது, இங்கு சில மந்த்ரங்கள் ஆரம்பம் மட்டும் சொல்லப்பட்டுள்ளது. அவை 7வது ப்ரச்னத்தில் சொல்லப்படுவதால் அங்கு பொருளை பார்க்கலாம்.

अनुवाकः ४—"कर्मणेवां"

இங்கு அப்ப்ரணயனம், ஹவிர் நிர்வாபம் சொல்லப்படுகிறது. ப்ரதமை அன்று காலை அக்னிஹோத்ரம் செய்து கர்மாரம்பத்திற்கு முன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரு கைகளையும் ஜலத்தால் சுத்தம் செய்ய வேண்டும். அதுதான் ஆரம்ப மந்த்ரம், (எந்த கார்யத்திலும், கைசுத்தம் வேண்டும். சாப்பிடும் ஸமயம் 5 இடங்கள் சுத்தமாக இருக்க வேண்டும் என தர்ம சாஸ்த்ரம் கூறுகிறது. இரு கைகள், இரு கால்கள், முகம், இவை ஈரமாக இருக்க வேண்டும் என்று ("पञ्चार्द्रो भुञ्जीत"). பிறகு தர்ப் பாஸ்த்ரணம், மரம், அல்லது வெண்கலப் பாத் ரத்தில் பவித்ரத்தை வைத்து தீர்த்தம் க்ரஹித்து அதன பெருமைகளைச் சொல்லி கிழக்கே ஆஹ வனீயாக்னியின் வடபாகத்தில் தர்ப்பை மேல் வைத்து தர்ப்பையால் மூட வேண்டும். இந்த் மந்த்ரம்.

"अप: प्रणयति"...देवता एवारभ्य प्रणीय प्रचरति"

என்கிறது வரை சொல்லி எடுத்து வரவேண்டும்.

தீர்த்தமானது சரீரத்திற்கு தெம்பைக் கொடுத்து கார்யங்களில் உண்டு என்கிற எண் ணத்தை உண்டுபண்ணுவதாலும், யாகஸாதன மானதாலும், சத்ருக்களை ஒழிப்பதாலும், ராக்ஷ ஸர்களை அண்டவிடாததாலும், ஆகாயத்தில் இருந்து வருவதால் அங்குள்ள தேவர்களுக்கு ஸ்தானமாகவும் கருதுவதாலும், அசுரர்களுக்கு பயந்து அக்னியில் ப்ரவேசித்து, அந்த அக்னி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தீர்த்தத்தில் ப்ரவேசித்தால் தீர்த்தம் தேவதா ரூபமாகவும் கொண்டாடப்படுகிறது. இம்மந்த் ரம் தீர்த்தப் பெருமை தெளிவாக்குவதற்காக, எந்த ஸ்மார்த்த சாந்தி கர்மாவிலும் முதலில் ஜபிக்கப்படுகிறது. பிறகு அந்தந்த யாகத்தில் உள்ள ப்ரதான தேவதைகளின் பொருட்டு மொத் தமாக உள்ள ஹவிஸ் ஸாதனமான (நெல்) அரிசி மாவில் இருந்து அந்தந்த தேவதையின் பெயரைக் குறிப்பிட்டு பிரித்து எடுத்து, இது தேவதைக்கு, இது மற்ற யாகத்திற்கும் எங்களது போஜனத் திற்கும் என்று தெரிவிக்கும் கர்மா ஹவிர் நிர்வா பம் என்பது. இதைச் செய்து ஆஹறதறிய ஸமீபம் கொண்டு வந்து அக்னியிடம் பத்ரமாக இருக்க பிரார்த்திப்பதுடன், இந்த அனுவாகம், தேவதைகளுக்காக பிரிக்கப்பட்ட நெல்லை குத்தி அரிசி தயார் செய்யப்படுகிறது.

अनुवाकः ५—"इद्रोवृत्रमहन्"

முதலில் அந்த நெல்லிற்கு சுத்தம் ஏற்பட தர்ப்பத்தினால் (பவித்ரத்தினால்), ப்ரோக்ஷணம், மேல் நோக்கிய கையால் ஜலம் தெளிக்கப்பட வேண்டும். இந்திரன் வ்ருத்ரன் என்கிற அசுரனை வதம் செய்யும்ஸமயம் அவனது சரீரம் தீர்த்தத் தைக் குறித்து வந்தது. பாபி வருகிறான் என அறிந்ததும், தீர்த்தத்தில் இருந்த் சுத்த பாகமா னது ஒரு பக்கமாக ஒதுங்கியது. தீர்த்தத்தில் எவ்விதம் நமது சரீரத்தில் இருக்கும் அழுக்கை சுத்தம் செய்யும் சக்தி உள்ளதோ, அதுபோல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவஸம்மந்தமான சுத்தம் செய்யும் சக்தியும் உண்டு. இந்த பாகமானது. ஒதுங்கி, தர்ப்பமாக முளைத்தது. இவ்வாறான தர்ப்பத்தினால் மந்த்ர பூர்வமாக துடைப்பது, ஜலம் தெளிப்பது இவை கள் சுத்தத்திற்கு காரணமாகிறது. தேவகார்ய மானதால், இருதர்ப்பங்களினால் பவித்ரம் செய்ய வேண்டும், பித்ரு கார்யமானால் 3 தர்ப்பங்கள், ப்ரேதகார்யமானால் ஒருதர்ப்பை, देवोवः सवितोत्पुनातु, என்று ஒவ்வொரு வாக்யத்தாலும் உத்பவனம் செய்யவேண்டும், 4வது தடவை கிடையாது. 3 தடவை செய்வது தேவதைகளுக்கு உண்மை புத்தி ஏற்படுவதாகக் கூறுகிறது, வேதம். "त्रिपत्याहिदेवाः" ஹவிஸ்ஸை ப்ரோக்ஷித்து, பாத்ரங் களை நிமிர்த்து ப்ரோக்ஷிக்க வேணும். மான் தோலை மேல் பாகம் தெரியும்படி பரத்தி அதன் மேல் உரலை வைத்து இடித்து, மூங்கில் முறத் தில் அள்ளி, புடைத்து, அரிசியை தயார் செய் வது வரையில் இந்த அனுவாகம் சொல்கிறது.

अनुवाकः ६—"अवधूतं रक्षः"

பிறகு மான் தோலை சுத்தமாக்க மந்த்ரம் சொல்லி தட்டி முன் போல் பரத்தி, அதன் மேல் சம்யா என்கிற கோலைவைத்து அதன் மேல் கீழ் சாய்வாக அம்மியை (சிறியது) வைத்து அரிசியை மந்த்ர பூர்வமாக் அந்தந்த தேவதைகளுக்காக எடுத்து வைத்து கிழக்கு, மேற்கு, நடு, சுற்றிலும் நன்கு பொடி செய்ய வேண்டும். இதுவே புரோ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

டார்சமாவாகும். மேலும், "धान्यमसि धिनुहि देवान्" என்று மந்த்ரம் சொல்வதால் நாம் எவ்வளவு ஹோமம் செய்கிறோமோ அதுவே தேவதைகளுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவாகப் பெருகி தேவதைகளை த்ருப்தி செய்விக்கிறது. நாம் ஹோமம் செய்யும் அளவாகவே இருப்பதில்லை என வேதம் கூறுகிறது. இவ்விதம், வேலைக்காரியோ, அல்லது, யஜமான பத்னீயோ மாவு தயார் செய்யவேண்டும்.

अनुवाकः ७—धृष्टिरसि ब्रह्म"

கபாலங்களை வைக்கும் முறை

இந்த அனுவாகத்தில் கபாலோபதானம் ப்ரதிபாதனம் செய்யப்படுகிறது. வேண்டிய கபாலங்களை (சிறிய ஓட்டாம்சில்களை) உபவேஷம் என்கிற சிறிய ஸமித்தால் நெருப்புத் துண்டுகளை சுத்தமாக இருக்க (அரர்களை விரட்ட) பூமியில் பரத்தி அதன் பேரில் கபாலத்தை மந்த்ரம் சொல்லி வைத்து, அதன் மேல் மறுபடியும் நெருப்புத் துண்டை வைத்து, மேலேயும் அசுரர்களை வராமல் செய்து, அதில் புரோடாசம் பக்வம் செய்யவேண்டும். அதில் கபாலா எண்ணிக்கைகளை ஸ்தோத்ரம் செய்யப்படுகிறது. இவ்விதம் புரோடாசத்தை பக்வம் செய்த பின் கபால ஸம்மந்தமாக இருப்பதால், இஷ்டியின் முடிவில் கபாலங்களை எண்ணி ஸரிபார்க்கச் சொல்லியுள்ளது. அந்த மந்த்ரத்தையும் இங்கு சொல்லி பொருள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறப்பட்டது, கபாலம் என்கிற சொல் மண்டை ஓட்டையும் சொல்வதால் முதன் முதலில் மண்டை ஒன்ருகவும், பிறகு 8 பாகமாகவும் பிரிக்கப்படுவதால் 1 முதல் 8 வரை உள்ள கபாலங்கள், சிரஸ்ஸிற்கு ஸமானமாக புகழப்படுகிறது.

अनुवाक: ८—"देवस्यत्वा"

புரோடாசமாவை அந்தந்த தேவதைகளுக்காக வறுப்பதற்கு ஸாதானமான பாத்ரத்தில் போடுவது, பிறகு கொதித்த வென்னீரை சுற்றிலும் விட்டு அதை சுண்டச் செய்து, இரக்கி வைத்து, குதிரையின் கால் குளம்பு அளவு ஆமையின் உருவம் போன்று செய்து, அதை முன்பு பரத்தப்பட்ட சுட்ட கபாலங்களில் எல்லாவற்றிலும் ஸம்மந்தப்படும்படி வைத்து ராக்ஷஸர்கள் நெருங்காமல் இருக்க பசுயாகத்தில் பசுவைச் சுற்றுவது போல் 3 தடவை நெருப்புத்துண்டால் சுற்றி எரியும் தர்ப்பங்களால் மேல்பாகம் பக்வம் செய்யும்படி போட்டு, அதன் சுற்றுப்புறங்கள் பக்வம் ஆக நன்கு எரிந்த விரளித்துண்டுகளை வைத்து ஆக்னீத்ரன் என்கிற ரித்விக்கை தேவதைகளுக்கு உகந்ததாக பக்வம் செய் என தனது மவுனத்தை அத்வர்யூகலைக்கிருர். மேலும, வேதம் என்கிற தர்ப்ப முஷ்டியால் மேலே உள்ள சாம்பல் தூசிகளை போக்குவதால் யஜமானன் கேசங்களுடன் கூடிய சிரஸ்ஸை உடையவனுகிருன். இதை அறிபவன் வழுக்கத் தலையாக

Sri Jeeyacharyam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கமாட்டான். இந்த புரோடாசத்தையே பசுவாக பாவித்ததால் அது யஜமானனைத் தாக்க சாமர்த்ய முடையதாகிறது. அதற்காக மந்த்ர சாமர்த்யத்தால் அதை சமனப்படுத்தப்படுகிறது.

பிறகு வறுக்க ஸாதனமான பாத்ரத்தை தண்ணீரினால் அலம்பி அந்த ஜலத்தை, ஏகதன், த்விதன், த்ரிதன் என்கிற மூவரின் பொருட்டு 3 இடத்தில் வேதிமத்யத்தில் விடுவதால் அவர்களும் த்ருப்தி யடைகிறார்கள். அவர்கள் யார் என்றால் தேவதைகள். தாங்கள் இஷ்டியாகம் செய்வதால் ஏற்படும் பாபங்களை எங்கு வைப்பது என்று யோசிக்கும் ஸமயம் அக்னி பகவான் நான் அவ்விடத்தைச் சொல்கிறேன், என்னிடம் நீங்கள் எல்லோரும் சேருங்கள் என்றதும், தேவதைகள் அம்சத்தால் அக்னியை அடைந்தார்கள். அதனால் அக்னி ஸர்வதேவதா ஸ்வரூபனாகிறான். மேலும் அக்னி தான் சொன்னபடி, ஏகதன் முதலான மூவரையும் தன்னிடமிருந்து உண்டு பண்ணினான். இதனால் அவர்களுக்கு ஆத்ம்யர்கள் என்றும், அக்னிபகவான் 3 தடவை தீர்த்ததில் குதித்து அதிலிருந்து உண்டாதானால் அவர்களுக்கு ஆப்யர்கள் என்றும் பெயர் ஏற்பட்டது.

தேவர்கள் தங்களது பாபங்களை அக்னியின் வாக்கின்படி ஆப்யர்களிடம் (ஏகதாதிகள்) சேர்ப்பித்தனர். அந்த பாபம் பள்ளம் நோக்கிச் செல்லும் நீரைப்போல் மேலே சொல்லக்கூடியவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களிடம் தானாகவே சேர்ந்தது. ஆப்யர்களிட மிருந்து சூர்ய உதய காலத்தில் தூங்கும் ஸூர் யாப்யுதிதனுடமும், அவனிடமிருந்து, ஸூர்யன் அஸ்தமன காலத்தில் உறங்கும் ஸூர்யாபிநிம் ருக்தனிடமும், அவனிடமிருந்து சொத்தப் பல்ல னிடமும், அவனிடமிருந்து தமக்கை விவாஹம் ஆகாமல் இருக்கும்போது தங்கையை மணந்து கொண்டவனிடமும், (அக்ரதிதிஷு: என்று அவ னுக்குப் பெயர்) அவனிடமிருந்து சிறியவன் (தம்பி) விவாஹம் செய்து கொண்டு பெரியவன் (அண்ணன்) விவாகம் செய்து கொள்ளாமல் இருந்தால் (அவன் பரிவித்தன்) அவனிடமும், அவனிடமிருந்து வீரஹன அரசனைக் கொன்றவ னிடமும், அவனிடமிருந்து ப்ராம்மணனைக் கொன்றவனிடமும் வரிசையாக பாபம் ஸங்க்ர மித்து அவனுக்கு மேம்பட்ட பாபி இல்லாததால் அவனிடம் தங்கி விடுகிறது, பெரியதான ப்ராம் மணனைக் கொன்ற பாபத்தை செய்ததால், இது வரை ஏகதன் முதலியவரிடமிருந்து பள்ளத்தை நோக்கி வரும் ஜலம் போல் பாபம் தானாகவே வந்து சேருகிறது.

இதிலிருந்து நாம் இவ்விதமான பாபங் களுக்கு ஆளாகாமல் இருப்பது அவச்யம் எனத் தெரிகிறது. ஏனெனில் நாம் எதிர்பாராமலேயே பாபம் சேருகிறது. தினம் பகல் வேளையில் வைச்வதேவம் என்கிற கர்மாவைச் செய்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

"सिंहानुवाक:" என்கிற மந்த்ரங்களை பாராயணம், செய்வார்கள், அதில் தன்னிடமுள்ள ஒவ்வொரு அங்கங்களின் குறைகள் ஒவ்வொரு பிராணியை அடையட்டும். மொத்தமாக எனது பாபம் வேதம் கற்று மறந்தவனை "ब्रह्मोज्झे किल्बिषं" என்று சொல்லி அவனை அடையட்டும் எனச் சொல்லப் படுகிறது. (ஆகையால் வேதம் கற்று மறப்பது மஹா (பெரிய) பாபம் எனத் தெரிகிறது.),

ஏகதாதிகளுக்கு விடும் தீர்த்தத்தின்மேல் கொள்ளிக் கட்டையைக் காட்டி அதனுல் அது பக்வம் செய்யப்படுகிறது. அவர்களுக்கும் தேவதா ஸம்மந்தமிருப்பதால் பக்வமான ஆஹா ரமே அவர்களுக்கும் உகந்ததாகிறது. என்பது இந்த அனுவாகத்தின் பொருள்.

अनुवाकः—९ "देवस्य त्वा"

இந்த அனுவாகத்தில் தயார் செய்யப்பட்ட ஹவிஸ்ஸை வைப்பதற்கு இடமான வேதி தயார் செய்யப்படுகிறது. அதற்கு ஸாதனமாக முதலில் சிறிய கத்தியை எடுத்து அதைப் புகழ்ந்து அதனு லேயே வேதி தேசத்தை கொத்தி பூமியில் வ்யா பித்துள்ள விஷத்தை சாப்பாடாக உள்ள விஷாத் என்கிற அசுரனையும் அரரு: என்கிற மற்றொரு அசுரனையும் அப்புறப்படுத்தி அசுரர்களிடம் இருந்த ஸம்பூர்ண பூமியில் தங்களுக்கும் பாகம் வேண்டும் எனக் கேட்டு வசு, ருத்ரன், ஆதித்யன்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னி இங்நால்வராலும் சூழப்பட்ட தேசத்தை அசுரர்களின் சம்மதத்தின் பேரில் அடைந்து அங்கு இஷ்டி செய்து சத்ருக்களை வென்று சுகத்தை அடைந்தது போல் நாமும் அடைய வேண்டும்.

பூமியில் தனது முகம் அளவோ' அல்லது, 4 அங்குலமோ, அல்லது எவ்வளவு தூரத்தில் வேற் விடுமோ அல்லது சுத்தமான ப்ரதேசம் வரை, கத்தியால் கொத்தி, மணலை கொட்டி ஸமப்படுத்த வேண்டும். மேற்கு பக்கம் தூக்கியும், கிழக்குப்பக்கம் இறக்கமாகவும் இருக்க வேண்டும். அல்லது, ஈசான்ய பாகம் இரக்கமாக இருப்பது அவச்யம், இதுபோன்ற இடமே தேவதைகளை பூஜிப்பதற்கு உகந்ததாகச் சொல் லப்படுகிறது. இவ்விதம் தயாரிக்கப்பட்ட வேதி தேசத்தில் ஆக்னித்ரனை ப்ரோக்ஷணீ: என்கிற தீர்த்தத்தையும் முன்பு மேலே வைக்கப்பட்ட இத்மா, பர்ஹிஸ்ஸையும், வைக்கும்படியும். யாக ஸாதன பாத்ரங்களை சுத்தம் செய்யும்படியும் கட்டளை பிறப்பித்து அது நிறைவேற்றியான பின் யஜமான பத்னியை யோக்த்ரம் கட்டிக்கச் செய்து கத்தியினுல் கோடிட்ட தேசத்தில் ப்ரோக்ஷணீ தீர்த்தத்தை வைக்கச் செய்ய வேண்டும். பிறகு அந்தக் கத்தியை வேண்டாத ஸாமான் களைப் போடக்கூடிய உத்கரழ் என்கிற இடத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போட்டு ப்ரோக்ஷணம் செய்து எடுக்க வேண்டும் என்பது வரை சொல்லப்பட்டுள்ளது.

अनुवाकः—१० "वज्रोवैस्फ्यः"

முன்பு எடுக்கப்பட்ட சிறிய கத்தியை தெற்கு நுனியாகவும், வடக்கு அடிபாகமாகவும் வைப்ப தால் அத்வர்யூ தனது ஆயுஸ்ஸைக் காப்பாற்றிக் கொள்வதுடன், கிழக்கு மேற்கு பாகத்தில் அக்னி களாலும், கத்தியின் அடிபாகத்தால் கீழேயும் மேல் பாகத்தால் மேலேயும் வடதிக்கில் பின் பாகத்தாலும், நுனியால் தெற்கு திசையில் உள்ள அசுரர்களை வதம் செய்விப்பதாகவும், இவ்விதம் சுத்தமான ப்ரதேசத்தில், தக்ஷிண திக்கில் இத்மத்தையும், வடபாகத்தில் தர்ப்ப முஷ்டிகளையும், ஆகவனீயத்திற்கு மேற்கே கிழக்கு முகமாக இருந்து கிழக்கு நுனியாக இருக்கும்படி வைக்க வேண்டும். இவ்விரண்டை யும் சேர்த்து வைப்பதால் யக்ஞ ஸம்பந்தமான ஒரு ஜோடியை தயார் செய்ததாக ஆகிறது. மேலும் தனது ரூபமாக இத்மத்தையும், தர்ப் பத்தை ப்ரஜா ரூபமாகவும் பாவித்து வைப்பதால் அந்தந்த தேவதைகளுக்கு த்ருப்தி ஏற்படுகிறது. இதனால் யஜமானன் ப்ரஜைகளினாலும், பசுக்களி னாலும் ப்ரதிஷ்டையை அடைகிறான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூன்றாவது ப்ரச்னம்

अनुवाकः १—"प्रत्युष्टम्"

இவ்வாறு மந்த்ர பாகத்தில் 9 அனுவாகங்களுக்கு விநியோகம் சொல்லப்பட்டது. மிகுதி உள்ள, 4 அனுவாகங்களுக்கு இந்த ப்ரச்னத்திலுள்ள 11 அனுவாகங்களால் விஸ்தாரமாக பொருள் இந்த 3 வது ப்ரச்னத்தில் கூறப்படுகிறது. முதல் 5 அனுவாகங்களினால் ஹோம ஸாதன பாத்ரங்களை காய்ச்சுவது, அவைகளை துடைப்பது, அதற்கு ஸாதனமான வேத பரிவாஸனத்தை ஹோமம் செய்வது, பத்னியை யோக்த்ரத்தை (தர்ப்பைக் கயிறு முறுக்கப் பட்டது) கட்டுப்படி செய்வது, ஆஜ்ய ஸம்ஸ்காரம், ஆஜ்யக்ரஹணம் வரையில் கூறி 6வது அனுவாகத்தில் பரிதி ஸ்தாபனம், ஹவிஸ்தாபனம், 7வது அனுவாகத்தில் ஆகாரஹோமம், 8ல், இடாக்ரஹணம் 9ல், ஹோம ஸாதன பாத்ரங்களை வெளியில் எடுப்பது, 10ல் யோக்த்ரத்தை அவிழ்ப்பது, 11ல், கபால உபதான ஸமயம் அக்னி எடுக்க ஸாதனமான ஸமித்தை பரித்யாகம் செய்வது என்கிற விஷயங்கள் கூறப்படுகின்றன.

முதல் அனுவாகத்தில் ஸ்ருவம் என்கிற உத்தரணி போன்ற கரண்டி மற்றும் ஸ்ருக் என்று சொல்லப்படுகிற நெய் வைத்துக் கொள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ளக் கூடியதும். ஹோம ஸாதனமான பாத்ரங்களையும், கார்யஹ பத்யம் அல்லது ஆஹவநீயாக்னியில் காயச்சி, பிறகு வேதம் என்கிற தர்ப்பக் கட்டின் நுனிபாகத்தால் இப்பாத்ரங்களின் நுனி, உள்பாகங்களையும், அடிபாகத்தால் தண்டு, மற்றும் பக்கவாடுகள், அடிபாகங்களையும் துடைத்து சுத்தமாக்க வேண்டும். இதில் ஸம்ஸ்க்ருத சப்த, லிங்க, வசன பேதங்களை வைத்து ஸ்த்ரீ புருஷர்கள் சேர்க்கையாகிற மிதுன பாவத்தை (ஜோடி) கல்பிக்கப்படுகிறது. இது போன்று பல இடங்களில் இரண்டு விஷயங்கள், வெவ்வேருகவும். ஆனால் ஒன்று சேரக்கூடியதாகவும், இருக்கும் இடங்களில் வேதம் அல்லது வித்யாரண்யர் மிதுன பாவத்தை (ஜோடிகள்) கல்பிக்கிருர். மேலும் இந்த சுத்தம் செய்யும் ப்ரகாரத்தால் மழையை வரவழைக்கவோ தடுக்கவோ, முடியும் எனக் கூறுகிறது. மேலும் நமது மூச்சுக்காத்திற்கு ஸமமாகக் கூறி அதை ஸரியாக இருக்கும்படியும், விபரீதமாகவும் செய்யலாம். இவ்விதம் ஹோம ஸாதனப் பாத்ரங்களின் பெருமையை அறிபவன். அகாலமரணமடையமாட்டான் என பல ச்ருதி கூறுகிறது.

अनुवाकः २—"दिवःशिल्पं"

முதலில் எந்த நுனி தர்ப்பஸமூகத்தால் பாத்ரங்களை சுத்தம் செய்தோமோ அவைகளை "दिवःशिल्पं" என்கிற மந்த்ர தீர்த்தத்தால் அலம்பி,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னியில் ஹோமம் செய்யவேண்டும் என்பது தீர்மானம், ஏனெனில் இதில் சிலர் வேலை ஆன தும் வெளியில் எரிந்து விடலாம், அது பசுக்களுக்குக் கெடுதி விளைவிக்கும். சிலர் ஜலத்தால் அலம்பாமல், அக்னியில் அல்லது, வேண்டாத அல்லது உபயோகப்படுத்தப்பட்ட இனி தேவை இல்லாததை போடும் இடமான உத்கரம் என்கிற இடத்தில் போடுகிறுர்கள். அதுவும் ஸரிஇல்லை. ஏனெனில் அது காய்ந்து சக்தில்லாமல் வீணுகிவிடும். அதில் பசுக்களுக்கு ப்ரியம் கிடையாது. அப்போது காட்டுத் தீயினுல் பொசுக்கப்பட்டு அவ்விடத்தில் முளைத்து வரும் பச்சைப் புல்லுகளில் ருசி அதிகமாக இருக்குமா தலால் அதில் பசுக்களுக்கு ப்ரியம் அதிகம், ஆதலால் அக்னியிலேயே ஹோமம் செய்வது தான் ஸரி எனக் கூறுகிறது. இதைச் சொல்லும் ஸமயம் ஞாபகத்திற்கு வந்த அக்னி ஸம்மார் ஜனம் எனக்கூடிய இத்மத்தைக் கட்டிய தர்ப்பக் கயிறுக்கு ஹோமமந்த்ரத்தைச் சொல்லி அதை யும் ஹோமம் செய்யவேண்டும். அதனுல் யஜ மானன் க்ஷேமத்தை அடைகிறுன் என்றும் கூறி யுள்ளது.

अनुवाक: ३—''अयज्ञोवा एष:''

யக்ஞபத்னீ என்கிற யஜமான பத்னீ இருந் தால்தான் யக்ஞம், யக்ஞமாகத் திகழும் இல்லை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யெனில் அதுயக்ஞமே இல்லை. இதுபோ
பத்னீ இல்லாத கர்மாவினால் புத்ருதி ப்ரஜை
அற்றவனாகிறான் யஜமானன். ஆகையால்
னியை இஷ்டியில் சம்மந்தப்படுத்துவது அ
யம். மேலும் யோக்த்ரம் என்கிற தர்ப்பக்கயி
இடுப்பில் கட்டும்படி செய்யவேண்டும். எத
என்றால் விவாகத்தில் மங்கள ஸூத்ரம் (தா
கயிறு) எவ்விதம் அந்தப் பெண்ணிற்கு அடை
ளமோ, அதுபோல் இஷ்டியில் ஸம்மந்தப்ப
தற்கு அடையாளம், இதனால் புத்ருதி ஸம்பத்
கள் ஏற்படுகிறது என பாஷ்யம் கூறுகிற
இதைக் கட்டிக்கொள்ளும் போது கார்ஹபத்ய
னியில் மேற்கு திக்கில் வடக்கு நோக்கி
கார்ந்து கட்டிக் கொள்ளவேண்டும். உட்கார்
செய்யும் கார்யமே ஸரியானதாகும். கிழ
நோக்கி இருந்தால் கிழக்கே வேதி இருப்பத
அதனிடன் நேர்முகமாக இருப்பது கலகத்திற்
காரணமாகிறது எனக் கூறுகிறது. [இத
தான் போலும் தர்மசூத்ரத்தில் ஆசார்யனு
எதிரில் உட்காராதே, பெரியோர்கள் எதிரி
உட்காராதே, பக்கவாட்டில் இருந்து சொ
லைதச் செய் எனக் கூறியுள்ளது.] பத்
யோக்த்ர ஸம்மந்தம் உலகயோக க்ஷேமத்திற்
காரணம் எனவும் கூறுகிறது. அக்கயிறை
முடிச்சு போட்டு அவிழாமல் கவனமாக இரு
வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாக: ४—"घृतंचवैमधु"

இங்கு நெய்யின் பெருமையும், அதை சுத்தப்படுத்துவதும் சொல்லப்படுகிறது. ஆதிஸ்ருஷ்டியில் ப்ரம்மா ஸ்ருஷ்டிஸாதனமாக தன்னையே நெய்யாகவும், தேனாகவும் உருமாற்றி கொண்டார். தேன் சரீரத்திற்கு புஷ்டியைக் கொடுப்பதால் அதை வைத்து உலகஸ்ருஷ்டி செய்தால் அது ஸாரமற்றதாகியது. அதனால் ச்ரௌத கர்மாவில் தேனை ஹோமஸாதனமாக ஏற்கப்படவில்லை, நெய்ஸாரத்துடன் இருப்பதால் அதை தேவதைகளுக்கு ஹவிஸ்ஸாக உபயோகப்படுத்தப்படுகிறது. நெய்ப்பாத்ரத்தில் இருக்கும் நெய்யை, பத்னியை கண்மூடி திறந்து பார்க்கச் செய்து, பிறகு சுத்தத்திற்காக கார்ஹபத்யாக்னியில் காய்த்து ஆஹவநீயாக்னியில் வடக்கு பாகம், அல்லது மேற்கே கத்தியால் கோடிட்டு அங்கு வைக்க வேண்டும். பிறகு பவித்ரத்தால் நெய்யை உத்பவனம் என்கிற கர்மாவினால் சுத்தப்படுத்த வேண்டும். இது 3 தடவை செய்து, அந்த நெய்யோடு ப்ரோக்ஷணீ தீர்த்தத்திலும் சுத்தி செய்வதால் அந்த தீர்த்தம் பார்க்க நெய்த்துளிஸம் மந்தப்பட்டதால், அழகான தங்க ஆபரணங்களை அணிந்துள்ள அழகான பெண் போல் பார்க்க மனதிற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இங்கு ஸ்ராஹர், என்பது வடக்கு நுனியா பவித்ரத்தை இருகைகளாலும் இருபக்கத்திலு பிடித்து பவித்ரம் இருக்குமிடமிருந்து கிழக் நகர்த்தி மேற்குதிசையில் கொண்டுவந்து, ம படிமத்யத்தில் நிறுத்த வேண்டும். இதுபோ மூன்று தடவை என பாஷ்யம் கூறுகிற இதுவே ஸ்மார்த்தத்தில் ஆஜ்யபாத்ரத்தி கிழக்கே இருந்து மேற்கே இழுத்து பிற கிழக்கே முடிக்க வேண்டும், இது போன் மூன்று தடவை. ஒவ்வொரு தடவையும் மந்த்ர த்தின் முடிவில் செய்ய வேண்டும்.

अनुवाकः ५—"देवासुरः"

இதில் மேலும் ஆஜ்யஸம்ஸ்காரமும். ஆஜ் க்ரஹணமும் சொல்லப்படுகிறது. ஒருஸமய தேவாஸுர யுத்தம் ஏற்பட்டபோது இந்திர நெய்யை சுத்தம் செய்யமந்த்ரத்தை,. ஆலோசி தான். தங்களுக்கு ஆஹாரத்ரவ்யம் என்பதா அதுஸமயம் வேதவித்வான்கள் நெய் எதனு சுத்தமாகும் என்று கலந்து ஆலோசித்தார்கள் [நெய்யினால் அபிகாரம் செய்தால் மற்ற பதார் தங்கள் சுத்தமாகிறது.] அப்போது இந்த்ரிய களில் ஸத்யத்தை தெரிவிக்கும் கண்பார்வையா சுத்தமாகும் என்று. தீர்மானித்து மந்த் பூர்வமாக பார்த்து சுத்தம் செய்தார்கள் சிலசமயம் காதால் கேட்டது பொய்யாகலா ஆனால் சுத்தமானகண்ணால் பார்க்கப்பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்றும் பொய்க்காது என்பதால் கண்ணை ஸத்யம் எனக்கூறினார்கள். இவ்வாறு பத்னீ, அத்வர்ய யஜமானன் இவர்களது பார்வைகளில் சுத்தம் செய்யப்பட்ட நெய்யை அந்தந்த தேவதைகளுக்காக அந்நந்த பாத்ரங்களில் எடுக்க வேண்டும். நெய் அதிகப்ரகாசஸாதனமாக இருப்பதால் அதைப் பார்க்கும் போது நேர்க்கண்ணால் பார்க்காமல் கண்மூடித்திறந்து பார்த்து கண்ணை ரக்ஷித்துக்கொள்ள வேண்டும்.

ஹோமஸாதனப்.பாத்ரங்கள் ஜுஹூ, உபப்ருதி, த்ருவா என மூன்று, இதில் ஜுஹூவில் 4 தடவை பூர்ணமாகவும், உபப்ருத்தில் 8 தடவை கொஞ்சமாகவும், த்ருவையில் 4 தடவையும் க்ரஹிக்க வேணும். இதில் எண்ணிக்கைகளை வைத்து புகழப்படுகிறது. மேலும் ஜுஹூவில் இருக்கும் நெய் முதல் மூன்று ப்ரயாஜை யாகங்களுக்கும், உபப்ருத்தில் உள்ளத்தில் பாதியால் மிகுதி 2 ப்ரயாஜைகளுக்கும் மிகுதியில் கடைசியில் அனூயாஜை யாகங்களுக்கும், உபயோகிக்க வேண்டும். த்ருவையில் இருப்பது அவ்வப்போது தேவைப்படும் எல்லா யாகத்திற்குமாக உபயோகப்படுத்த வேண்டும்.

अनुवाक ६—"आपोदेवीरग्रेपुवः"

க்ரஹிக்கப்பட்ட ஹோம த்ரவ்யத்தை வெளியில் இருந்து மந்த்ரம் சொல்லி வேதியில் அந்தந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இடத்தில் வைக்கவேண்டும். அதற்கு தர்பமு முஷ்டிகளைப் பரத்தி (பூமி தெரியாமல்) ஸமப் படுத்தி பிறகு வைக்க வேண்டும். அதற்காக ஆரம்பத்தில் முதலில் சேகரித்து வைத்த இத்மம், பர்ஹிஸ் இவைகளை ப்ரோக்ஷணீ தீர்த்தத்தால் ப்ரோக்ஷித்து, வேதியையும் ப்ரோக்ஷணம் செய்து, ப்ரஸ்தாம் என்கிற தர்ப்பக்கட்டையில் வைத்துக் கொண்டு ஆஹவநீய அக்னிக்கு மேற்கு, தெற்கு, வடக்கு பாகங்களில் நீண்ட ஸமித்துக்களை வைக்க வேண்டும். இவைகளுக்கு பரிதி எனப்பெயர். பிறகு கிழக்கு திக்கில் காப் பாற்ற ஸூர்யனை பிரார்த்தித்து, ஆகாரஸமித் துக்கள் 2 தெற்கு, வடக்கு திக்கில் அக்னியில் வைத்து, கையில் இருக்கும் ப்ரஸ்தரத்தை பிறகு ஞாபகமாக எடுக்கும் வித்ருதியில் வகையில் வித்ருதியில் பரத்தி அதில் ஒவ்வொரு பாத்ரமாக முன்பு க்ரஹிப்பட்ட ஹோமஸாதன பாத்ரங்களை வைத்து அபிமந்த்ரணம் பிரார்த்தனையை அத் வர்யு, யஜமானன் செய்ய வேண்டும். புரோடா சம், ஸாங்நாய்யம் முதலிய ஹோமத்ரவ்யங்களை எடுத்து வைத்து மூன்று உலக ரூபமாக பாத்ரங் களை பாவித்து க்ஷேமத்தை பிரார்த்திப்பதுடன் முடிவாகிறது. ப்ரோக்ஷணீ சேஷத்தை பித்ரு தேவதைகளின் பொருட்டு கார்ஹபத்யத்தின் கீழ்புறம் ப்ராசீனாவீதியாக விட்டு அவர்களின் ப்ரீதியையை ஸம்பாதிக்க வேண்டும் என்பது இங்கு கருத்து.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः ७—अग्निना वै होता

இங்கு ஸாமிதேனீ என்கிற ஸமித்துக்களை வைத்த பிறகு ஆகாரம் என்கிற கர்மா சொல்லப் படுகிறது. இது ஸ்ருவத்தால் செய்யப்படுவது. ஸூரணவாகாரம் என்றும், ஜூஹூவால் செய்யப் படுவதற்கு ஸ்ருச்யாகாரம் எனவும் இரண்டு வகைப்படும். ஸாமிதேனீ என்பது ஸமித்துக்கள். இவைகள், 3 பரிதி, 2 ஆகாரஸமித், 1 அனூயாஜ ஸமித், 15 ஸாமிதேனீ என்று மொத்தம் 21 சமித் துக்கள் கொண்டது இத்மம். ஸ்மார்த்தத்தில். சிலர் அனூயாஜ ஸமித் வைத்து செய்கிறார்கள் அப்போது 21 ஸமித, அல்லது இத்மத்திற்கு 20 ஸமித்துககள, இவைகளை ஹோதா என்கிற ரித்விக்கால் மந்த்ரம் சொல்ல அக்னியில் வைத்து 3 தடவை வேதத்தால் விசிறி, ஆக்னீத்ரனை விட்டு 3 தடவை அக்னி, பரிதி இவைகளை துடைக்கச் செய்து ப்ரஜாபதியை த்யானம் செய்து உட்கார்ந் தபடி வாயு மூலையில்பரிதி சேர்க்கையில் இருந்து தொடங்கி ஸ்ருவத்தால் அக்னி ஜ்வாலையில் மட்டும் தொடர்ச்சியாக ஆக்னேய மூலைவரை ஹோமம் செய்வது முதல் ஆகாரம். 2-வது வேண்டிய நெய்யை ஜூஹூவால் க்ரஹித்துத் கொண்டு, அக்னிக்கும் ஆஜ்ய பாத்ரங்களுக்கும் நடுவில் விஷ்ணுவை ஸ்மரித்து வலது காலை வேதிக்கு தென்புரம் வைத்து தாண்டிய ஜமானன் தொடர்புடன் வேதியினுள் காலை வைத்துக் கொண்டு குனியாமல் நின்று முன்போல் நிருருதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூலே முதல் அக்னி ஜ்வாலேயில் நெய் மட்டும் தொடர்ச்சியாக விழும்படி மந்த்ர பூர்வகமாக செய்வது 2-வது ஆகாரம்.

இதில் முதல் உட்கார்ந்தும் 2-வது நின்றும் செய்வதற்கு உதாஹரணம் உலகில் மிக பாரமான பதார்த்தத்தை இழுக்கும் போது பல ஜோடி மாடுகளால் இழுக்கச்செய்யும் போது முதல் ஜோடியால் உட்கார்ந்தும் மற்றவைகளே நின்று கொண்டும் ஓட்டுவதுபோல் என்று உலக இயல்பை வேதம் கூறுகிறது. அதன் மிகுதியை இடதுகாலே வேதியின் வடக்கில் வைத்து தாண்டிவந்து, த்ருவையில் 3 தடவை அபிகாரம் செய்து யக்ஞ ஸாங்நித்யத்தை (தொடர்பை) ஏற்படுத்துவதால் ஸ்வர்க்க லோகப்ராப்தி எனக் கூறப்படுகிறது. இத்மத்தைக்கட்டிய தர்ப்ப ஸமூகத்தை மரக்கத்தியில் நுனி தெரியும்படி சுத்திக்கட்டி அதனால் அக்னியையும் பரிதிகளேயும் சுத்தம் செய்ய வேண்டும். இதுவே இரண்டாவது அனுவாகத்தில் கூறப்பட்ட அக்னி ஸம்மார்ஜனம் என்பது.

अनुवाकः ६—धिष्णियावा

இங்கு இடா (ஹோமசேஷம்) பணம் தக்ஷிணுதானம், இவைகள் சொல்லப்படுகிறது. ஸோமயாகத்தில் "धिष्णियाः" என்று சில இடங்கள் உண்டு. இவைகள் மத்யத்தில் செல்வது அந்த தேவதைகளுடைய கோபத்திற்கு ஆளாகிறுன்.

Sri Vedachalam Sastri Collection, Kanikuel

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதனால் அங்கு மார்க்கமே வேறு கூறப்படுகிறது. அதுபோன்று இங்கு இஷ்டியை காப்பவர்களான ப்ரம்மா முதலிய ரித்விக்குகள் இடாபக்ஷணத்திற்காக வடக்கு திக்கில் இருக்கும் ஸமயம் அத்வர்யூ அவர்களை தாண்டிச் செல்வது ஸரியில்லை. ஆதலால் கையில் புரோடாசாம்சத்தை வைத்துக் கொண்டு செல்வது அவர்களுக்கு தருவதற்காக. ஆகையால் அவர்களது சந்தோஷத்திற்கு ஆளாகிறான். பிறகு ஹோதாவால் இடா தேவதையை கூப்பிடச் செய்து, ரித்விக்குகளுக்கு பாகத்தை கொடுத்து திருப்தி செய்விக்க வேணும். மிகுதி வேதியில் இருப்பதை வாக் முதலிய நான்கு தேவதைகளுக்காக நான்கு திக்குகளிலும் பிரித்துவைத்து முதலில் ஆக்னீத்ரன், 2வது ப்ரம்மா, 3வது ஹோதா, கடைசீயாக அத்வர்யூ அவர்கள் பெற்று சாப்பிட வேண்டும். இதில் ஆக்னீத்ரன் கையில் ஒரு தடவை உபஸ்தானம், இரு தடவை புரோடாசத்தை வைத்து 1 தடவை நெய்யால் தொடைத்து இருதடவை அபிகாரம் செய்தும் என்கிற கணக்குவரச் செய்து ருதுக்களின் ப்ரீதியை ஸம்பாதிக்கிறான். பிறகு வேதத்தினால் ப்ரம்மாவிற்கும், மற்ற இருவர்களுக்கும் இஷ்டப்படியும் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டியின் தக்ஷிணையாக அன்வாஹார்யம் என்னும் அன்னத்தை கொடுக்க வேண்டும். பிறகு ஹோதாவால் சில ஸூக்தங்களை சொல்லும்படி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்து பிறகு ஸ்ருக் வ்யூஹனம் என்கிற கர்மாவை செய்ய வேண்டும.

अनुवाकः—९ "अथस्रुचौ"

वाजस्यमा என்கிற இரண்டு அனுஷ்டுப் சந்தஸ்களுமான மந்த்ரங்களால் முதலில் கிழக்காக ஜுஹூவையும், பிறகு உபப்ருதத்தை மேற்காகவும் தள்ளி ஏற்பட்ட, ஏற்படப் போகிற இரு த்ருக்களையும் வெவ்வேறு திசையில் விரட்டி சுகமடைகிறான். இப்பாத்ரங்களை வைத்திருந்த ப்ரஸ்தர முஷ்டியை இப்போது, ஜுஹூ, உபப்ருத், த்ருவை என்ற மூன்று பாத்ரங்களிலும் நுனி, மத்யம், அடி பாகங்களை நெய்படும்படி 3 தடவை செய்து, அத்வர்யூ வேதியில் நின்று கொண்டு, ஹோதாவால் தேவதைகளின் நாமாக்களை குறிப்பிடும் ஸமயம் ப்ரஸ்தர முஷ்டியை அக்னியை தாண்டாமல் வைத்து அதில் மிகுதி ஆஜ்யத்தால் ஸமிஷ்டயஜுர்ஹோமத்தைச் செய்து கபால உத்வாஸனம் எண்ணிச் செய்து பூர்த்தி செய்கிறான். இதன் முன் பரிதியை நெய்யால் நனைத்து பிறகு அக்னியில் சேர்பிப்பது, அக்னியையும் பரிதிகளையும் துடைப்பது போன்ற ப்ரயோகங்களும் சொல்லப்பட்டுள்ளது. பிறகு அரிசி தயார் செய்யும்போது எடுத்துவைக்கப்பட்ட உமி, குறுணை இவைகளை தக்ஷிணாக்னியில் இத்ம ஸம்வ்ருச்சனம் என்கிற அதிகப்படி சமித்துக்களை வைத்து அதில் அதிகப்படியான உமி, குறுணை, மிகுதி உள்ள நெய்யில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கலந்து ஹோமம் செய்ய வேண்டும். இது பலீஹரண ஹோமம் எனப்படுகிறது. பிறகு வேதத்தை (தர்ப்பமுஷ்டி) பத்னியிடம் கொடுத்து யோக்த்ரத்தை அவிழ்க்கச் செய்து தீர்த்தமார்ஜனம் செய்வித்து வேததர்ப்பைகளினுல் கார்ஹபத்யம் முதல் ஆகவனியம்வரை தர்ப்பத்தை இழுத்து விடுவதால் மேலும் யக்ஞத்தை தொடரச் செய்கிருன். இதற்கு மேல் "देवा गातुविदः" என்கிற மந்த்ரத்தால் ஹோமம் செய்து, ஆரம்பத்தில் அச்சித்ர காண்டத்தில் சொன்ன "देवा गातुविदः" என்கிற மந்த்ரத்தால் தொடங்கிய இஷ்டியை பூர்த்தி செய்விக்கிருன். தர்சேஷ்டியாக இருந்தால் பலாச்சாகையையும் ப்ரஸ்தரத்துடன் ஹோமத்தில் சேர்க்க வேண்டும்.

अनुवाकः १०—"योवा अयथादेवतम्"

எவன் சரியானபடி தேவதைகளை உபாஸிக்கவில்லையோ அவன் தேவதைகளின் கோபத்திற்கு ஆளாகி அவர்களின் சம்மந்தத்தை அடையவில்லை. எவன் ஸரியாக உபாஸிக்கிருனே அவன் தேவதா ப்ரஸாதத்தை அடைகிருன். இங்கு அது போன்று ஆரம்பத்தில் யோக்த்ரபந்தனம் செய்யப்பட்டதோ, அதை அந்த தேவதையான ஸவிதா, யோக்த்ர தேவதையான வருணன் இவர்களை புகழக்கூடிய மந்த்ரத்தால் "इमम् विष्यामि" என்கிற மந்த்ரத்தை சொல்லி அவிழ்க்கச் செய்வதால் தேவதா ப்ரஸாதத்திற்கு ஆளாகிருன். அந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யோக்த்ரத்திற்கும், தீர்த்தத்திற்கும் ஸம்மந்தப்படுத்தி நான்கு திக்குகளிலும்காரியம் விடச்செய்து, இரு கைகளையும் மேல் நோக்கி சேர்த்துவைக்கும்படி செய்து அதில் அந்த தீர்த்தத்தை "समायुषा" என்கிற மந்த்ரத்தால் விட்டு கீழேவிடச் செய்து, தீர்த்தக் கையுடன் முகத்தை துடைத்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். இது அவப்ருத ஸ்னனமாக ஆகிறது. இந்த தீர்த்தம் ப்ரஜோத்பத்தி காரணமாக சொல்லி இருப்பதால் அதன் ஸம்பந்தத்தால் ப்ரஜைகள் ஏற்படுகின்றன. இதனால் ப்ரஜையால் தான் மனுஷ்யன் பூர்ணன் (முழுமையை) அடைகிறான் என்கிறது வேதம். ("प्रजयाहि मनुष्यः पूर्णः".) இவ்விதம் பத்னீ ஸம்மந்தமான கார்யத்தை முடித்து, உபவேஷ ஸமித்ப்ரயோகம் மேலே சொல்லப்படுகிறது

अनुवाकः ११—"परिवेषोवा एष वनस्पतीनां"

முன்பு கபால உபதானஸமயம் அக்னி எடுக்க ஸாதனமாக இருக்க பலாச சாகையின் அடிபாக ஸமித் எடுக்கப்பட்டது. அதை இப்போது உத்கரத்தில் மந்த்ரபூர்வமாக போட்டுவிட வேண்டும். இதில் ஸாதாரணமாக உத்கரத்தில் போடுவது, அதையும் அடிபாகத்தில் இருந்து நுனி தெரியாமல் பூமியில் சொருகுவது, தனது சத்ருவின் பாதை தீருவதின் பொருட்டு 3 மந்திரங்களை சத்ருக்களை ஒழிக்க பிரார்த்தித்து தூரம் எரிதல், பூமியில் குழிதோண்டி தெரியாமல் புதைத்தல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போன்ற சத்ருபாதை தீருவதற்கும் மந்த்ரங்களை கூறி இக்கார்யம் செய்யும் போது சத்ருவின் பெயரைக் குறிப்பிடுவதால், அவன் ரொம்பவும் ச்ரமமடைவதாகக் கூறுகிறது. தற்காலத்தில் காமக்ரோதத்தாலேயே சத்ருக்கள் உண்டாவதால் அதை அடக்கி எல்லோரையும் தனக்கு வசமாகச் செய்து கொள்வதையே ஆங்காங்கு மந்த்ரங்களின் மூலம் பிரார்த்திக்கப்படுகிறது.

நான்காவது ப்ரச்னம்

अनुवाकः—१ ब्रह्मणे ब्राह्मणम्

19 அனுவாகங்கள் உள்ள இந்தப்ரச்னத்தில் மனுஷ்யர்களை பசுவாக அந்தந்த தேவதைகளுக்கு என குறிப்பிட்டு, இவர்களுக்கு இடையூறு இல்லாமல் இருக்க உபாகரணம், நியோஜனம் முதலான கர்மாக்களைச் செய்து (பர்யக்னிகரணம்) அக்னியால் ஹவிஸ்ஸை சுற்றி சுத்தம் செய்வது என்பதைச் செய்து யூபங்களுக்கு தென்புறம் நிறுத்திப்ரம்மா என்கிற ரித்விக் सहस्रशीर्षा என்கிற அனுவாகத்தால் ஸ்தோத்திரம் செய்து பர்யக்ன கரணம் செய்த பசுவை வடக்கே கொண்டுவந்து இஷ்டத்திற்கு வெளியில் அவிழ்த்துவிட வேண்டும். மிகுதியான வபாஹோமாதிகளை நெய்யினால் செய்து தேவதைகளை திருப்தி செய்வித்து 5வது காண்டத்தில் 5வது ப்ரச்னத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தில் சொல்லப்பட்ட आग्नेयः कृष्णग्रीवः என்கிற அனுவாகத்திலும் अग्नयेऽनीकवते रोहिताञ्जिः என்கிற அனுவாகத்திலும் சொல்லப்பட்ட இரண்டுவித ஐகாதசினிகளால் யாகத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த யாகம் 5 தினங்கள் ப்ரதான யாகத்தை உடையது. அதில் மூன்ருவது தினத்தில் இதை ப்ராம்மணனோ அல்லது க்ஷத்திரியனோ (அரச குலத்தில் பிறந்தவன்) ஸ்வதந்த்ரமாகச் செய்து சரீரபுஷ்டி, வீர்யம், பூர்ண ஆயுஸ் இவைகளை அடையலாம். இதில் வரும் தேவதைகளும், பசுக்களின் ஸ்வரூபங்களும் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது. வேதம் அரசன் போன்றது. சொல்வதை செய்ய வேண்டும் என்பதால், இதில் ஜாதியாலோ. மற்றவைகளாலோ உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. புருஷ பசு 178. ஸ்த்ரீ பசு 21. நபும்ஸக பசு 1. ஆக 200. பசு தேவர்கள் 170.

1. ப்ராம்மண ஜாதியின் அபிமானிதேவதைக்காக ப்ரம்மவர்ச்சஸ்ஸோடு கூடிய ப்ராம்மணனையும்,

2. க்ஷத்திரிய ஜாதி அபிமான தேவதைக்காக அரசகுலத்தில் உண்டானவனையும்.

3 தேவவைச்யர்களான மருத் என்ற தேவ கணங்களுக்காக மனுஷ்யர்களில் வைச்ய ஜாதி புருஷனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

4. தபஸ்ஸுக்கு அபிமானி தேவதைக்காக சூத்ரனையும்,

5. இருட்டிற்கு அபிமான தேவதையின் பொருட்டு இருட்டில் ப்ரியமுள்ள திருடனையும்,

6. நரகாபிமானிக்காக வீரஹா தனது அக்னியை பூஜிக்காதவனையும்,

7. பாபத்தின் அபிமானி தேவதைக்கு அலியையும்,

8. எல்லா த்ரவ்யங்களின் விலைக்கு அபிமானி தேவதைக்கு ஶாஜ்பல் சாஸ்த்ர விரோதத்தை அனுஷ்டிப்பவனையும்,

9. ஆசைக்கு அபிமானியின் பொருட்டு வ்யபசாரிணியையும்,

10. தேவர்களுக்குள் ரொம்பவும் நிந்திக்க தகுந்தவரின் பொருட்டு (ஜாயம்) அரச குல ஸ்த்ரீயினிடம் வைச்ய புருஷனால் உண்டு பண்ணப் பட்டவனையும்,

अनुवाकः २—"गीताय सूतम्"

11. பாட்டிற்கு அபிமான தேவதைக்காக ஸுதனை ப்ராம்மண ஸ்திரியிடம் அரசகுலத்தவனால் ஏற்பட்டு பாட்டினால் ஜீவிப்பவனையும்,

12. நாட்யத்திற்கு அபிமானி தேவதைக்காக சைலூஷனை பிறரின் அனுபவத்திற்கு தனது பத்னியை அனுப்பி அதனால் ஜீவிப்பவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

13. தர்ம அபிமானி தேவதை பொருட்டு ஸபையில் தர்மத்தைச் சொல்பவனையும்,

14. விளையாட்டு அபிமானி தேவதைக்காக நர்மம் (ரேபன்) தனது வார்த்தையினால் பிறரை சந்தோஷிப்பவனையும்,

15. புருஷனின் அபிமானி தேவதைக்காக ந்ரிஷ்டன் பயந்த கண் பார்வையை உடைய வனையும்,

16. சிரிப்பின் அபிமானி தேவதைக்காக நடிப்பவன்போல் செய்பவனையும்,

17. ஆனந்த அபிமானி தேவதையின் பொருட்டு ஸ்திரீகளுக்கு ப்ரியமானவனையும்,

18. அதிகசந்தோஷ அபிமானி தேவதைக் காக சிறுமிக்கு பிறந்த பிள்ளையையும்,

19. உயர்ந்த ஞாபகசக்தி அபிமானி தேவ தைக்காக நல்ல கூர்மையான புத்தியினால் ரதத் தைச் செய்பவனையும்,

20. தைர்யாபிமானி தேவதைக்காக தச்சனையும்,

अनुवाकः ३—श्रमाय कीलालम्

21. சோர்வுக்கு அபிமானி தேவதைக்காக குயவனின் பிள்ளையையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

22. பலவிதமான விசித்ரகார்ய சக்தியின் அபிமானி தேவதையின் பொருட்டு உலோகத்தைச் செய்பவனையும் (கருமான்),

23. கருப்பு, சிவப்பு போன்ற கலர்களுக்கு அபிமானி தேவதையின் பொருட்டு உயர்ந்த முத்து மணி இவைகளை தீட்டுபவனையும்,

24. நல்ல மங்கள அபிமானி தேவதைக்காக விரை விதைப்பவனையும்,

25. அம்புகளின் அபிமானி தேவதைக்காக அம்புகளைச் செய்பவனையும்,

26. ஆயுதாபிமானி தேவனுக்காக வில்லைச் செய்பவனையும்,

27. இவைகளை உபயோகிக்கும் அபிமானி தேவனுக்காக நாண்கயிற்றை செய்பவனையும்,

28. ஏற்படக்கூடியவைகளின் (விதி) அபிமானி தேவனுக்காக கயிறு திரிப்பவனையும்,

29. சாவின் அபிமானி தேவனுக்காக மான்களைக் கொல்பவனையும்,

30. ப்ராணனை கொண்டுசெல்லும் அபிமானி தேவதைக்காக நாய்களோடு விளையாடி ஜீவிப்பவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः ४—सन्धयेजारम्

31. கார்யத்தை சேர்த்துவைக்கும் அபிமானி தேவனுக்காக திருட்டுத்தனமாக பிறர் ஸ்த்ரீயை அனுபவிப்பவனையும்,

32. வீட்டின் அபிமானி தேவதைக்காக புருஷனுக்குத் தெரிந்த இதுபோன்ற (ஜார) புருஷனையும்,

33. நிருருதி அபிமானி தேவதைக்காக தமையனுக்கு முன்பே விவாஹம் செய்து கொண்டவனையும் (பரிவித்தன்),

34. துக்க அபிமானி தேவதைக்காக தமையன் விவாஹதத்திற்கு முன்பே தன் விவாஹத்தில் ஆர்வம் உள்ளவனையும்,

35. கார்யத்தை நடக்க விடாமல் தடுக்கும் அபிமானி தேவனுக்கு இருதடவை விவாகம் செய்து கொண்டவளின் புருஷனையும்,

36. சுத்தத்தின் அபிமானி தேவனுக்காக வைத்யனையும்,

37. காலத்தை அறிந்த அபிமானி தேவனுக்காக ஜ்யோதிஷனையும்,

38. கார்யத்தை நடத்திவைக்கும் அபிமானி தேவதைக்காக தட்டானின் மனைவியையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

39. பல அபிமானி தேவதைக்காக சாப்பாட்டை விலையாக கொடுத்து வாங்கிய கன்னிகையையும்,

40. வெண்மை, பசுமை போன்ற கலர்களுக்கு அபிமானி தேவதைக்காக தனது ப்ரயோஜனம் விரும்பாமல் பிறருக்கு உழைப்பவனையும்,

अनुवाक. ५—नदीभ्यः पौञ्जिष्टम्

41. நதிகளின் (ஆறுகள்) அபிமான தேவதைக்காக செம்படவனையும்,

42. சூன்ய இடத்து அபிமான தேவனுக்காக நாயை சாப்பிடுபவனையும் (வேடனையும்),

43. உயர்ந்த புருஷாபிமானி தேவதைக்காக மிகவும் திமிருடையவனையும்,

44. நல்ல சண்டைக்கு அபிமானி தேவனின் பொருட்டு புத்தி ஸ்வாதீனம் மில்லாதவனையும்,

45. கந்தர்வன், அப்ஸரஸ் அவர்கள் பத்னிகள் எல்லோருக்கும் சாஸ்த்ர ஸம்ஸ்காரமற்றவனையும்,

46. ஸர்பதேவன் கருடதேவன் இவர்களுக்காக ஸம்ஸ்காரத்திற்கு தகுதி இல்லாதவனையும்,

47. காக்கும் அபிமானி தேவனுக்காக சொக்கட்டான் விளையாட்டில் ப்ரியமுள்ளவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

48. அன்னமாக இருக்கும் அபிமானி தேவதைக்காக சூதாட்டத்தில் விருப்பமற்றவனையும்,

49. பிசாசு அபிமானி தேவதைக்காக மூங்கிலை வெட்டி சாமான்கள் செய்பவனையும்,

50. ராக்ஷஸ அபிமானி தேவதைக்காக தோட்டத்தில் முள்வேலி கட்டுபவனையும்,

अनुवाकः ६—उत्सादेभ्यः कुब्जं

51. கார்யத்தை நாசம் செய்யும் அபிமானி தேவனுக்காக கூன் முதுகு உள்ளவனையும்,

52. உயர்ந்த சந்தோஷத்திற்கு அபிமானி தேவதையின் பொருட்டு குட்டையானவனையும்,

53. வாயிற்படி (புற) அபிமானி தேவனுக்காக வ்யாதி உள்ளவனையும்,

54. ஸ்வப்ன அபிமானி தேவதைக்காக குருடனையும்,

55. பாப அபிமானி தேவதைக்காக செவிடனையும்,

56. நல்ல அறிவின் அபிமானி தேவதைக்காக மந்த்ரம் மருந்துகளினுல் தனது புருஷனை சிற்றின்பத்தில் ஈடுபடச் செய்பவளையும்,

57. தன்னிஷ்டப்படி அதிகம் பேசச் செய்யும் அபிமானி தேவனுக்கு ப்ரயோஜனமில்லாமல் ஸபையில் உட்கார்ந்து அதிகம் பேசுபவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

58. வேதசாஸ்திரங்களில் அறிவு போருந்த வர்களின் அபிமானி தேவனுக்காக சாஸ்திரத்தில், ஸந்தேகம் கேட்பவனையும்,

59. வேதசாஸ்திரங்களில் நல்ல அறிவு உடையவர்களின் அபிமானி தேவனுக்காக அதில் கேள்விகேட்பவனை தனது கேள்வியால் மடக்கு பவனையும்,

60. சாஸ்திரத்தில் முதிர்ந்த அறிவின் அபிமானி தேவனுக்காக பிறரின் கேள்வியை நன்கு அறிந்து பதில் கூறுபவனையும்,

अनुवाकः ७—अर्यैस्तेन हृदयम्

61. திருடியபின் ஓடச் செய்யும் அபிமானி தேவனுக்கு திருட்டில் ஈடுபாடு உள்ளவனையும்,

62. வீரனை கொல்லும் எண்ணத்தின் அபிமானி தேவதைக்காக யஜமானனிடம் கோள், சொல்பவனையும்,

63. நல்ல லாபத்தின் அபிமானி தேவதைக் காக தேரோட்டியையும்,

64. அரசனின் சொத்தை பரிபாலிப்பவனின் அபிமானி தேவனுக்கு பொக்கிஷ தாரனை அல்லது கப்பம் வசூல் செய்பவனையும்,

65. பலம் அபிமானி தேவதைக்கு வேலைக் காரனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

66. பொறுமையின் அபிமானி தேவதைக்கு நம்மைச் சுற்றிவருபவனையும்,

67. அன்பின் அபிமானி தேவனுக்காக அன்பாக பேசுபவனையும்,

68. அஹிம்ஸையின் அபிமானி தேவதைக்காக குதிரை ஏறுபவனையும்,

69. யாக அறிவின் அபிமானி தேவதைக்காக துணிகளை சுத்தம் செய்யும் வண்ணாத்தியையும்,

70. அதிக ஆசையின் அபிமானி தேவதைக்காக துணிகளில் பார்க்க அழகான வர்ணம் தீட்டுபவனையும்,

अनुवाकः ८—भायै दार्वा हारम्

71. வெளிச்சத்தின் அபிமானி தேவனுக்காக விறகு கொண்டு வருபவனையும்,

72. அதிகமான ப்ரகாச அபிமானி தேவனுக்காக நெருப்பை நன்கு பற்ற விடுபவனையும்,

73. ஸ்வர்க்கத்தில் மேல்பாக அபிமான தேவனுக்காக ராஜாவை அபிஷேகம் செய்விப்பவனையும்,

74. ஸூர்ய லோகத்தை காக்கும் அபிமானி தேவனுக்காக வெண்கல, தாம்ரபாத்ரங்களை சுத்தம் செய்பவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

75. தேவலோக அபிமானி தேவனுக்காக அடங்கிய பூசலை கிளப்புவனையும்,

76. மனுஷ்யலோக அபிமானி தேவனுக்காக நண்பர்களுக்குள் சண்டையை கிளப்பி பிரிப்பவனையும்,

77. எல்லா உலக அபிமானி தேவதைக்காக பூசலை அடக்குபவனையும்,

78. கடுமையான மரணத்தின் அபிமானி தேவனுக்காக தாளுகவந்து பூசலை ஏற்படுத்துபவனையும்,

79. ஸ்வர்க்கலோக அபிமானி தேவனுக்காக அரசனின் வரியை ஜனங்களிடமிருந்து வாங்குபவனையும்,

80. மிகப்பெரிய ஸ்வர்க்கலோக அபிமானி தேவனுக்காக சாப்பிடும்போது பரிமாறுபவனையும்,

अनुवाकः ९—अर्येभ्यो हस्तिपम्

81. நடையின் அபிமானி தேவனுக்காக யானைப்பாகனையும்,

82. வேகத்தின் அபிமானி தேவனுக்காக குதிரையை காப்பவனையும்,

83. உடல் வலிமையின் அபிமானி தேவனுக்காக பசுக்களை காப்பவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

7

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

84. தேஜஸ்ஸின் அபிமானி தேவனுக்காக வெள்ளாட்டை காப்பவனையும்,

85. வீர்யத்தின் அபிமானி தேவனுக்காக செம்மறி ஆட்டை காப்பவனையும்,

86. சாப்பாட்டின் பொருள் அபிமானி தேவனுக்காக உழவனையும்,

87, தண்ணீரின் அபிமானி தேவதைக்காக கள்ளை தயாரிப்பவனையும்,

88. மங்கள அபிமானி, தேவதைக்காக வீட்டைக் காப்பவனையும்,

89. பொருமையின் அபிமானி தேவனுக்காக பணத்தைக் காப்பவனையும்,

90. அறிவு இந்திரியங்களின் அபிமானி தேவனுக்காக தேரோட்டியை அனுஸரிப்பவனையும்,

अनुवाकः—१० मन्यवेऽयस्तापं

91, மனதிலுள்ள கோப அபிமான தேவதைக்காக இரும்பை காய்ச்சி வேலை செய்பவனையும்,

92. வெளிக்கோப அபிமானி தேவதைக்காக கொல்லத்தகுந்த குற்றவாளியை வெளியில் கொண்டு வருபவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

93. சோக அபிமான தேவதைக்காக தேரின் முன் செல்பவனையும்,

94. எதிர்பார்த்த லாபத்திற்கு அதிகம் குறைவு இவைத் தரும் அபிமானி தேவனுக்காக இரண்டு கால்கள், ஊன்றுகோல் இவைகள் இருந்தும் நடக்கமுடியாமல் ஒரே இடத்தில் இருப்பவனையும்,

95. இதுவரை அடையப்படாத லாபத்தை அடைவிக்கும் (யோகத்திற்கு) அபிமானி தேவனுக்காக தேரில் பூட்டிய குதிரைகளை கட்டுபவனையும்,

96. கிடைத்த (க்ஷேமத்திற்கு) லாபத்தைக் காக்கச் செய்யும் அபிமானி தேவனுக்காக தேரில் பூட்டிய குதிரைகளை அவிழ்ப்பவனையும்,

97. உடலின் அபிமானி தேவனுக்காக ஆங்காங்கு மனதினாலேயே அழகைச் சேர்ப்பவனின் பிள்ளையையும்,

98. நன்நடத்தைக்கு அபிமானி தேவனின் பொருட்டு கண்ணுக்கு மைதீட்டி அழகு செய்பவனையும்,

99. பாப அபிமானி தேவனுக்காக (நிர்ருதி) தாமரக் கருவியை ஊதும் பெண்ணையும் அல்லது சிறிய கத்திகளுக்கு தோல் உரை செய்பவனையும்,

100. யம அபிமானி தேவதைக்காக மலடியையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः—११ यस्यैयमसूम्

101. யமனின் மனைவிக்காக இரட்டைக் குழந்தைகளைப் பெருபவனையும்,

102. அதர்வவேதம் மந்த்ராபிமானி தேவதைகளுக்காக கர்ப்ப ஸ்ராவம் (abortion) உடையவனையும்,

103. ப்ரபவ முதல் அக்ஷய வரை உள்ள 60 வருடங்களில் 5 வருடங்கள் ஒரு கூட்டம். இதில் முதல் வருடம் ஸம்வத்ஸரம் எனப் பெயர். அந்த அபிமானி தேவதையின் பொருட்டு மகப்பேறு காலத்தைத் தாண்டி மகப்பேறு அடைபவனையும்,

104. இரண்டாவது வருஷ அபிமானி தேவதைக்காக இரண்டாவது மகப்பேறு இல்லாதவனையும்,

105. மூன்ருவது வருட அபிமானி தேவதைக்காக கர்ப்பம் ஏற்படும் முன்பே அதை தடுப்பதில் கெட்டிக்காரியையும்,

106. நான்காவது வருட அபிமானி தேவதைக்காக மகப்பேறு காலத்தை நாசம் செய்வதில் ஸாமர்த்தியமுள்ளவனையும்,

107. ஐந்தாவது (கடைசீ) வருட அபிமானி தேவதைக்காக மகப் பேறில்லாமலேயே இளைத்தவளையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

108. எல்லா உலகத்திற்கும் ஏமாற்றத்தை செய்யும் அபிமானி தேவனுக்காக முதல் வயதிலேயே கிழட்டுத் தன்மை அடைந்தவனையும்,

109. காட்டின் அபிமானி தேவனுக்காக காட்டைக் காப்பவனையும்,

110 காட்டின் ஒரு பக்க அபிமானி தேவனுக்காக காட்டுத்தீயைக் காப்பவனையும்,

अनुवाकः—१२ सरोभ्योधैवरम्

111. குளத்தின் அபிமானி தேவனுக்காக இருபுறமும் ஜலத்தைத் தடுத்து மீன் பிடிப்பவனையும்,

112. சிறிய குளத்தின் அபிமானி தேவதைக்காக மீன்பிடிக்கும் கருவியால் தூண்டில் மீன் பிடிப்பவனையும்,

113. மரங்களின் ஸமீபத்தில் இருக்கும் அபிமானி ஜலதேவதைக்காக சணல் வலையினால் மீன் பிடித்து ஜீவிப்பவனையும்,

114. புல்லுகள் நிறைந்த இடத்தில் இருக்கும் அபிமானி ஜல தேவதைக்காக மீன்களைப் போட்டு வைக்கும் ஸாமானால் (வலை) ஜீவிப்பவனையும்,

115. எதிர்கரை அபிமானி தேவனுக்காக கரையில் மீன்களைச் சேர்த்து சாகடிப்பவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

116 இக்கரை அபிமானி தேவனுக்காக ஜலத்தினுள் கைகளால் மீனைத் தேடுபவனையும்,

117. ஜலக்கரை (துறை) யின் அபிமானி தேவனுக்காக ஜலத்தில் சிறிய குச்சியை நட்டு அதனால் மீன் பிடிப்பவனையும்,

118. மேலே சொன்ன இடத்திற்கு மாறான தேசத்தின் அபிமானி தேவனுக்காக ஜலத்தால் (சணல்வலை) ஜீவிப்பவனையும்,

119. சப்தத்துடன் கூடிய தீர்த்த அபிமானி தேவனுக்காக விஷம் தடவிய இலையை தண்ணீரின் மேல் பரத்தி மீன் பிடிப்பவனையும்,

120. மலை குகையின் அபிமானி தேவனுக்காக வேடனையும்,

121. மலையின் உச்சி (சிகரம்) அபிமானி தேவனுக்காக உடலை சோம்பல் முறிப்பவனையும்

122. மலைகளின் அபிமானி தேவனுக்காக காட்டில் வசித்து பாடுபவனையும்,

अनुवाकः—१३ प्रति श्रुत्काया ऋतुलम्

123. எதிரொளியின் அபிமானி தேவதைக்காக தேச ராஜ விஷயங்களை சொல்பவனையும்,

124 சப்த அபிமான தேவதைக்காக (த்வனி) ஸம்பந்தமில்லாமல் பிதற்றுபவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

125. முடிவோடு கூடிய சப்த அபிமானி தேவனுக்காக அதிகம் பேசுபவனையும்,

126. முடிவற்ற சப்த அபிமானி தேவதைக்காக ஊமையனையும்,

127. சிற்றின்ப சமயம் ஏற்படும் சப்த அபிமானி தேவதைக்காக நன்கு வீணையை வாசிப்பவனையும்,

128. பெரியசப்த அபிமானி தேவதைக்காக முங்கிலை (புல்லாங்குழல்) வாசிப்பவனையும்,

129. சுற்றிலும் கேட்கும் சப்த அபிமானி தேவதைக்கு நகரா (பேரி) அடிப்பவனையும்,

130. உயர்ந்த, மட்டமான சப்த அபிமானி தேவதைக்காக சங்கு ஊதுகின்றவனையும்,

131. காலங்களை சேர்க்கும் அபிமானி தேவனுக்காக தோல் உடைகளை சேர்த்து ஜீவிப்பவனையும்,

132. காலத்திற்கு நல்லதைச் சேர்க்கும் அபிமானி தேவர்களுக்காக வீணை முதலிய வாத்யங்களுக்கு உரை (தோலில்) தயாரிப்பவனையும்,

अनुवाकः १४—बीभत्सायै पौल्कसम्

133. கெடுதியான வஸ்துக்களில் வேண்டாம் என்கிற அறுவறுப்பு அபிமானி தேவதைக்காக ரொம்பவும் கீழ் ஜாதியில் பிறந்தவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

134. பனி அபிமானி தேவதைக்காக முழிப்புடன் (அறிவுடன்) கூடியவனையும்,

135. தரித்திர அபிமானி தேவதைக்காக எப்பொழுதும் தூக்கத்தில் பிரியமுள்ளவனையும்,

136. தங்க நிருவை தராசு அபிமானி தேவதைக்காக விலை கூறுபவனையும்,

137. தங்கம், வைரம், முத்து போன்றவைகளின் நிறங்களின் அபிமானி தேவதைக்காக தங்க ஆபரணங்களை செய்பவனையும்,

138. விச்வேதேவர்களுக்காக குஷ்டரோகியையும்,

139. குஷ்டம் தவிர மற்ற வியாதி அபிமானி தேவதைக்காக என்றும் இளைத்த உடலுடையவனையும்,

140. நடையின் அபிமானி தேவதைக்காக ஜனங்களின் பேரில் அபவாதத்தைச் சொல்பவனையும்,

141. நிறைவு அற்ற அபிமானி தேவதைக்காக தைர்யமாக பேசத் தெரியாதவனையும்,

142. கலைவதற்கு அபிமானி தேவனுக்காக நன்கு வெட்டுபவனையும்,

अनुवाकः १५—हसाय

143. பரிஹாஸ அபிமானி தேவதையின் பொருட்டு வியபசாரிணியையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

144. பாட்டுக்கு அபிமான தேவதைக்காக நன்கு வீணை வாசிப்பவனையும், சப்தப்பிரிவு ஸ்வரங்களின் எண்ணிக்கைகளில் சூரனையும்,

145. தண்ணீர் ப்ராணிகளின் அபிமானி தேவனுக்காக பலவர்ணத்துடன் கூடிய உடலை உடையவனையும்,

146. அன்பான பேச்சின் அபிமானி தேவனுக்காக் அழகு வாய்ந்த உடலை உடையவனையும்,

147. நாட்யாபிமானி தேவதைக்காக வாய் பாட்டானையும், மோர்சிங் வாத்யம் வாசிப்பவனையும், அல்லது புல்லாங்குழல் வாசிப்பவனையும், கிராம தலைவனையும், இரு கைகளைக் கொண்டு மிருதங்கம் போன்ற வாத்யம் வாசிக்கும் இம் மூவரையும்,

148. சந்தோஷ அபிமானி தேவதைக்காக நாட்டிய சபையில் எல்லோரையும் சந்தோஷிக்க செய்பவன் அல்லது நடனம் முடிந்ததை ஸபையோருக்கு தெரிவிப்பவனையும்,

149. அனுபவத்தால் மட்டும் தெரிந்துக் கொள்ளக் கூடிய சந்தோஷத்தின் அபிமானி தேவதைக்காக, வாயினால் பல வாத்யங்களை வாசிக்கும் திறமை உள்ளவனையும்,

अनुवाकः १६—अक्षराजाय कितवम्

150. சொக்கட்டான் காய்களின் அபிமானி தேவனுக்காக சூதாட்டத்தில் சிறந்தவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

151. க்ருதயுக அபிமானி தேவனுக்காக சூதாட்ட ஸபையின் தலைவனையும்,

152. த்ரேதாயுக அபிமானி தேவனுக்காக சூதாட்டத்தின் முடிவை கவனிப்பவனையும்,

153. த்வாபரயுக அபிமானி தேவனுக்காக சூதாட்டத்தில் தான் விளையாடாமல் வெளியில் இருப்பவனையும்,

154. கலியுக அபிமானி தேவனுக்காக சூதாட்டம் விளையாடி எல்லோரும் வெளியில் சென்ற பிறகும் அங்கேயே அம்மண்டப தூண் போன்று உட்கார்ந்து இருப்பவனையும்,

155. செய்ய முடியாத கார்யத்தையும் செய்து வைக்கும் அபிமானி தேவனுக்காக மூங்கி லின் உச்சியில் இருக்கப் பழக்குபவனையும் (தொம் பம் கூத்தாடி),

156. நடைபாதையின் அபிமானி தேவனுக் காக உபநயனம் செய்யப்பட்டவனையும்,

157. பிசாசுகளின் அபிமானி தேவர்களுக் காக வழிப் போக்கர்களின் உடைகளைப் பறித்துக் கொண்டு மலைமேல் இருப்பவனையும்,

158. தாகத்தின் அபிமானி தேவதைக்காக பசுக்களை விசேஷமாக கவனிக்கச் செய்பவனையும் அல்லது விரட்டுபவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

159. பாப அபிமான தேவதைக்காக விஷம், முள் இவைகளால் பசுக்களை கொல்பவனையும்,

160. பசியின் அபிமானி தேவதைக்காக பசுக்களை கொல்பவனையும்,

161. பசி, தாகம், இவ்விரண்டிற்கும் சேர்ந்த அபிமானி தேவதைகளுக்காக தரித்ரனையும் பசியை போக்க பசுவை கொன்று தின்பனிடம் அந்த பசு மாமிசத்தை பிச்சை எடுத்து சாப்பிட வந்தவனையும்,

अनुवाकः १७—सूत्रं

162. பூமி அபிமானி தேவதைக்காக எவன் ஒருவன் நடக்க முடியாமல் மரவண்டியை கைகளால் தள்ளிக்கொண்டு அதில் உட்கார்ந்து ஸஞ்சரிக்கிறானோ அவனையும்,

163. அக்னி தேவனின் பொருட்டு, பலத்தோடு கூடினவனையும்,

164. வாயு தேவனுக்காக சண்டாள ஜாதியில் பிறந்தவனையும்,

165. ஆகாசபிமான தேவனுக்காக மூங்கிலின் நுனியில் நாட்டியம் ஆடி பிழைப்பவனையும்,

166. த்யுலோக அபிமானி தேவனுக்காக மண்டையில் மயிர் இல்லாதவனையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

167. ஸூர்யனுக்காக பச்சை வர்ணக் கண்ணை உடையவனையும்,

168. சந்திரனுக்காக எப்பொழுதும் கண்ணை சிமிட்டுபவனையும்,

169. நக்ஷத்ர அபிமானி தேவர்களுக்காக குஷ்ட வியாதி பொட்டுக்களை (வெண்குஷ்டம்) உடையவனையும்,

170. பகல் அபிமான தேவதைக்காக வெண்மை உடலையும், சிவந்த கண்களை உடையவனையும்,

171. ராத்ரி அபிமான தேவதைக்காக கருத்த உடலையும் சிவந்த கண்களை உடையவனையும்,

अनुवाकः १८—वाचे पुरुषमालभते

172. வாக் அபிமானி தேவதையின் பொருட்டு பெருத்த உடலை உடையவனையும்,

173. வாயு அபிமானி தேவனின் பொருட்டு முன் சொன்ன உடம்பில் இருக்கும் ப்ராணன் முதலான 5 வாயுக்களையும் (ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமான வ்ருத்திகளை),

174. ஸூர்யனுக்காக ஸ்தூல சரீரத்தின் கண்களையும்,

175. சந்திர தேவனுக்காக மனதையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

176. திசைகளின் அபிமானி தேவதைகளுக்காக காதுகளையும்,

177. ப்ரஜாபதி தேவனுக்காக ஜீவாத்மாவையும்,

अनुवाकः १९—अथैतानरूपेभ्य आलभते

178. நல்ல சரீரமில்லாதவர்களும், பரிஹஸிக்கத் தகுந்த சரீரத்தை உடைய அபிமானி தேவர்களுக்காக ரொம்பவும் குள்ளனையும், அதிக உயரமுள்ளவனையும், ரொம்பவும் இளைத்தவனையும், ரொம்பவும் பெருத்தவனையும், அதிகம் வெண்மையாக உள்ளவனையும், மிகக் கருத்தவனையும் மிக கரடு முரடான உடலை உடையவனையும், அதிக மயிரோடு கூடினவனையும், மிகச்சிறிய பற்களை உடையவனையும், அதிக நீண்ட பற்களை உடையவனையும், அதிகம் கண் சிமிட்டுபவனையும், திறந்த கண்ணை மூடாதவனையும்,

179. கிடைக்காத வஸ்துவில் உள்ள ஆசையின் அபிமானி தேவதைக்கு சிற்றின்பத்திற்கு தகுதி இல்லாத வயது வந்த ஸ்திரீயையும் (மாதவிடாய் நின்ற வயதான),

180. அடைய வேண்டிய வஸ்துவில் உள்ள ஆசை அபிமான தேவதைக்கு விவாகம் ஆகாத சிறுமியையும், ஆலம்பனம் (யாகம்) செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastrj Collection; Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவ்விதம் இந்த நரமேதம் என்கிற ப்ரச்னத்தில் புருஷ, ஸ்த்ரீ ரூபமான மனுஷ்யர்களை தேவதைகளுக்காகச் சொல்லி அவர்களை ஹிம்ஸிக்காமல் விடுதலை செய்து விடவேண்டும்.

ஐந்தாவது ப்ரச்னம்

अनुवाकः—१ सत्य प्रपद्ये

தர்ச, பூர்ணமாஸேஷ்டியில், ஹோதா என்கிற ரித்விக்கினுல் படிக்கத் தகுந்த ஹோம ஸாதன மந்த்ரங்கள். இந்த ப்ரச்னத்தில் ஜபம், ஸாமிதேனி, தேவதாஹ்வானம் ஸ்ருகாதாபனம், ப்ரயாஜம், ஆஜ்யபாகம, ப்ரதானயாகம், இடாஹ்வானம, அனுயாஜை, ஸூக்தவாகம், சய்யுவாகம், பத்னீ ஸம்யாகம, ஆஜ்யஇடை, என்கிற கர்மாக்களில் உபயோகிக்க வேண்டிய மந்த்ரங்களை 13 அனுவாகங்களில் சொல்லப்பட்டுள்ளன. இதற்கு யாஜுஷஹௌத்ரம் என்று பெயர். அநேகமாக ரிக்வேத (ஆச்வலாயன்) ஹௌத்ரந்தான் நடைமுறையில் உள்ளது. சில பதங்களைத் தவிர மந்த்ர ஸ்வரூபம் ஒன்றுதான். இந்த மந்த்ரங்களின் ப்ராம்மண பாகமான 2வது காண்டம் 6வது ப்ரச்னம் 7வது அனுவாகம் "देवा वै ऋत्विजः முதல் பொருள் கூறப்படுகிறது.

ஹவிஸ் தயார் செய்து வைத்துக்கொண்டு அத்வர்யூ होतरेहि என்று கூப்பிட்டதும், ஹோதா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னது இடத்திற்கு (கார்ஹபத்யத்தின் வடபுறம்) வந்து ஜபிக்க வேண்டிய மந்த்ரத்தில் विकल्पवा(ு) என்ற மந்த்ரம் ஜபிக்க வேண்டும்.

வாக்கினாலும், மனதினாலும் உண்மையான கர்மாவை அடைகிறேன். ப்ரஜாபதியின் சரீர மான இந்த கர்மாவை அடைகிறேன். இந்த வஜ்ரம் போன்ற பஞ்சதச (15) ஸ்தோமத்திற்கு ஸமானமான மந்த்ரங்களால் எங்களை வெறுக்கிற சத்ருவை நாசப்படுத்துகிறேன். எவன் எங்களை பகைக்கிறானோ, நாங்கள் யாரை பகைக்கிறோமோ இவ்விரு விதமான பகைவனையும் நாசப்படுத்து கிறோம். மூன்று உலகத்தையும் இந்த கர்மாவின் மூலம சந்தோஷப்படுத்துகிறோம்.

अनुवाकः २—प्रवोवाजा अभिद्यवः सदान:

இதில் 12 மந்த்ரங்கள் உள்ளன. கடைசி மந்த்ரம் விகல்பம். இவைகள் ஸாமிதேனீ எனப் பெயருடையது. யாக தேவதைகளையும், அக்னி யையும் புகழ்கின்றன. இதில் இரண்டாவது மந்த்ரம் ப்ரம்ம யக்ஞத்தில் ஸாம வேத ஸ்தானத் தில் வேதாரம்பத்திலும் ஜபிக்கப்படுகிறது. अग्न आयाहि वीतये बर्हिषि ஹே அக்னியே ! யஜமானனின் ஹவிஸ் கொடுப்பதின் பொருட்டும், அதை, தேவர்கள் சாப்பிடுவதற்காகவும், யஜமானன் ஹவிஸ்ஸை கொடுக்கப் போகிறான். நீங்கள் உண்ணவேண்டும் என தேவர்களிடம் சொல்லி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வரவேண்டும். இங்குவந்து நீயே தேவர்களை கூப்பிடுபவனாக இந்த கர்மாவில் இருக்க பிரார்த்திக்கிறேன்.

இதுபோன்று 8-வது மந்த்ரம், நவக்ரஹ ஸ்தோத்திர மந்த்ரங்களில் சூர்யனின் அதிதேவதா மந்த்ரமாக சிலர் சொல்கிறார்கள். அதன் பொருள் ஏரிஂத்ரவ் ஸுக்ரதுஂ தேவர்களின் பொருட்டு தூதனாக அனுப்பத் தகுந்தவனும், தேவர்களை கூப்பிடுபவனும், எல்லா தேவர்களையும் அறிந்தவனும், இத்த நல்ல மங்களமான கர்மாவில் சம்பந்தபட்டவனுமான அக்னியை பிரார்த்திப்போமாக.

अनुवाकः ३—अग्ने महान् जातवेदः

இதில் முதல் 2 வாக்கியங்கள் ப்ரவரமந்த்ரம், மிகுதி நிகதம் எனப்படுகிறது. அந்தந்த யாகங்களில் (இஷ்டிகளில்) ஹவிர் பாகம் உள்ள ஆஜ்ய பாக தேவன் முதல் எல்லோரையும் கூப்பிடப்படுகிறது. இதில் உபாம்சு யாக தேவனாதலால் மெதுவாக அவனது நாமத்தை (பெயரை) சொல்ல வேண்டும். எல்லா தேவர்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருந்தாலும், வேண்டியவர்களின் பெயரை மட்டில் பிரித்து எடுத்துச் சொல்ல வேண்டும்.

अनुवाकः ४—अग्निर्होता यज्ञियान्

இந்த மந்த்ரத்தை ஹோதா படிக்கும் ஸமயம் அத்வர்யு ஹோமஸாதனமான ஆஜ்யத்துடன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூடிய ஜுஹு உபப்ருத் என்கிற இரண்டு பாத்ரங்களையும் எடுத்துக் கொண்டு ஹோமம் செய்ய (ப்ரயாஜை) வேதியின் தென்புறம் செல்ல வேண்டும்,

अनुवाक: ५—समिधो अग्न...वियन्तु

இங்கு ஸமித், தநூனபாத், இட், பர்ஹி:, ஸ்வாஹாகாரம் என்கிற 5ப்ரயாஜைகளின் ஹோம மந்த்ரங்கள் சொல்லப்படுகின்றன. இதில் இரண் டாவது ப்ரயாஜையில் சில கோத்ரக்காரர்களுக்கு நராசம் ஸம் என மாறுபடுகின்றன ஸ்வாஹாகார ப்ரயாஜையில் ஆஹ்வான மந்த்ரம்போல் வேண்டிய தேவர்களுக்கு மட்டும் மந்த்ரப்ரயோகம். உபாம் சுதேவதையின் பெயர் சப்தமில்லாமல் சொல்ல வேண்டும். ஹே ஸமித் என்கிற பெயருடைய தேவர்களே, இந்த நெய்யை அக்னி மூலம் பருகுங் கள். இதுபோல் மற்ற மந்திரங்களின் பொருளும் அமைந்துள்ளது.

अनुवाक: ६—अग्निर्वृत्राणि. . .वेतु

இது ஆஜ்ய பாகங்களான அக்னி, ஸோமன் என்கிற தேவதைகளின் பெருமையைச் சொல்லும் புரோனுவாக்யா, யாஜ்யா மந்த்ரங்கள் 4 உள்ளன. वार्त्रघ्नी पूर्णमासेऽनूच्येते வ்ருத்ர என்கிற சப்தத்தை உடைய மந்த்ரங்களை பூர்ணமாஸேஷ்டியிலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

वृधन्वती अमावास्यायां என்பதால் वृध् சப்தம் உள்ள நான்கு மந்த்ரங்களை தர்சேஷ்டியிலும் ஜபிக்க வேண்டும. இது ஸ்மார்த்தத்தில் अग्नये स्वाहा, सोमायस्वाहा எனகிற மந்த்ரங்களால் அக்னியில் பாதிக்கு கிழக்கில், வடக்கு தெற்கு பாகத்தில் நேருக்கு நேராக ஜ்வாலையில் செய்ய வேண்டும். இதற்கு சக்ஷுர் யாகம் என பெயரும் உண்டு.

अनुवाकः ७—अग्निर्मूर्धा. . .अग्न

தர்ச பூர்ணமாஸேஷ்டிகளின் ப்ரதான யாக யாஜ்யா புரோனுவாக்யா மந்த்ரங்கள், ஸ்விஷ்ட க்ருத் யாக மந்த்ரங்களும் கூறப்பட்டுள்ளன. அக்னி ப்ரஜாபதி, அக்னி ஷோமன், இந்த்ராக்னீ, இந்திரன், மஹேந்திரன், ஸ்விஷ்டக்ருத் என்கிற தேவர்களைப் பெருமைப் படுத்தும் மந்த்ரங்களா கும். ஸோமயாகம் செய்யும் முன்பு இந்திரன் ஸாந்நாய்ய யாக தேவதையாகவும் ஸோமயாகம் செய்தபிறகு மஹேந்திரன் தேவதையாகவும் ஆகிருன்.

अनुवाकः ८—उपहूतं. . .उपहूत:

புரோடாச இடாஹ்வாந மந்த்ரம். பசுவை இடா எனக் கூறப்படுகிறது. பசுவின் உருவைக் கொண்ட தேவதையை இந்த இஷ்டி தேசத்திற்கு ரதந்தரம் முதலிய ஸாம ஸ்தோத்திரங்களுடன் ப்ருதிவீ முதலிய லோகங்களுடனும் இங்குவந்து இநத யாகத்தில் நெய் ஸமருத்தி ஏற்படுததித்தரு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வதுபோல் மழை உருவமாகவும் இருந்து எல்லா ஜீவராசிகளுக்கும் க்ஷேமத்தைக் கொடுத்து மேன் மேலும் உனது சரீரத்தில் இருந்து உண்டாகிற நெய்யை யாகங்களின் மூலம் தேவர்களுக்கு கொடுக்கும் பாக்யமும் (சக்தியும்) அவர்கள் அதைப் பருகி எல்லா ஜீவராசிகளுக்கும் க்ஷேமம் தர பிரார்த்திக்கிறேன் என மந்த்ரம் கூறுகிறது.

अनुवाक: ९—देवं बर्हिः. . .वीहि

பர்ஹி:, நராசம்ஸம், ஸ்விஷ்டக்ருத் அக்னி: என்கிற மூன்று அனூயாஜ யாக மந்திரங்கள். இந்த தேவதைகள் என்னால் கொடுக்கப்படும் நெய் ஹவிஸ்ஸை சாப்பிட்டு எஜமானனின் பொருட்டு அதிகமான தனத்தைக் கொடுக்கட்டும் எனப் பிரார்த்திக்கிறான்,

अनुवाक: १०—इदं द्यावापृथिवी. . .नमोदेवेभ्य:

இந்த மந்த்ரங்களுக்கு ஸூக்தவாகம் எனப் பெயர். இந்த யஜமானன் ஆஸ்திக்ய புத்தியுடன் இந்த இஷ்டியில் உங்களுக்கு ஹவிர்பாகங்களைக் கொடுத்து த்ருப்தியடைந்த உங்களது ப்ரஸாதத்தால் பெருமையை அடைகிறோம், என்கிற வார்த்தைகளானது மனுஷ்யர்களாலோ, தேவர்களாலோ சொல்லப்படுகிறது. இவைகள் மங்களமான வாக்யங்கள், இதன் மூலம் நாங்கள் பெருமை அடைகிறோம் மேலும் இந்த யஜமானன் தீர்க்கா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யுஸ்ஸையும், நல்ல புத்ராதிகளையும் தன்னைச் சேர்ந்தவர்களால் பூஜிகக்த்தகுதியையும், மேன் மேலும ஸோமம் முதலிய யாகங்களையும், எல்லா வற்றின் அன்பையும் விரும்புகிருன். அதை இவன் அடைய இந்த தேவர்கள் அங்கீகாரம் செய்து அவன் இந்த ப்ரயோஜனங்களை அடையும் படி செய்யட்டும். இதை அக்னியானவன் தேவர் களிடம் கூறட்டும், நாங்கள் மனுஷ்யர்களாக இருந்து அனுமோதனம செய்கிறோம்.

இஷ்டம் என்கிற ஸ்வர்கத்தை அடைவிக்கிற யாகம செய்யும் புண்யத்தையும், வீதம் என்கிற சாப்பாட்டுக் குண்டான த்ரவ்யங்களையும் நாங்கள் அடையும் பொருட்டு அதன் இடையூறுகளை த்யாவா ப்ருத்வீ தேவர்கள் தடுத்து எங்களை காப்பாற்றட்டும. இதற்காக இந்த இஷ்டியும், இந்த ஹவிஸ்ஸை தேவர்களும் ஸ்வீகரிக்கட்டும, எல்லா தேவர்களின் பொருட்டு நமஸ்காரம் என் வாக்கினுல் சொல்லப்படுகிறது. இந்த மந்த் ரங்கள் ப்ரஸ்தரம் எனச் சொல்லப்படும் தர்ப்ப முஷ்டி ஹோம காலததில் படிக்கத்தகுந்தது. இதில் ஆயுஸ் முதலான பிரார்த்தனு ரூபமந்த் ரங்கள் ஸ்மார்த்த ப்ரயோகத்திலும் உபயோகிக் கிருர்கள்,

अनुवाक: ११—तच्छंयो: . . .चतुष्पदे

சய்யுவாக மந்த்ரம். ப்ருஹஸ்பதியின் புத்ர ஞன சம்யு என்பவர் இந்த யாகத்தையும், யஜ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மானனையும், உசித காலத்தில் தேவர்களோடு சேரும்படியும் தேவமனுஷ்ய நிமித்தமான இடையூறுகளைப் போக்கி எல்லா பாபங்களுக்கும் மருந்து போல் இந்த கர்மா அமைவதுடன் நன்கு பூர்த்தியடைந்து எங்களது இருகால்கள், நான்கு கால்கள் ஜீவராசிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பவராக வேண்டும் என்றும் அதற்கு சய்யு அனுக்கிரஹம் செய்ய பிரார்த்திக்கிறேன். இம்மந்திரம் பஞ்ச சாந்தியில் சொல்லப்படுகிறது.

अनुवाक: १२—आप्यायस्व. . .संशिशाधि

பத்னி ஸம்யாஜ ஹோம மந்த்ரங்கள். चत्वारः पत्नीसंयाजाः என்பதால் பத்னீஸம்யாஜ ஹோமம், ஸோமன், த்வஷ்டா தேவபத்னீ, அக்னீ க்ருஹபதி என்கிற 4 தேவர்களுக்கு ஹோமம் செய்யப்படுகிறது. மேலும், ராகா, ஸினீவாலீ, குஹூ: என்கிற 3 தேவதைகளுக்கும் ஸூத்ரத்தை அனுஸரித்து சேர்த்து அனுஷ்டிக்கப்படுகிறது. முதல் 4 மந்த்ரங்களின் ப்ரதீகங்கள் சொல்லப்படுகின்றன அவைகளில் 2, 4 வது காண்டத்திலும், 3வது காண்டத்திலும் மற்ற இரண்டிற்கும் பொருள் கூறப்படுகிறது. இந்திரன், அக்னீ, அச்வினீ, ஸோமன், ருத்ர, வருணன் இவர்களுடைய பத்னீ. இந்த்ராணீ அக்னயீ, அச்வினீ ராட், 21 ரோதஸீ வருணானீ என்பவர்கள் இவர்களது போஜனம் உசிதமான காலத்தில் இருக்கட்டும் என்கிறது மந்த்ரம். वियन्तु देवी: यऋतुर्जनीनाम् (இங்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பர்த்ரு போஜனத்திற்கு பிறகுதான் ஸ்த்ரீ போஜனம் என்கிறது தர்ம சாஸ்த்ரம் விளக்கப் படுகிறது). முதலில் ஸோமனுக்கும், த்வஷ்டா விற்கும் ஹோமம் ஆகிறது. பிறகுதான் தேவ பத்னீ ஹோமம். ஆகையால் இவ்விதம் சொல் கிறது வேதம்.

अनुवाकः १३—उपहूतं रथन्तरं. . .उपहूता

ஆஜ்யேடா மந்த்ரம் முதலில் சொல்லப்பட்ட இடா மந்த்ரம் யஜமான ஸம்பந்தம். இது பத்னீ ஸம்பந்தம். ஆகையால் ஆங்காங்கு ஸ்த்ரீலிங்கப் பதப்ரயோகங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்து டன் யாஜுஷ ஹௌத்ர மந்த்ரங்கள் முடிவடை கிறது.

ஆருவது ப்ரச்னம்.

[illegible] பாசுகஹௌத்ரம்

15 அனுவாகங்கள் அடங்கியது. இம்மந்த் ரங்கள் சில மைத்ராவருணனாலும், சில ஹோதா வாலும் படிக்கத் தகுந்தவைகள். ஸம்ஹிதை முதல் காண்டம் மூன்ருவது ப்ரச்னத்தில் சொல்லப் பட்ட சில மந்த்ரங்களால் தயார் செய்து கொண்டு வரப்பட்ட யூபத்திற்கு நெய் தடவும் போதும், தர்ப்பக் கயிரைகட்டும் போதும்; எழுப்பி நிருத் தும் போதும் அத்வர்யூவின் ப்ரைஷத்தை அனு சரித்து ஹோதாவால் படிக்கத்தகுந்தவை. இரண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

டாவது அனுவாகம் ப்ரயாஜ யாக ப்ரைஷம். அடுத்து ப்ரயாஜை யாஞ்யா பர்யக்னிகரணம், இரு அத்ரிகுப்ரைஷம் (अध्रिगुप्रैषः), ஸ்தோகீயம், வபா, புரோடாச ஸ்விஷ்டக்ருத் புரோனுவாக்யா அடுத்து இவற்றின் யாஜ்யா, மனோதாஸூக்தம், அங்க யாக, ப்ருஷதாஜ்யை யாக, ஸ்விஷ்டக்ருத் யாக ப்ரைஷம், அடுத்து இவைகளின் யாஜ்யா, அநூயாஜப்ரைஷம், அடுத்து யாஜ்யா, ஸூக்த வாகப்ரைஷம் என 15 அனுவாகங்கள். இரண்டாவது அத்ரிகுப்ரைஷம் தவிர மற்ற ப்ரைஷங்கள் மைத்ராவருணனைச் சேர்ந்தது. மற்ற மந்த்ரங்கள் ஹோதாவால் படிக்கத்தகுந்தது.

अनुवाकः १—अञ्जन्ति त्वा अध्वरे

தேவர்களை விரும்பும் ரித்விக்குகள் அவர்களுக்கு ருசிகரமான ஆஜ்ய த்ரவ்யத்தால் மரத்தில் (யாகயோக்யமான) செதுக்கப்பட்ட யூபமே உன்னை ம்ருதுவாகச் செய்கிறார்கள். நீ கொஞ்ச நேரத்தில் எழும்பியதும் உயர்ந்தவனாக ஆகபோகிறாய். இக்கர்மாவால் பணத்தை அதிகம் ஸம்பாதிக்க போகிறாய். பெருமையை கொடுக்ககூடிய இந்த வேதியின் பக்கத்தில் உனது ஸ்தானம் ஏற்படுகிறது. இவற்றுக்காக உன்னை ம்ருதுவாகச் செய்கிறார்கள் என்பது முதல் மந்திரக்கருத்து.

ஆறாவது மந்த்ரம்—युवा सुवासाः

தனக்கு ஸ்வாதீனமான நல்ல புத்தியை உடையவர்களும் மனதினால் தேவர்களை அடைய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விரும்புபவர்களுமான யஜமானன் முதலானோர், உனது குணங்களைச் சொல்லும் ஸ்தோத்ரத்தால் ஹே யூபமே, உன்னை உயர்வாக நிறுத்துகிறார். கள். நீயோ இந்த தர்ப்ப கயிறால் கட்டப்பட்டவனாக இங்கு உள்ளாய் இது நல்ல அழகான வஸ்த்ரம் கட்டியுள்ள யுவா ஒரு ஸமூகத்தில் முதன்மையாக வருவதுபோல் உள்ளது. இதுபோன்ற கர்மாவில் உபயோகப் படுவதால் ஒவ்வொரு தினமும் பெருமையுடன் விளங்குகிறாய் என்பது பொருள்.

இம்மந்திரம் ப்ரதிதினம் ஸ்நானத்திற்கு பிறகு வஸ்திரதாரண ஸமயத்திலும் சிராத்த காலத்தில் வஸ்த்ரதான ஸமயத்திலும் ஜபிப்பது ஆசாரத்தில் உள்ளது. பசு யாகத்தில் யூபத்தை ரசனையால் (தர்ப்பகயிருனால்) சுற்றும் போது சொல்லும் மந்திரம்.

अनुवाकः २—होतायक्षत्

அக்னி, தநூநபாத், நராசம்ஸம், இட் பர்ஹிஸ், துர: உஷாஸாநக்தா, தைவ்யா ஹோதாரா, திஸ்ரோதேவீ:, த்வஷ்டா வனஸ்பதி, அக்னி ஸ்விஷடக்ருத், என்று ப்ரயாஜ யாகம் செய்யும் காலம். இந்தப் பெயர் கொண்டவர்களும் பெருமை வாய்ந்தவர்களுமான ப்ரயாஜை தேவர்கள் ருசிகரமான நெய் சாப்பிட ஹே ஹோதாவே, யாஜ்யைப் படி என மைத்ராவருணன் ஹோதாவை ஏவுகிறான்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

एकादशप्रयाजान् यजति

என்று பசு கர்மாவில் 11 ப்ரயாஜைகள். தர்ச பூர்ண மாஸேஷ்டியில்

पञ्च प्रयाजा इज्यन्ते

ஐந்துதான் இங்கு அதிகம். இங்கு சில கோத்ரத்தில் உண்டானவருக்கு இரண்டாவது ப்ரயாஜையில் விகல்பம் இருப்பதால் 12 மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

अनुवाकः ३—समिद्धो अद्य

இம்மந்த்ரங்கள் மைத்ராவருணனால் ஒவ்வொன்றாகச் சொல்ல சொல்ல ஹோதா ஒவ்வொரு யாஜ்யையும் படிக்க அத்வர்யூ ஹோமம் செய்கிறார். இவைகளுக்கு ஆப்ரீ என்கிற பெயரும் உண்டு

नाराशंसो द्वितीयः प्रयाजः वसिष्टशुनकानां तनूनपात् इतरेषां

என்கிற ஆபஸ்தம்ப ஸூத்ரத்தை அனுசரித்து வசிஷ்ட, சுனக கோத்ரத்தில் உண்டானவர்கள் இரண்டாவது ப்ரயாஜையாக நராசம்ஸ யாகத்தையும் மற்ற கோத்ரக்காரர்கள் தநூநபாத் யாகத்தையும் செய்ய வேண்டும் என்பது.

अनुवाकः ४—अग्निर्होतानः

பசுவை பர்யக்னிகரணம் செய்யும் சமயம் மைத்ராவருணன் படிக்கவேண்டிய மந்த்ரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः ५—अजैदग्निः

இம்மந்த்ரம் மைத்ராவருண அத்ரிகுப்ரைஷம் என்கிற பெயருடையது.

अनुवाकः ६—दैव्याः शमितारः

இது ஹோதாவால் படிக்கத்தகுந்த அத்ரிகுப் ரைஷம். இதில் பசுவை ஸம்ஞபனசாலேக்கு அனுப் பியதும், பசுவின் உயிரை போக்க உள்ள தேவ, மனுஷ்ய சமிதாக்களேக் கூப்பிட்டு இவ்விதமாக கார்யங்கள் செய்ய வேண்டும் என ஹோதா கூறு கிருர். உங்களது ஆயுதங்களே இவ்விதம் வைக்க வேண்டும், பசுவை வபை எடுக்க வசதி யாக படுக்க வைக்க வேண்டிய முறை மற்றும் அங்கங்களின் அமைப்பு அதை எடுக்கும் முறை இவைகளேக் கூறி, இந்த கார்யம் கொடுமை வாய்ந்தது என எண்ணி முறை தவிர செய் வதோ, செய்யாமல் இருப்பதோ கூடாது எனக் கூறி எதனுல் தேவர்களில் இக்கார்யம் செய்யும் அத்ரிகு, அபாபன் என்னும் இருவரும் நன்கு இவ் விஷயத்தை அறிந்து தேவர்களுக்கு உண்ண அறுகதையாகச் செய்கிருர்களோ அதுபோன்று மனுஷ்யர்களேச் சேர்ந்த நீங்களும் செய்ய வேண்டும் எனச் சொல்லப்படுகிறது.

अनुवाकः ७—जुषस्व सप्रथस्तमम्

பசுவின் உயிரைப் போக்கியதும் அதன் மத்ய பாகத்தில் இருந்து. மிகவும் முக்யமானதும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவர்களுக்கு அதிக ப்ரியமானதுமான வபை எனச் சொல்லப்படும் மெல்லிய வபையைக் கொண்டு வந்து அக்னியில் காட்டி அதன் மேல் நெய்யை விட்டு காய்ச்சி பக்வப்படுத்தும் ஸமயம் அதிலுள்ள நெய் துளிகள் அக்னியில் விழுகிறது. அதை அக்னி உண்ண வேண்டும். அது மிகவும் ருசிகரம், உனக்கும் ப்ரியமானது என்று 6 மந்திரங்களால் அக்னியையும், மற்றும் தேவர்களையும், அந்த நெய்த் துளிகளையும் பெருமைப்படுத்தப்படுகின்றன.

अनुवाकः ८—आवृत्रहणा

இந்த அனுவாகத்தில் வபா ஹோமத்திற்காக அத்வர்யுவால் எடுக்கும் ஸமயம், புரோனுவாக்யா மந்திரமும், ஹோமத்திற்கு முன்பு இது ஸம்பந்தமாக ஹோதாவை, யாஜ்யா படிக்கச் சொல்லியும் இது போன்று வபா புரோடாசத்திற்கும், ஸ்விஷ்டக்ருத் யாகத்திற்கும் புரோனுவாக்யா யஜ்யா ப்ரைஷங்கள் சொல்லப்படுகின்றன. இவ்விரண்டு அனுவாகங்களும் மைத்ராவருணனால் படிக்கத் தகுந்தது.

अनुवाकः ९—गीर्भिर्विप्रः

மைத்ராவருணனின் உத்திரவை அனுசரித்து வபா, வபா புரோடாசம், ஸ்விஷ்டக்ருத் புரோடாச யாக காலத்தில் ஹோதா படிக்கும் யாஜ்யா மந்திரங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः १०—ऌ्व ह्यग्ने

மஞ்ஞேதாஸூக்தம், 13 மந்திரங்கள். இவை ஹ்ருதயம் முதலான அங்கங்களை ஹோமத்திற்காக எடுத்து வைக்கும் ஸமயம் அக்னியை பிரார்த்தித்து அக்னியின் பெருமையையும், அங்கங்களின் பெருமையையும், தேவர்களின் அனுக்ரஹத்தையும் ப்ராத்திப்பதாக அமைந்துள்ளன.

ஜகத்தை காப்பவருமான ஹே அக்னியே, வேலைக்காரர்களுடன் கூடிய அதிகமான பணத்தை எங்களிடம் சேர்ப்பாயாக. எனது பிள்ளை, பேரன் இவர்களுக்கும் பசுக்களை ஸம்பாதித்துக் கொடு, எங்கள் முன்னோர்களைச் சேர்ந்த ஆஹாரத்தை எங்களுக்கும் கொடு, எங்களுக்கு நல்ல பெருமையை உண்டுபண்ணுவாயாக என்றும், பணத்தை பல வழியாக பெருகச் செய்பவருண அக்னியே, உன் அருளால் அதிகம் பணம் அடைவோம், பலரால் கொண்டாடப்படுகிற உன்னிடம் அதிகமான தனம் இருப்பதால், உன்னை பூஜிக்கும் எங்களுக்கு அதைக் கொடுத்து எங்களை பெருமை உடையவர்களாகச் செய்வாயாக எனக் கடைசி இரண்டு மந்த்ரங்கள் கூறுகின்றன.

अनुवाकः ११—आभरतं षिक्षतं

அங்க, ப்ருஷதாஜ்ய, ஸ்விஷ்டக்ருத் யாகங்களின் புரோனுவாக்யா, ப்ரைஷ மந்த்ரங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இது மைத்ராவருணன் படிக்க வேண்டியது. இந்த மந்த்ரங்கள் வபா, வபா புரோடாசம் அங்கயாகம் இவைகளின் இந்த்ராக்னீ தேவதையும். ப்ருஷதாஜ்யம் (நெய் தயிர் கலந்து) வனஸ்பதி தேவதையும், ஸ்விஷ்டக்ருதக்னியையும் உடைய பசுயாகத்தில் உபயோகிக்கத் தகுந்தவை. வெவ்வேறு தேவதைகளை உடைய பசுயாகங்கள் பலவுள்ளன.

வஜ்ரத்தை கையில் உடைய ஹே இந்த்ராக்னீ தேவதையே, எங்களின் பொருட்டு நன்றாக செய்யப்பட்ட தனத்தை கொண்டு வரவும், உங்களுடைய திறமையால் எங்களை காக்க வேண்டும். எந்த உயர்ந்த சூர்ய கிரணங்களால் எங்கள் முன்னோர்கள் ஒன்றாக சேர்ந்தார்களோ அவைகள் உங்களுக்கு அடங்கியவை. ஆகையால் எங்கள் முன்னோர்களைப் போல் எங்களையும் காப்பாற்ற வேண்டும் என்பது அங்க புரோனுவாக்யா மந்த்ரங்கள் பொருள்.

अनुवाकः १२—उपोहयत्

மைத்ராவருணனின் வேண்டுதலை அனுசரித்து அங்க, ப்ருஷதாஜ்ய ஸ்விஷ்டக்ருத் யாக காலத்தில் ஹோதா படிக்கவேண்டிய யாஜ்யா மந்திரங்கள்.

अनुवाकः १३—देवं बर्हिः सुदेवम्

एकादशानूयाजान् यजति

என்கிற வாக்யபடி பசுவில் 11 அனுயாஜா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹோமங்கள் அதன் புரோனுவாக்யா ரூபமான ப்ரைஷ மந்த்ரங்கள் மைத்ருவருணன் சொல்ல வேண்டியது.

अनुवाकः १४—देवं बर्हिः

ஹோதா படிக்க வேண்டிய அனுயாஜா யாஜ்யா மந்திரங்கள் 11.

अनुवाकः १५—अग्निमद्यहोतारम्

மைத்ராவருணன் படிக்கவேண்டிய ப்ரைஷ மந்திரம்.

இந்த யஜமானன் அக்னியை ஸாக்ஷாத்தாக ஹோதாவாகவும், பாகம் செய்ய வேண்டிய வபா, ஹவிஸ் இவைகளையும் புரோடாசத்தையும் பக்வம் செய்து கொண்டும், யூபத்தில் பசுவைக் கட்டியும், பசு ஸம்பந்தமான மேதஸ் என்கிற தெம்பை கொடுக்கக்கூடியதையும், வபா அங்கங்கள் இவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய இந்த்ராக்னீ தேவதைகள், ப்ரியமாக சாப்பிடும்படியும், புரோடாசத்தை உண்டு எங்களை பெருமைப்படுத்தவும், ரிஷி குலத்தில் உண்டான உன்னை இங்கு வந்து என்னால் கொடுக்கப்படும் வபா முதலிய ஹவிர் பாகங்களை ப்ரியத்துடன் உண்ணும்படி தேவர்களை கூப்பிட உன்னை இங்கு ஹோதாவாக நியமித்துள்ளான். இவைகளை உண்பதற்காக ரித்விக்குகள் தேவதைகளின் பொருட்டு ஹோமம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்கிருர்கள். இதைக் கொடுக்கும் யஜமானன் ப்ரயோஜனத்தை ச்ரமமில்லாமல் அடைய முயற்சி செய்வாயாக. ஹே ஹோதாவே, என்னால் ப்ரியத்துடன் ஏவப்படுகிருய் (வேண்டப்படுகிருய்). நீ மங்கள வார்த்தைகளை உடைய ஸூக்தவாகம் என்கிற மந்திரங்களை அப்பேர் உடைய தேவன் ஸந்தோஷப்படும்படி படிப்பாயாக என்று மைத்ரா வருணன் ஹோதாவை குறித்து வேண்டுகிருன் என்பது பொருள்.

ஏழாவது ப்ரச்னம்

14 அனுவாகங்கள் கொண்டது. இப் ப்ரச்னத்திற்கு அச்சித்ரம்: அச்சித்ரம் என்று பெயர், எந்தெந்த ப்ரயோகத்தில், ப்ரகரணத்தில் சொல்லப்படாததும், அவச்யமானதுமான மந்திரங்களைச் சொல்லி அந்த இடத்தை பூர்ணம் செய்வதால் இப்பெயர் ஏற்பட்டது. முதல் 3 அனுவாகங்களில் தெரிந்தோ அறியாமலோ ஏற்படுகிற பிசகுகளுக்கு பரிஹாரம் சொல்லப்படுகின்றது.

தர்ச பூர்ணமாஸ ஸம்பந்தமான ப்ராயச்சித்தம் முதல் அனுவாகத்திலும், அக்னி ஹோத்ர விஷயமானது இரண்டாவது அனுவாகத்திலும், மூன்ருவதில் ஹோமாதாரமான முக்யாக்னி இல்லாவிடில் அதற்கு பதிலான அக்னிகளையும் சொல்லப்படுகிறது. அடுத்து 3 அனுவாகங்களில் தர்ச பூர்ணமாஸேஷ்டியில் அநேகமாக யஜமானனால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சொல்ல வேண்டிய மந்த்ரங்கள் சொல்லப்படு கின்றன. ஏழாவது அனுவாகம் முதல் ஸோம யாக ஸம்மந்தமான விட்டுப்போன மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளன. பொதுவாக ச்ரௌத கர்மா ப்ராயச்சித்த மந்த்ரமும் சொல்லப்படு கிறது. இவ்விதம் அவப்ருதம் முடிய ஆங்காங்கு அவரவர்கள் சொல்லவேண்டிய மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளதால் இதற்கு இடவெளியை நிரப்புவதால் அச்சித்ர காண்டம் எனப்பெயர்.

अनुवाकः १—सर्वान् वा एषः

எட்டுவிதமான தோஷ பரிஹாரம் இந்த அனு வாகத்தில் தர்ச பூர்ணமாஸ இஷ்டியின் ஸம்மந்த மாக உள்ளது. 1. இஷ்டிக்கு ஸங்கல்பம் செய்து அக்னியிடம் தன்னையும் தனது விருப்பங்களை யும் ஒப்புவித்து ஹோமம் செய்யாமல் அவசர நிமித்தமாக வெளியூர் செல்பவன் செய்ய வேண்டிய ஹோமம். 2 இஷ்டியில் அன்வாதனம் செய்தபிறகு ஆஹவநீயாக்னி அணைந்து போனால் செய்ய வேண்டிய பரிஹாரம் (உபஸ்தானம்) 3. அக்னிஹோத்திரியின் அக்னி தனது இடத்தை விட்டு வெளியில் தெரித்து விழுந்தால் குறிப்பிட்ட இடத்திற்குத் தாண்டி விழுந்தால் அந்த அக்னியை எடுத்து ஒன்று சேர்க்க மந்திரம். 4. குறிப்பிட்ட இடத்திற்குள்ளேயே விழுந்தால் செய்யவேண்டிய கார்யம். 5. தர்சேஷ்டியில் இரண்டாவது ப்ரச்ன ஆரம்பத்தில் சொன்னபடி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரிக்கப்பட்ட கன்று தாயின் மடியை ஊட்டி விட்டால் அதன் பரிஹாரம். 6. தர்சேஷ்டியில் தர்சத்தன்று மாலை கறந்து வைத்த பால் நஷ்டமாகி ஹோமத்திற்கு தகுதியில்லாமல் போனால் செய்ய வேண்டியது. 7. இதுபோல் இரண்டு வேளை (பால் தயிர்) ஹவிஸ் தோஷமடைந்தால் செய்ய வேண்டியது. 8 இஷ்டி ஸங்கல்பத்திற்குப் பிறகு பத்னீ ரஜஸ்வலா (பஹிஷ்டை) ஆகி விட்டால் செய்ய வேண்டிய பரிஹாரங்கள் கூறப்பட்டுள்ளன.

1. மந்த்ரம் சொல்லி ஹோமம். 2. உபஸ்தானம் மனத்தால். 3. தெரித்து விழுந்த அக்னியை மந்த்ரம் சொல்லி எடுத்து ஒன்று சேர்ப்பது. 4. எங்கு நெருப்புப் பொறி விழுந்துள்ளதோ அங்கேயே சென்று யாகம் செய்வதாக தீர்மானிப்பது. 5. பரிஹாரமாக வாயுவை தேவதையாக यवागूः (கஞ்சி) தயார் செய்வது. 6: முதல் தினம் மாலையில் பால் தோஷமடைந்தால் இந்திரனின் பொருட்டு நெல்லை புரோடாசத்திற்காக எடுத்துவைத்து மறுதினம் புரோடாசம் செய்து ஹோமம் செய்ய வேண்டும். காலை பாலாகில் அதை காய்ச்சி பக்குவம் செய்ய வேண்டும்.

எப்படியும் மறுபடி கன்றை மந்த்ர பூர்வமாக தாயிடமிருந்து பிரித்து பால் தயிர் தயார் செய்து ஹோமம் செய்ய வேண்டும். 7. இரண்டு வேளையும் தோஷமாகி விட்டால் இந்திரனைக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குறித்து ஐந்து மடக்கு (ஒரு அளவு) அன்னம் தயார் செய்து அதை ஹோமம் செய்யும் முன் எட்டு கபால புரோடாசத்தால் அக்னிக்கு ஹோமம் செய்து, வேறு பால் கறந்து இஷ்டியை செய்ய வேண்டும். 8. இஷ்டிக்கு ஸங்கல்பம் செய்த பிறகு பத்னீ பஹிஷ்டையாக ஆகிவிட்டால் அவளை வீட்டை விட்டு ஒதுக்கி வேதிமத்யத்தில் பத்னீ ஸ்தானத்தில் ஒரு தர்பை முஷ்டியைப் பரப்பி ஹோமம செய்து 3 தின வ்ரதம் முடிந்ததும் பத்னீயை மந்த்ர பூர்வமாக கூப்பிட வேண்டும்.

अनुवाकः २—पद्विषयणेव

அக்னிஹோத்ர ஹோமத்திற்காக பாலைக் காய்ச்சும் போதோ அல்லது மற்ற ஸமயத்திலோ தவறுதலாக பால் கீழே கொட்டிவிட்டால், அதிலிருக்கும் மிகுதி பாலை प्रजापते न त्वत् என்ற மந்திரத்தைச் சொல்லி, தனது கிருஹத்திற்கு வடபுறம் உள்ள எறும்புகளால் நிர்மாணிக்கப்பட்ட பாம்பு புற்றில் விட்டு, भूः என்று உபஸ்தானம் செய்து விட்டு, வேறு பசுவிடம் பால் கறந்து அக்னி ஹோத்ர ஹோமம் செய்ய வேண்டும்.

2. அக்னிஹோத்ர ஹோமஸாதன பால் பூச்சி, புழு இவைகளால் அசுத்தமாகில் முன் போல் செய்ய வேண்டும். இஷ்டியில் ஸாந்நாய்ய ஹோம த்ரவ்யம் பூச்சிகளால் அசுத்தமானால் நடுப் புரச இலையால் பரிதிக்கும் அக்னிக்கும் நடுவில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

सृपि: என்ற மந்திரத்தால் பூமியில் விட்டு, வேறு மாடு கறந்து ஸாந்நாய்ய ஹவிஸ் தயார் செய்து ஹோமம் செய்ய வேண்டும்.

3. அக்னிஹோத்ர ஹவிஸ்ஸில் மழைத்துளி விழுந்தால் விலுகிவிடும். அதை ஹோமம் செய்தால் யஜமானனுக்கு ரோகம் வரும். ஹோமம் செய்யாவிடில் கர்மா நஷ்டம். ஆகையால் मित्रो जनान् என்கிற மந்த்ரத்தால் ஹோமம் செய்து வேறு பசு கறந்து ஹோமம் செய்ய வேண்டும். மித்ரன் என்கிற தேவன் எல்லா ஜனங்களின் ஸாமர்த்தியம் அறிந்து, ஜனங்களை நமக்கு அநுகூலமாகச் செய்வதுடன், பூமி, ஆகாசம் இவை இரண்டையும் தாங்குகிறான். மேலும் ஜனங்களை சுறுசுறுப்பு உள்ளவர்களாக வெளியில் ப்ரகடனம் செய்கிறான். ஹே மனுஷ்யர்களே! உண்மையான கர்ம பலத்தை அடையும் பொருட்டு, ஹோமம் செய்வீர்களாக எனக் கூறுகிறான். இதைச் செய்து தோஷமற்றதாகச் செய்யுங்கள். இம் மந்திரம் காலை ஸந்த்யோபஸ்தானத்திலும் கொஞ்சம் மாறுதலுடன் வருகிறது.

4. அக்னிஹோத்ர ஹோமம் செய்யும் போது முதல் ஹோமத்தின் மேல் இரண்டாவது ஹோமத்ரவ்யம் சிந்தினாலும் த்ரவ்யம் நாசமானாலும், यद्वेश्य என்கிற மந்திரத்தால் ஒரு ஸமித்தை அக்னியில் வைத்து மிகுதி த்ரவ்யத்தை ஹோமம் செய்து வேறு பசு கறந்து ஹோமம் செய்ய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டும். ஹே ஸமித்தே! தேவர்களின் ரஹஸ்ய நாமாக்களின் இடத்தை அறிந்து அங்கே இந்த ஹவிஸ்ஸை சேர்ப்பிப்பாயாக, என்று மந்த்ரார்த் தம். இதை சிலர் ஔபாஸன ஹோமத்திலும் ப்ராய சித்தமாக செய்கிறுர்கள். இவ்விதம் அக்னி ஹோத்ர ஸம்மந்தமாக சொல்லப்பட்டது.

5. கடைசீ ப்ராயச்சித்தம். இஷ்டியில் ப்ரயாஜை ஹோமத்திற்கு முன் அக்னி தனது இடத்தில் இருந்து எந்த திக்கில் தெரித்து விழுகிறதோ அந்த திக்கில் இருக்கும் (ஸ்தா னத்தை உடைய) யஜமானன், பத்னீ உள்பட ரித்விக்குகள் கஷ்டத்தை அடைகிருர்கள். அது நீங்க ஸ்ருவம் என்கிற கருவியின் அடிபாகத்தால் அக்னியைத் தொட்டு पातमेमा என்கிற மந்த்ரத் தால் பிரார்த்திக்க வேணும். பிறகு அந்த பொறியை எடுத்துவந்து அக்னியுடன் सहस्र शृङ्गा। என்கிற மந்த்ரம் சொல்லி சேர்க்க வேண்டும்.

अनुवाकः १—विपा एषः

எந்த யஜமானனின் அக்னியானது அரணி யால் ஏற்றப்பட்டதோ அது தொலைந்ததால் நஷ்டமாகிறது. அரணியை கடைந்து அக்னி உண்டாவதற்கு தாமதமானுல், ஹோம காலத்தில் அதற்குப்பதிலாக வேறு லௌகிகாக்னியும், (வீட் டில் உள்ளது) அது கிடைக்காவிடில் பெண் வெள் ளாட்டை கொணர்ந்து அதன் வலது காதையும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதுவும் கிடைக்காவிடில் வேதாத்யயனம் செய்த ப்ராம்மணனின் வலது கையிலும், அவ்வித ப்ராம்மணன் கிடைக்காவிடில் தர்ப்ப ஸ்தம்பத்திலும், அது கிடைக்காவிடில் தீர்த்தத்தி லும் ஹோமம் செய்த பிறகு, அரணியைக் கடைந்து அக்னியை உண்டுபண்ணி மந்த்ர பூர்வ மான இடத்தில் வைத்து, பிறகு முறைப்படி ஹோமம் செய்ய வேண்டும். இதில் எந்தெந்த இடத்தில் ஹோமம் செய்கிறோமோ அது விஷய மாக சில நியமங்களை செய்முறையில் இருக்க வேண்டும். வெள்ளாட்டின் காதில் ஹோமம் செய்தால் அதன் மாமிசத்தை சாப்பிடக்கூடாது. ப்ராம்மணனின் கையில் ஹோமம் செய்தால் தன் வீட்டில் வசிக்கவரும் ப்ராம்மணனுக்கு இடவசதி செய்து தர வேண்டும். தர்ப்ப ஸ்தம்பத்தில் செய்யும் போது தர்ப்பாஸனத்தைத் தவிர்க்க வேண்டும். தீர்த்தத்தில் ஹோமம் செய்தால் தீர்த் தத்தை தூஷிக்கக்கூடாது. இது ஒரு வருட காலம் வ்ரதானுஷ்டானம். இந்த இடங்களுக்கு அக்னி ஸம்பந்தம் ஆங்காங்கு சொல்லப்பட்டுள் ளதால், அக்னியிலேயே ஹோமம் செய்தவனு கிறான். பிறகு வ்ரதபதி குண விசிஷ்ட அக்னியின் பொருட்டு எட்டு கபால புரோடாசத்தை ஹோமம் செய்ய வேண்டும்.

எந்த யஜமானனின் அக்னியானது வேறு அக்னிஹோத்திரியின் அக்னி அல்லது ஸம்ஸ்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரமில்லாத அக்னி, அல்லது ஔபாஸநாக்னி இவைகளுடன் கலந்து விடுகிறதோ அதன் பரிகாரமாக பிரிந்து அறியும் தன்மையுடைய அக்னியின் பொருட்டு எட்டு கபால புரோடா சத்தை ஹவிஸ்ஸாக கொடுத்து அதன் மூலம் தனது அக்னியை பிரித்து அடைகிறான்.

அக்னிஹோத்ர ஸ்தாலியானது விரிசல் கண்டு, அதன் வழியாக வெளியில் ஹவிஸ் வரு மானால் அந்த ஸ்தாலியை गर्भंस्रवन्तं என்ற மந்திரத் தால் அபிமந்த்ரணம் செய்ய வேண்டும். அக்னி, இந்திரன், த்வஷ்டா, ப்ருஹஸ்பதி ஆகிய தேவர் கள் ஸ்தாலியில் கர்ப்பம்போல் இருக்கும் ஹவிஸ்ஸை வெளிவிடுவதால் ஏற்படுகிற தோஷம் தோஷமற்றதாகச் செய்யட்டும். பூமி யில் விழுந்த ஹவிஸ்ஸானது பாபிகளான ராக்ஷ ஸர்கள் அடையாமல் இருக்கட்டும் என்கிற கருத் துடன் உள்ள மந்திரத்தைச் சொல்வதால் கர்ப்பம் போன்ற பால் காப்பாற்றப்பட்டு, ராக்ஷ ஸர்களையும் விரட்டி, யஜமானன் புத்ராதி ஸம்பத் துக்களோடு கூடினவனாகிறான் என்பது மந்தி ரத்தின் கருத்து. இவ்விதம் ப்ராயச்சித்தங்களைச் சொல்ல மேலே வரும் அனுவாகங்களில் தேவை யான மந்த்ரங்கள் கூறப்படுகின்றன.

अनुवाकः—४ यः पुरस्तात्

ப்ரணீதை எனச் சொல்லப்படும் தீர்த்தத்தை ஆஹவனீய ஸமீபம் எடுத்து வரும்போது எந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜலங்கள் கிழக்கு நோக்கியும் மேல் நோக்கியும் எல்லா திக்குகளைக் குறித்தும் ஓடுகிறதோ, எவைகள் சூர்ய ரச்மிகளால் சுத்தமாக ஆகிறதோ, அவைகளால் நான் ஆஸ்திக்ய புத்தியுடன் இந்த தேவ பூஜையை, யக்ஞத்தை ஆரம்பிக்கிறேன் என்கிற கருத்துடைய மந்திரத்துடன் இந்த அனுவாகம் தொடர்கிறது. இதில் 1—15 வாக்யம் வரை உள்ள மந்த்ரங்கள் உள்ளன. சில யஜமானனும், சில அத்வர்யு என்பவராலும் படிக்கத் தக்கவை. சுமார் 50 மந்த்ரங்கள் இருக்கின்றன.

இவைகள் தர்சேஷ்டியில் தர்சத்தன்று காலையிலும், மாலை வேளையிலும் படிக்கத் தகுந்தவைகளாவன. ஸங்கல்பத்திற்கு பிறகு அக்னிகளில் மந்த்ர பூர்வமாக ஸமித் வைக்கும்போது யஜமானன், யக்ஞ மார்க்கத்தை அறிந்த தேவர்களே! இந்த யக்ஞத்தின் பொருட்டு நேர் மார்க்கத்தை அடைய வேணும். எனது மனதைக் காக்கும் தேவனால், வாயு தேவனிடமிருந்து இந்த இஷ்டியை நடத்தட்டும். ஏனெனில் வாயுதான் எல்லா கார்யங்களுக்கும் காரணமாகிறான் எனக் கருத்துடைய மந்திரம் देवाः गातुविदः சொல்லி ஆரம்பமாகிறது. முடிவிலும் இதுபோன்று தொடங்கும் மந்த்ரத்தால் பூர்த்தியாகிறது. எங்கிருந்து ஆரம்பமாகிறதோ, அங்கேயே பூர்த்தியடைகிறது என இவ்விரண்டு மந்த்ரங்களையும் ப்ராம்மண பாகத்தில் புகழப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தயிருக்காக கறக்க வேண்டிய பசுக்களையும், கன்றையும், பாலையும் அதைக் கறந்துகொண்டு வருபவனையும் பாலைக் காய்ச்சும் போதும் அதை தயிர், பிறகு யஞ்ய தொடர்புக்காக அக்னி ஹோத்ர ஹோமம் செய்த அரிசிக் குருணை கஞ்சி யாலும், ஸாக்ஷாத் ஸோம ஸம்மந்தத்திற்காக, சாகா பவித்ரம் எனும், புரசங்களை வெட்டும் போது கீழே விழுந்த மரத்தோலையும், பாலில் சேர்க்கும்போதும் சொல்ல வேண்டியவைகள் சில. தர்ப்பத்தை வெட்ட கத்தி எடுக்கவும் அறுக்கவும் அதை வேதியில் வைத்து ப்ரோக்ஷணம் செய்யும் போதும், இது போன்று இத்மத்திற்கு ஸம்ஸ்காரம் செய்யும் போதும் சொல்லவேண்டியவைகள் சில. கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி, ஸப்யம் ஆவஸத்யம் என்றும் அக்னிகளை அந்தந்த இடத்தில் வைத்ததும் ஜபிக்க வேண்டிய மந்திரங்கள் சில. தர்ப்பத்தை அறுக்கும்போது ஏர் ஏன் தீர்த்தத்தில் யக்ஞ ஸம்பந்தமாயும், ஸாரமாயும், தேவர்களோடு கூடியதும் (அக்னியை சுற்றி பரிஸ்தரணமாக உபயோகப்படுத்துவது) உள்ள தர்ப்ப ரூபமாகவும், க்ஷேமத்தை கொடுப்பதாகவும் என்னை வந்தடையட்டும். உங்களை அறுப்பவனாக இருந்தாலும் தேவ கார்யத்தில் உபயோகப்படுத்துவதால் என்னை துன்புறுத்தாதீர்கள். உங்களது ஆசிகளால், வெகு காலம் ஜீவித்து இருப்பேனாகவும் என்கிற கருத்துடன் தர்ப்பத்தை அறுக்கிறான். இதைச் சிலர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ச்ராத்த காலத்தில் பிண்ட ப்ரதான ஸமயத்தில் தர்ப்பத்தை அறுப்பதாகக் கருதிச் சொல்கிறார் கள்.

இது போன்று பிண்ட பித்ரு யக்ஞத்தில் தர்ப்பத்தை பரப்பும் ஸமயம் சொல்லும் மந்த்ர மான ஊர்ணாம்ரதஸம் என்கிற மந்த்ரத்தை ச்ரார்த்தம், தில தர்ப்பணம் இவைகளில் தர்ப்பத்தை பரப்பும் போது சொல்கிறார்கள், ஒரு தடவை அறுக்கப்பட் டதும் (ஏஹி பித்ருன் என்பதை அனுசரித்து) இலவம் பஞ்சு போன்றதும், ம்ருதுவானதும், சுகத்தைக் கொடுப்பதுமான உன்னை எனது பித்ருக்களின் பொருட்டு ஸம்பாதிக்கிறேன், பரப்புகிறேன். இதில் ஸோம ரஸத்தை சாப்பிடத்தகுந்த எனது, பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹ ஸ்வரூபி களான தேவர்கள் தன்னை பின் தொடர்ந்து வருபவர்களுடன் உட்காரட்டும் என்கிற கருத் துடைய மந்திரத்தைச் சொல்லுகிறார்கள். இவ் விதம் எல்லா அக்னிகளுக்கும் சுற்றிலும் பரிஸ் தரணம் போடும் போதும் சொல்ல வேண்டிய மந்திரத்துடன் இந்த அனுவாகம் பூர்த்தியடை கிறது.

अनुवाकः—५ देवा देवेषु

தர்சத்தன்று (அமா) மாலையில் செய்ய வேண்டிய ஸாயம் தோஹம் முதலான கர்மாக் களை செய்து முடித்து அந்த வேதியின் ஸமீபத்தி லேயே கார்ஹபத்யாக்னி அல்லது ஆஹவனீயம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இது ஸமீபத்தில் படுக்கும்போது யஜமானன் சொல்லும் மந்திரம் देवेषु पराक्रमध्वं என்பது. ப்ருத்வி, அந்தரிக்ஷம், த்யு லோகங்களில் வசிக்கும் (11 × 3) 33 தேவர்களும் இங்கு வந்து என்னைக் காப்பதுடன், இந்த யக்ஞம் இடையூறு இல்லாமல் எனக்கு நானே துணை என்கிற ரீதியில் எனக்கு ஸாமர்த்யத்தை கொடுத்து தேவதாப்ரீதிகரமாக இந்த கர்மாவை பூர்த்தி செய்து தர பிரார்த்திக்கிறேன். ஏ அச்வினி தேவதைகளே, உங்களையும் பிரார்த்திக்கிறேன், காப்பாற்றுங்கள் எனக் கூறப்படுகிறான்.

ஹோம தினத்தில் புரோடாசத்தை எடுத்து அதை பாத்ரியில் (ஒரு வாணு) வைத்து அதில் இருந்து ஹோமத்திற்காக எடுக்கும் போதும் ரித்விக்குகள் (இடா) பக்ஷணத்திற்காக எடுக்கும் போதும் இடையை சாப்பிடவும், சாப்பிட்டதும் வேதியில் கை துடைக்க தீர்த்தம் விடவும். ஹவிஸ்களுக்கு அபிகாரம் (நெய்விடும் போதும்) செய்யவும். ப்ராதர் தோகம் என்கிற பால் ஹவிஸ்ஸை தயார் செய்யவும். மிகுதி புரோடாசத்தை அந்தந்த ரித்விக்குகளுக்காக வேதியில் எடுத்து வைத்ததும் பார்த்துச் சொல்லக் கூடியதும், பத்னியால் ஜபிக்க வேண்டியதும், ப்ரதான ஹோமம் ஆனதும் நாரிஷ்ட ஹோம மந்த்ரங்களும், பார்வண ஹோம மந்த்ரமும், யக்ஞ தொடர்புக்காக ஹோதா உட்கார்ந்த தர்ப்பத்தை-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதியில் தொடர்ச்சியாக இழுத்து வரும்போதும் சொல்ல வேண்டிய மந்த்ரங்களும் ஆக 27 மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளது.

இந்திரனின் பத்னியான இந்திராணி எப்பொழுதும் அவிதவையாகவே சுமங்கலியாகவே இருக்கிறாளோ அது போன்று நானும் இருப்பேன் தேவமாதாவான அதிதி எவ்விதம் நல்ல புத்ரர்களை அடைந்திருக்கிறாளோ அது போன்றும் இருப்பேன். ஏ கார்ஹபத்யாக்னியே! எல்லா கார்யமும் பூர்த்தியடையும் பொருட்டும்; நல்ல ப்ரஜைகளை அடைவதற்காகவும் உனது சமீபத்தில் உட்காருகிறேன் என इन्द्राणीव என்கிற மந்த்ரம் சொல்கிறது.

எனது கணவனோடு கூடியவளான நான் நல்ல கர்மாவின் உயர்ந்த பலத்தை (ப்ரயோஜனத்தை) அடைவதுடன் இந்த யாகத்தை இருவருமாக பொருப்புடன் நடத்துகிறோம். இருவரும் எப்பொழுதும் உனது அருளால் ஒரே எண்ணத்தை உடையவர்களாக இருந்து கொண்டு சத்ருக்களை ஒழித்து, ஆகாயத்தில் என்றும் மூப்புத்தன்மை அற்று ப்ரகாசிக்கின்ற சூர்யனின் ஒளியுடன் ஒன்று சேருவோமாக என सपत्नी पत्या என்கிற மந்திரத்தாலும் பிரார்த்திக்கிறான்.

நாரிஷ்ட ஹோமங்கள் 4, परावे समुद्रो ஏ யக்ஞ தேவனே! யக்ஞத்திற்கு யோக்யமான 10 சீரங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களை உடையவனாக இருக்கிறாய். இவைகளை இந்த யஜமானன் நெய் முதலான ஹவிர்பாகத்தால் சந்தோஷமடையச் செய்யட்டும். நாரிஷ்டன் என்னும் ஜாடராக்னியும், ப்ராணவாயுமான இருவர்களும் எஜமானனால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு, இவர்களின் அருளால் உசித காலத்தில் ஸ்வர்க்கத்திலும் தேவனாக ஆகட்டும் எனக் கூறுகிறது.

சிரேஷ்டனாயும், அன்னத்தை உடையவனு மான பூர்ணமாஸ தேவதையை நாங்கள் பூஜிக் கிறோம். அந்த தேவன் நல்ல தனத்தை அடையக் காரணமான ப்ராணவாயுவின் ஸஞ்சாரத்தின் பொருட்டு, நல்ல புத்ரர்களோடு கூடியதும் பல மடங்காக பெறுகுவதுமான தன ஸம்பத்தை எங்களுக்கு ஸம்பாதித்து தருவதற்காக அந்த பூர்ணமாஸை தேவதையின் பொருட்டு ஹோமம் செய்கிறேன் என்று பூர்ணிமா பார்வண ஹோம மந்திரம் சொல்கிறது. இது போன்றே சௌபாக்யத்துடன் கூடியதும், ஸேவிக்கத்தகுந் தவளும், ஒவ்வொரு நாளும் பாலே பெருக்கிக் கொடுப்பதுமான அமாவாஸ்யை தேவதையின் பொருட்டு அபானவாயு ஸஞ்சாரம் ஸரியாக இருப்பதற்காக ஹோமம் செய்கிறேன் என்று अमावास्या என்கிற பார்வண ஹோம மந்திரம் சொல்கிறது. அந்தந்த மந்திரத்தை அந்தந்த இஷ்டி காலத்தில் ஹோமம் செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः ६—परिस्तृणीत

41 மந்த்ரங்களைக் கொண்ட இந்த அநுவாகத்தில் நான்கு ரித்விக்குகள் யஜமானன் என எல்லோரும் ஜபிக்க வேண்டிய மந்த்ரங்கள் உள்ளன. இவைகள் யாவும் தர்ச பூர்ணமாஸேஷ்டி ஸம்மந்தப்பட்டவைகள். அதிக மந்த்ரங்கள் யஜமானனைச் சார்ந்தது. ரித்விக் செய்யும் கார்யத்தை அனுஸரித்து சொல்லத் தகுந்தவை. அக்னிகளைச் சுற்றி தர்ப்பங்களை பரப்பும் ஸமயம் இக்கார்யத்தைச் செய் என மந்த்ரம் சொல்கிறது. அந்த தர்பங்களை தனக்கு அனுகூலமாக இருக்கும்படி புகழ்ந்து ப்ரார்த்திக்கப்படுகிறது. இது போன்று ப்ரம்மா என்கிற ரித்விக்கை மந்திர பூர்வமாக வரணம் செய்யும் போது, ப்ரம்மா அதை ஏற்று கொண்டு அது போன்று செயல்படுகிறேன். இதை தேவப்ரம்மாவான ப்ருஹஸ்பதி ஏற்பதால், நான் மனுஷ்யர்களுக்குள் ப்ரம்மாவாக இருந்து இந்த ப்ரயோகத்தை நன்கு நடத்திச் செல்கிறேன். இந்த கர்மாவை காப்பாற்று என்று பிரார்த்திக்கிறார். இவ்விதம் வேதி எனச் சொல்லப்படும் யாகம் செய்ய தீர்மானித்த இடத்தை பிரார்த்திப்பதும், அதில் பரப்பப்படும் தர்ப்ப முஷ்டிகளைப் புகழ்வதும், அதில் வைக்கப்படும் ஹவிஸ்களை தேவதாப்ரீதியாக இருக்க வேணும் என வேண்டுவதும், ஹவிச்சேஷ பக்ஷணம் செய்த பிறகு பாப நிவ்ருத்தியை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டி எல்லோராலும் மார்ஜனம்' எனச் சொல்லப்படும் தீர்த்தத்தால் தலையில் அல்லது கையில் விட்டு வேதியில் விட மந்திரமும், ஸூர்யன் முதலான தேவதைகளை புகழ்ந்து ஸ்தோத் செய்வதும், சத்ரு ஜயத்தை வேண்டுவதுமாக அமைந்துள்ளன.

இவைகளில் ஸூர்யோபஸ்தான மந்த்ரங்கள் 6. அவைகளின் கருத்து. (1) அனுகூலமான காந்தியை (ப்ரகாசத்தை) உடைய ஏ ஸூர்யனே! நீ கண்ணுக்குத் தெரிபவனாக ஆகும் போதே, எனது சத்ருக்களை நாசம் செய். பகலில் கொடுமையான ப்ரகாசத்தாலும் இரவில் நீ மறைவதால் ஏற்படும் இருட்டாலும சத்ருக்களை ஒழிக்க வேண்டும்.

2. ஏ, ஸூர்யனே! இன்றே நீ உதயமடைந்தவனாய் எங்களுக்கு உண்டான தனம் முதலானதை தனித்தனியாக கொடுப்பதுடன், வெகு நாட்கள் சந்தோஷமாக ஜீவித்திருக்க அனுக்ரஹம் செய்வாயாக. ஒரு தகப்பனார் பிள்ளைகளுக்கு தனது சொத்தைக் கொடுப்பது போன்று கொடுக்க வேண்டும்.

3. ஏ ஸூர்யனே! இன்று கண்ணுக்கு தெரியும் போதே அனுகூலமான ப்ரகாசத்தை உடையவனாகக் கொண்டு எங்களது ஹ்ருதய ஸம்மந்தமான வ்யாதிகளை நாசம் செய்து, அதனால் வெளி சரீரத்தில் ஏற்படும் ஒருவித வர்ணத்தை (பச்சை) போக்குவாயாக.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எங்களது வ்யாதி ஸம்மந்தமான வர்ணத்தை அதை விரும்பும் ஒரு பக்ஷி விசேஷத்தினிடம் சேர்ப்பித்து அவைகளை சந்தோஷிக்கச் செய்வதுடன் உன் அருளால் இந்த வேண்டாத வர்ணத்தை அதை விரும்பும் மரங்களிடம் சேர்ப்பிக்கிறோம்.

5. இந்த ஸூர்யன் எல்லாவிதமான பலத்துடன் உதயத்தை அடைந்து எங்களது சத்ருக்களை ஹிம்ஸிப்பதால் நாங்கள் சத்ருக்களின் ஹிம்ஸையை அடைவதில்லை.

6. கோபமடையாத எங்களை வெறுப்பவர்களையும், கோபம் அடைந்த எங்களை வெறுத்து ஏசுபவர்களான சத்ருக்களையும் ஆக இருவித விரோதிகளையும் நசிக்கச் செய்ய விடியற்காலை தேவதையான உஷாதேவியும், அஸ்தமன வேளை தேவதையும் எங்களது பாபங்களை ஒன்று சேர்த்து அவர்களிடம் ஒப்படைக்கட்டும்.

இதில் 4 மந்திரங்கள், ப்ரதிதினம் சுருக்கமாக செய்யப்படும் ஸூர்ய நமஸ்காரத்தில் பல பெரியோர்கள் இன்றும் சொல்லி ஸூர்யனை நமஸ்கரிக்கிறார்கள். இந்த மந்த்ரங்கள் ஹ்ருதய ஸம்மந்தமான ரோகத்தை போக்க வல்லது.

अनुवाकः ७—सङ्क्षेपं पश्य

7 முதல் 10வது அனுவாகம் முடிய ஸோம: யாகத்தில் தீக்ஷை எனச் சொல்லப்படும் ப்ரயோ:

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கம் முதல், ஸோமலதையை இடித்துப் பிழிந்து அந்த ரஸத்தை ஹோமம் செய்வது வரை வேண்டியதும் விட்டுப் போனதும் (அந்த அந்த இடத்தில்) ஆன மந்த்ரங்கள் சொல்லப்படுகின்றன.

முதலில் ஸோமயாகம் செய்ய வேண்டிய பூமியை அக்னி, வாயு, ஸூர்யன், த்யாவா ப்ருத்வீ முதலான தேவதைகள் பார்த்து ஒத்துக்கொள்ள பிரார்த்திக்கிறான். யஜமானனுக்கு பட்டு வஸ்த்ரம் தரும்போது அதை வாங்கிக் கொள்ள மந்திரம். அந்த பட்டு வஸ்த்ரத்தை எல்லா கார்யத்திற்கும் காரணமாகவும், அதை தரிப்பதால் அக்கார்யங்களில் ஈடுபாடு உடையவனுகவும் உள்ள எனது ஆசைகள் யாவும் என்னை வந்து அடையட்டும் என்று பிரார்த்திக்கிறான். பூர்ணுஹூதி மந்த்ரம், க்ருஷ்ணுஜினம் என்கிற மான் தோலை க்ரஹித்து ஸ்பர்சிக்கவும், அதில் உட்காரவும், ப்ருத்வீ, அந்தரிக்ஷம் த்யு, திக், அப், ஸோமன், வாக்கு இவைகள் இந்த யஜமானனின் தீக்ஷா ப்ரயோக ஸ்வரூபமானதாலும், அவைகளால் ஏற்கப்பட்டு எஜமானன் தீக்ஷையை அடையும்படி பிரார்த்தித்து. இது போன்று வேதங்கள், மற்றும் பகல், இரவு, சாகுபடி, மழை இவைகளின் தேவதைகளும், இந்த தீக்ஷா கர்மாவை அனுமோதனம் செய்யட்டும் என அடுத்த மந்த்ரமும் சொல்கிறது. ஆஹவனீய உபஸ்தான மந்த்ரம் ஸோமக்ரயணீ எனச் சொல்லப்படுகிற பசுவின் நடை, ஏழாவது அடி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வைப்பது ஒருவருக்கொருவர் நட்பு, சுப்ரமண்ய ஆஹ்வானத்தில் யஜமானனின் மந்த்ரம், ஸோம யாக வேதி தயார் செய்வதற்கு ப்ரயோஜனமான மந்த்ரங்கள் கூறி, பசு ஸம்பந்தமான மந்த்ரமும் சொல்லப்பட்டுள்ளது.

अनुवाकः ८—यदस्यपारे

இந்த அனுவாகத்தில் யாகத்தில் ஹவிஸ் ஸாக, உபயோகப்படக் கூடிய பசுவின் ஸம்பந்த மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அதாவது தேவதைக்காக என்று தீர்மானிக்கப்பட்ட பசு (ஆடு) கத்தினாலோ, பயந்தாலோ, ஓடிவிட்டாலோ, அல்லது எதிர்பாருமல் உயிரை விட்டாலோ, படுத்துவிட்டாலோ, அவைகளுக்குப் பரிஹாரமான மந்த்ரங்களும், ஹோமம் செய்யப் பட்ட ஸோமரஸமும், செய்யப்படாத ஸோம ரஸமும் கலந்தால் அதற்கு பரிஹார மந்த்ரமும், ஸோமரஸத்தை சாப்பிட மந்திரமும் சொல்லப் பட்டுள்ளது.

अनुवाकः—९ अनागसस्त्वा

ஸோமலதை எனப்படும் கொடியை பொடிப் பொடியாக நறுக்கி அதை அறைத்து அதில் இருந்து ஸாரம் எடுக்க வேண்டும். இதுவே ஸோம ரஸம். இந்த்ராதி தேவதைகளுக்கு ப்ரிய மானதும்கூட. இதை ஒவ்வொரு தேவதைக்கும் க்ரஹிக்கும்போது அறைத்து பிழிந்து ரஸம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எடுத்து குறிப்பிட்ட இடத்தில் வைத்து தக்க ஸமயத்தில் ஹோமம் செய்ய வேண்டும். இதற்கான சிறிய கற்கள், இடம், ஸம்பந்தமானதும், ததிகர்மம் எனப்படும் தயிரை க்ரஹிக்கவும், ஹோமம் மிகுதியை சாப்பிடவும், சாப்பிட்டதும் தொப்புளை ஸ்பரிசிக்கவும், ஷோடசி க்ரஹம் எனச் சொல்லப்படும் க்ரஹ ஸம்பந்தமானதுமான மந்த்ரங்களும், யாகசாலையில் அல்லது வெளியில் ஏற்படும் பயம் நீங்கவும், அவப்ருத காலத்தில் செய்யப்படும் ஹோம மந்த்ரமும், மஹாவ்ரதம் என்கிற கர்மாவில் அத்வர்யூ ஜபிக்க வேண்டிய மந்த்ரங்களும் என பல மந்த்ரங்கள் கூறப்பட்டுள்ளன.

अनुवाकः १०—उपरवादेवीप्

ஹவிர்தானம், ஸதஸ், ஆக்னீத்ரியம் என சொல்லப்படும் மண்டபங்கள் ஏதாவது காரணத்தால் சிதிலமானால் அந்த தோஷத்தை நிவ்ருத்திக்கவும், வபா முதலான ஹவிஸ்கள் கீழே விழுந்தாலோ, சிதறினாலோ, அதை எடுக்கவும், ஹோமம் செய்யவும், ரித்விக்காக தீர்மானித்தவனை வேண்டாம் என்று ருதுக்கினாலும், ஏக (ஒரு)கபால புரோடாசம் கீழே விழுந்தாலோ, அதை ஹோமம் செய்யவும், பெரிய பயம் ஏற்பட்டு யக்ஞமே பூர்த்தியாகாது எனத் தோன்றினால் உடன் செய்ய வேண்டிய கார்யமும் எல்லா பதார்த்தத்தையும், த்ரோண கலசம் என்கிற பாத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரத்தில் எடுத்து ஹோமம் செய்ய மந்த்ரமும், சமஸ பக்ஷணத்திற்கு முன்பு ஸ்தோத்ரம் ஆரம்பிக்கப்பட்டால் அதன் பரிஹார மந்த்ரமும், மழைத்துளியினால் தோஷமடைந்த ஸோம ரஸத்தை ஹோமம் செய்ய மந்த்ரமும் என பல ப்ரகாரமான பரிஹார மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளது.

अनुवाकः ११—ग्रह प्रतिष्ठा

தர்சபூர்ணமாஸேஷ்டியில் தோஷ பரிஹார மந்த்ரங்கள் 28 சொல்லப்படுகின்றன. இதில் 23 முதல் 28 வரை ஸ்மார்த்த ப்ரயோகங்களில் பரிஹாரமாக ஹோமம் செய்யப்படுகின்றன.

23. यत इन्द्र . . . जहि

ஹே இந்த்ரனே! ம்ருத்யு, வ்யாதி, திருடன் முதலானவர்களிடமிருந்து ஏற்படும் பயத்தில் இருந்து எங்களை காப்பாயாக. இதுபோன்ற பயகாரணமான ஸமயத்தில் எங்களை காக்கும் திறமை உனக்கு உண்டாகட்டும். எங்களின் சத்ருக்களையும், யுத்தங்களையும் நாசம் செய்வாயாக.

24. स्वस्तिदा . . . अभयंकरः

சோபனத்தை கொடுப்பவனும், ப்ரஜைகளை ரக்ஷிப்பவனும், பாபத்தை அழிப்பவனும், தடுக்கப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பட்ட யுத்தத்தை உடையவனும், இந்திரியங்களை ஜயித்தவனும், புருஷவீர்யத்தை உடையவனும், க்ஷேமத்தை கொடுப்பவனும் பயத்தை நீக்குப வனுமான இந்திரன் எங்களுக்கு நல்லதைச் செய்ய எங்களுக்குமுன் செல்லட்டும். இவ்வி ரண்டு மந்த்ரங்களை வெளியில் செல்லும் போது ஜபித்துக் கொண்டு புறப்படுவார்கள்.

25. आशिर्गीर्भिः . . . तेस्याम

குதிரைகளோடு கூடிய இந்திரனே, எங்களது ஸ்தோத்திரங்களால் சந்தோஷமடைந்து இந்த கர்மாவில் இருக்கும் குறைபாடுகளை நீக்கி வளரச் செய்வாயாக எந்த ஸமயம் ஸ்தோத்திரம் செய்ப வர்களின் நன்மைக்காக மலைகளையோ அல்லது மேகங்களையோ சிதர அடிக்கிருயோ அதே ஸமயம் உனது அருளால் நாங்கள் அதிகமான பணத்தை பெறுபவர்களாகிறோம்.

26. अनाज्ञातं . . . यथातथम्

யாகத்தைச் சேர்ந்த ப்ரயோகங்களில் வேதத் தில் சொன்னபடி (அறியாமையால்) செய்யப் பட்டதும், தெரிந்தும் ஸரியாக செய்யப்படாதது மானதால், கர்மாவை நாசம் செய்யாமல் நன்கு செய்யப்பட்டதாகச் செய்வாயாக. ஏனெனில் கர்மாவின் ஸ்வரூபத்தை நீ நன்கு அறிவாய்.

27. ஸம்பூர்ணமான அவயவங்களோடு (உறுப்புகள்) கூடின புருஷனுக்கு ஸமமாக இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கர்மா இருக்கிறது. மேலும் புருஷனுல் அனுஷ் டிக்க படுவதாகவும் இருக்கிறது. ஆகையால் ஏ அக்னியே! இதன் குறைபாடுகளை அறிந்து அதை சரிசெய்து பலம் கொடுக்கும் திறமை உள்ளதாகச் செய்வாயாக.

28. यत्पाकत्रा:...यजाति

ஹே, அக்னியே! குழந்தைகளின் அறிவு போன்ற அறிவை உடையவர்களும், அதனுலேயே குறைவான உழைப்பை உடையவர்களுமான யஜ மானர்கள் எந்தெந்த அங்கங்களை ஸரிவர செய்ய வில்லையோ அதை நீ நன்கு அறிந்து அதன் குறைபாடுகளை நீக்கி, தேவதைகளை கூப்பிட்டும், யாகத்தை நன்கு நடத்திக் கொடுத்தும், அந்தந்த காலத்தில் ஸரிவர தேவர்களை பூஜித்தவர்களாக எங்களை செய்வாயாக.

अनुवाक:—१२ यद्देवा

இந்த அனுவாகம் கூஷ்மாண்ட ஹோம ப்ர கரணத்தில் அருணம் இரண்டாவது ப்ரச்ன முமான ஸஹவை என்பதில் பொருள் கூறப்பட்டுள் ளது. இந்த மந்த்ரங்கள் ஸோமயாகத்தில் 21 தர்ப முஷ்டிகளால் சுத்தப்படுத்தப்படுகிற யஜமான ஞல் ஜபிக்கத் தகுந்த மந்திரங்கள் 20.

अनुवाक:—१३ यत्ते ग्राव्णा

ஸோமயாக ஸம்பந்த அவப்ருத கர்டாவின் போது ஸோமலதைக்ளின் சக்கைகளில் (ரஸம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிழிந்த பாகங்கள்) தேன் கலந்த தயிரையோ, பாலையோ கலந்து ப்ரோக்ஷிக்கச் செய்யும் போது சொல்ல வேண்டிய மந்திரங்கள் 13. இவைகளில் அந்த ஸோமலதையை கூப்பிட்டு உன்னை கல்களாலும், கைகளாலும் நசுக்கியும் பிழிந்தும், உன்னிடமிருந்து ரசத்தை எடுத்து தேவர்களுக்கு சேர்பித்ததால் உனக்கு உயர்ந்ததான ஸ்வர்க்கம் முதலான ஸ்தானங்கள் கிடைப்பது திண்ணம். ஆகையால் இது போன்ற ச்ரமங்களை மனதிற் கொள்ளாமல் இந்த யஜமானனால் செய்யப்பட்ட கர்மாக்களை உயர்த்தியும், புகழ்ந்தும், தேவதை களின் முன்னிலையில் சொல்ல வேண்டும். இந்த தேன் கலந்த பால், தயிர் இவைகள் ஸம்பந்தத் தால் நீ மறுபடியும் எல்லா அங்கங்களோடு கூடியவனாய் இருந்து கொண்டு எங்களால் செய்யப்படும் ஒவ்வொரு கர்மாக்களிலும் நீயும் ஸம்பந்தப்பட்டு எங்களுக்கும் நல்ல லோகங்களை கொடுத்து அருளும்படி உன்னை வேண்டுகிறோம் என்பது பொருள்.

अनुवाकः—१४ यद्देवा

அவப்ருதம் எனச் சொல்லக்கூடிய கர்மாவில் யஜமானன் ஸ்நானம் செய்த பிறகு தீர்த்தத்தை இரு கைகளால் எடுத்து மூன்று மந்திரங்களைச் சொல்லி விட வேண்டும். ஸோமயாகம் செய்யாத அக்னி ஹோத்ரீ பிறரின் யாகத்தில் ரித்விக்காக இருந்தால் அவன் செய்ய வேண்டிய ஹோம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்த்ரங்கள் 3. அந்த ஹோம மிகுதி நெய்யைச் சாப்பிட ஒரு மந்திரம், தக்ஷிணாக்னியில் ஹோமம் செய்ய 3மந்திரங்கள். தயிரை இவனுக்கு கொடுக்கவும், உபஸ்தானத்திற்காகவும் 2 மந்த்ரங்கள். த்வாதசாகம் என்கிற க்ரதுவில் எல்லோரும் சேர்ந்து இருந்து கார்ஹபத்ய, தக்ஷிணாக்னி, ஆஹவனீயம் என்கிற மூன்று அக்னியாலும் ஹோமம் செய்ய 3 மந்த்ரங்கள் என 15 மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

யஜமானனான நான் மனதை அடக்குவதானதும், பேச்சை நிறுத்தியும், இந்திரியங்களை ஒடுக்கியும் இந்த கர்மாவைத்தவிர மற்றவைகளை நினைக்காததும், இது போன்று 3 வேத ஸம்மந்தமான மந்த்ரங்களை உச்சரிப்பதும், மான் தோலை உடுத்துவதும், தண்டத்தை பெறுவதும், பால் மட்டில் சாப்பிடுவதும், தர்ப்பமுஷ்டிகளால் சுத்தப்படுத்தப்படுவதும், ப்ரம்ம, க்ஷத்திரிய ஜாதிகளின் உயர்வை வேண்டுவதும், ப்ராணாபானன் என்கிற மூச்சு இழுத்து விடுவது போன்ற கார்யங்களை செவ்வனே செய்வதுமான பல தினுஸான தீக்ஷைகளை இப்போது இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இந்த நியமங்களை நிறுத்திக் கொள்கிறேன். இந்த தீர்த்தத்தின் மஹிமையால் எனது நியமங்கள் நன்கு அனுஷ்டிக்கப் பட்டதாக இருக்கட்டும் என வேண்டப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதுபோன்று கடைசி 3 மந்த்ரங்களால் எங்களுக்கு யமனால் ஏற்படும் பயம் நீங்கி மறுபடியும் எங்களிடம் யமன் வராமல், எங்களை அருளோடு கூடின கண்களால் பார்த்து நாங்கள் வேண்டுவதை கருணையுடன் கேட்டு எங்களது குழந்தைகளையும், வீரர்களையும், சேவகர்களையும், ஹிம்ஸிக்காமல் உயர்ந்த பெருமைக்கு இருப்பிடமான இந்த யாகசாலையை காய்ந்த இலை மரத்தில் இருந்து ப்ரயத்னம் இல்லாமல் விழுவது போன்று, எங்களை பசு, குதிரை, பணம் முதலியவைகள் வந்து அடையும்படி செய்ய வேண்டுகிறோம்.

எட்டாவது ப்ரச்னம்

அச்வமேத ப்ராம்மணம்

அச்வமேத யாகம் राजा सार्वभौमः अश्वमेधेन यजेत என்று எல்லா பூமியையும் தனக்குக் கட்டுபட்டதாக வைத்து ப்ரஜைகளையும், தேசங்களையும் நேர்மையாக ஆளுகின்ற அரசன் அனுஷ்டிக்க வேண்டிய உயர்ந்த யாகம். இது ஐந்தாவது காண்டத்தில் ஸ்ருஷ்டி கர்த்தாவும் வேத ஸ்வரூபமான 4 சிரஸ்களை உடையவனுமான ப்ரம்மாவின் கண் வ்யாதியைப் போக்கியதாலும், ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட உபபாதக மஹாபாதங்களுக்கு ப்ராயச்சித்தமாகவும் (பரிஹாரமாகவும்) கேட்டாலே ஸாதுக்களின் மனதிற்கு பயத்தையும், கஷ்டத்தையும் கொடுக்கும் பரம்மஹத்தி எனச் சொல்லப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படும் பாபத்தை, இக்கர்மாவை அனுஷ்டிப்பது அல்லது இதனை 7 வது காண்ட கடைசி அனுவாகத்தில் சொல்லியுள்ள ப்ரகாரம் यो वा अश्वमेध என்கிற அனுவாகத்தை மனதில் வாங்கிக் கொண்டு த்யானம் உபாஸனம் செய்து, இதனால் போக்கிக் கொள்ளலாம் எனவும் சொல்லி, இதை य उ चैन मेवं वेद என்னும் வேத பாகத்தில் விதிக்கப்பட்டுள்ளது. பல வருடங்களாலும், பல மனுஷ்யாதி ஜீவராசிகளின் ஒத்தாசையாலும் அனுஷ்டிக்கத் தகுந்தது. மேலும் புராணங்களில் பல பெருமை வாய்ந்த ஸூர்ய, கந்தர்வ வம்சத்து அரசர்களால் 100 தடவை அனுஷ்டிக்கப்பட்டு शतक्रतु என்கிற பெயரால் இந்த்ர பதவி அடைவிக்கத் தகுந்ததாயும் சொல்லப்பட்ட பெருமை இந்த யாகத்திற்கே உரித்தானதாகும். இதன் ப்ராம்மணம் 2ப்ரச்னங்களில் சொல்லப்பட்டுள்ளது. இதனைக்காணும் போது இதை அனுஷ்டிப்பது வீரனான அரசனால் (க்ஷத்திரியன்) தான் முடியும் என்கிற எண்ணமும் ஏற்படுகிறது. இதற்கு வேண்டிய காலமோ, ஸம்பாரங்களோ (ஸாமான்கள்) ஸஹாயத்தையோ நினைக்கும்போது இதற்கு ஆயுர் பலம், மனுஷ்ய ஸஹாயம், பண ஸம்ருத்தி, இவ்வளவுக்கும் மேல் தைய்வ ஸம்மதம் இருந்தால்தான் ஒரு தடவையாவது ஜன்மாவில் ராஜாவானவன் அனுஷ்டிக்கலாம். பலதடவை அனுஷ்டிப்பதானால் அந்த ராஜாவின் பெருமை எவ்விதம் என்று நினைத்துப்பார்க்க ஆச்சர்யமாகவே உள்ளது. இப்படிப் பெருமை வாய்ந்த உயர்ந்த யாகமான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அச்வமேதத்தின் ப்ரயோகங்களை (அங்கங்களை) மூன்றாவது அஷ்டகம் 8, 9 வது ப்ரச்னங்கள் கூறுகிறது.

இதனது மந்த்ரங்கள் ஸம்ஹிதா 5வது 7வது காண்டங்களில் வெகுவாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் (வேதாந்தரம்) சாகாந்தரங்களிலும் இதன் ப்ரயோகத்தை மஹரிஷிகளால் சொல்லப் பட்ட ஸூத்ரங்களின் மூலமும் தெரிந்து கொள்ளத்தகுந்ததாக உள்ளது. இந்த காலத்தில் இதை அனுஷ்டிக்கத்தகுந்த அதிகாரியான ராஜா இல்லாததால் இது நடைமுறையில் இல்லை. ஆனால் வேதம் அறிந்த வேதவித்வான்களாலும் இதற்கு பொருள் கூறியுள்ள ஸ்ரீவித்யாரண்யர் போன்ற மஹான்களாலும் ஓரளவு இதன் ஸ்வரூபத்தையாவது அறியும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது பெரும் பாக்கியம். இதில் அச்வம் (குதிரை) ப்ரதான த்ரவ்யமாகும். இதை வைத்துதான் இதற்கு அச்வமேதம் எனப்பெயர் ஏற்படுகிறது.

अनुवाकः १—प्राङ्प्रहणा

அச்வமேதம் செய்வதாக ஸங்கல்பம் செய்து கொண்டு இந்த கர்மாவை நடத்திக் கொடுக்கும் வேதம் அறிந்த வித்வான்களை (ரித்விக்குகளை)யும், மேலும் ஸஹாயத்திற்காக வேண்டிய ஜன ஸமூகத்தையும் (ஜனதா) சேர்க்கைக் கருதி அதைப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பலமாக (ப்ரயோஜனமாக) உள்ள ஸாங்க்ரஹணி என்கிற இஷ்டியை அனுஷ்டிக்க வேண்டும்.

குதிரையைக் கட்ட முஞ்ஜா என்கிற புல்லி னுல் 12 அரத்னீ நீளமுள்ளதான கயிறு தயார் செய்து கட்ட வேண்டும். அரத்னீ என்பது நீட்டிய சுண்டிவிரலுடன் கூடிய கை அளவு. செய்கையாலும் ப்ரயோஜனத்தினுலும் உயர்ந்த கர்மாவை நல்ல காலத்திலும், புண்ய தேசத்திலும் செய்வது அதிகமான ப்ரயோஜனத்தை கொடுக்க வல்லது. ஆகவே இந்த அச்வமேத யாகமானது பலவித கார்யங்களோடு கூடியதால் விசித்ரமாக இருக்கிறது. ஆகையால் சித்ரா நக்ஷத்திரத்தில், காசி, குருக்ஷேத்திரம், கௌதமவனம் என்கிற க்ஷேத்திரங்களில் செய்யத்தகுந்தது. ரித்விக் குகளை யாகம் ஆரம்பிப்பதற்கு முன்பு அவரவர்கள் வீட்டில் சென்று தாங்கள் இதற்கு ரித்விக்காக இருந்து நடத்தி கொடுக்க வேண்டும் என வேண்டி, அவர்கள் ஸம்மதத்தை பெற்று ஸோம ப்ரவாகன் என்கிற ரித்விக் அவர்களை யானை குதிரை போன்ற உயர்ந்த வாகனத்தில் ஏற்றி யாகசாலைக்கு (நடத் தாமல்) அழைத்துவர வேண்டும். யார் யார் எப் பொழுது தேவைப்படுகிருர்களோ அவ்வப்போது அழைத்துவர வேண்டும். எப்படியும் எல்லா ரித்விக்குகளும் ஸுப்ரமண்ய ஆஹ்வானம் என்கிற ப்ரயோக ஆரம்பத்திற்குள் யாகசாலைக்கு யானை குதிரை போன்ற உயர்ந்த வாகனம் மூலம் அழைத்துவர வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதன் விபரம் விஸ்தாரமாக சொல்லப்பட்டுள்ளது. பிறகு யஜமானனுன ராஜா சரீரத்தில் வபனம் என்கிற கார்யம் மூலம் அசுத்தமான கேசாதிகளை களைந்து அத்ருஷ்டார்த்தம் பல் துலக்கி ஸ்நானம் செய்து கிழிக்கப்படாத புதிய வஸ்திரத்தை உடுத்தி, பேசுவதை நிறுத்தி, தனது ஹிதகாரிகளால் கதை, வேடிக்கை முதலானதுகளால் இரவு தூங்காமல் விழித்து இருக்கும்படி செய்துகொள்ள வேண்டும். இவைகள் ஒருமுறையான தீக்ஷை எனப்படுகிறது. அதாவது கட்டுப்பாடு இதனுல் ஸ்வர்க்கலோகம் உசித காலத்தில் அடையலாம்.

अनुवाकः २—चतुष्टय्य आपो

இங்கு ப்ரம்மௌதனம் என்கிற ப்ரயோகமும், அதற்கு வேண்டிய ஸாதனங்களும் அதனது முறைகளும் சொல்லப்படுகிறது. இது சாஸ்த்ரீயமான கார்யத்தால் செய்யப்படும் அன்னம். இதற்கு 4 திக்குகளிலும் இருந்து वर्ष्याः மழை பெய்யும் போது பிடித்து எடுத்து வருவது, कूप्याः கிணற்றில் இருந்தும் स्थावराः நதியில் ஆழமான மடுவில் இருந்தும் वहन्त्यः நதியில் ஓடும் ஜலம் என்றும் 4 தினுஸான ஜலங்களை ஒவ்வொரு திக்குகளில் இருந்தும் கொண்டுவந்து (சராவம் என்கிற அளவு அதாவது மடக்கு) இதனுல் 4 அளவு அரிசியை பக்வம் செய்து, மேலும் கீழும் தங்கம் வெள்ளியால் செய்யப்பட்ட தாம்பாளங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களால் ஆதாரமாகவும், மூடியாகவும் செய்வித்து, அதை நல்ல நெய்யினுல் கலந்து மஹாரித்விக்குகள் என்கிற ப்ரம்மா, அத்வர்யூ ஹோதா, உத்காதா என்கிற உயர்ந்த ரித்விக்குகளால் சாப்பிடச் செய்து, அவர்களுக்கு ஆயிரக்கணக்கான நிஷ்கம் என்கிற அளவு தங்கத்தை தக்ஷிணையாகக் கொடுத்து, நெய் கலந்த அன்னம் எடுத்து வந்த பாத்திரத்தில் மிகுதி இருக்கும் நெய்யில் முன் சொல்லப்பட்ட குதிரை கட்ட வேண்டிய நீளமான முஞ்ஜா கயிரை நனைக்க வேண்டும். இதில் எல்லாமே 4 என அளவில் இருப்பது குதிரையின் குளம்பின் எண்ணிக்கைக்கு சமமானதால் ப்ரஜாபதியையே அடைவதாக ஆகிறது. குதிரை ப்ரஜபதி தேவதையாக உள்ளது.

முன்பு குதிரை கட்ட வேண்டிய கயிறு முஞ்ஜா புல்லால் தயார் செய்ய வேண்டும். 12 அரத்னீ நீளம் என்றும் சொல்லப்பட்டது இங்கு வேறுபாடாக தர்பப் புல்லாலும் (13 அரத்னீ என்றும்) சொல்கிறது. ஆகையால் எது ஸௌகர்யமோ அதை அனுஷ்டிக்கலாம். குதிரையின் ஸாமர்த்தியம் ஒரு ஸமயம் அதைவிட்டு வெளிகிளம்பி இந்த நான்கு ரித்விக்குகளை அடைந்ததாலும், குதிரையின் வீர்யமானது தங்கமாக ஆனதாலும், வீர்யத்திற்குக் காரணம் அன்னமாக இருப்பதாலும் இவை எல்லாம் ஒன்று சேரும்படி முன்பு ப்ரயோகம் சொல்லப்பட்டுள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः ३—यो वै ब्रह्मणे

எந்த யஜமானன் குதிரையை கட்டும் முன்பு ப்ரம்மா என்கிற ரித்விக்கிடம் சொல்லாமல் கட்டு கிருனே அவன் தேவதைகளின் ஸம்பந்தத்தை நழுவ விடுகிருன். ஆகையால் அவரிடம் மந்த்ரம் சொல்லிக்கட்டினுல் தேவதைகளுட ன் கூடியவஞ கிருன். ஆகையால் ब्रह्मन् अश्वं என்கிற மந்த்ரம் மூலம் சொல்ல வேண்டும். 13 அரத்னீ நீளம் உள்ள தர்ப்ப புல்லால் முறுக்கின கயிருல் கட்டு வது, அதிக மாஸத்துடன் கூடிய வருடம் போல் இந்த அச்வமும் திமிருடன் உடைய காளே போல் ஆகிறது. முன்பு சொன்னது 12 மாத வருஷ ஸமானமாக 12 அரத்னீ நீளம். இங்கு மற்றயாகங் களே பசுஸ்தானமாகவும் அச்வமேதத்தை திமிரு டன் கூடிய காளே ஸ்தானமாகவும் வர்ணித்து 13 அரத்னீ நீளக் கயிரை விதிக்கிறது. इमामगृभ्णन् என்கிற மந்திரத்தின் பாகங்களின் வழியாக யாகம் செய்யும் அரசனுக்கு ஆயுஸ், பணம் முதலான ஸம்பத்துகள் சேருவதாகவும், குதி ரையை கட்டுகிற மந்தர பாகங்களின் வழியாக பலவித லாபங்கள் ஏற்படுவதாகவும் சொல்லப் படுகிறது.

अनुवाकः ४—यः पितुः

குதிரையை நீரில் ஸ்னானம் செய்வித்து அது ஸமயம் அதன் பாபங்களேப் போக்க பாபரூப

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மானதும், இரு கண்ணின் ஸமீபத்தில் இரு பொட்டுக்களை உடையதும் உள்ள ஒரு நாயை ராஜாவின் அத்தை மகள் முன்பும், தாயின் ஸஹோதரி பிள்ளை பின்புறமுமாக அந்த நாயை நன்ருக உடல் பூரா்வும் கட்டி, இழுத்துவந்து குதிரைக்கு முன்பு ஜலத்தில் இரக்கி வ்யபிசாரிணியின் பிள்ளையால் வைரம் பாய்ந்த மரத்தின் நடு பாகத்தில் தயார் செய்யப்பட்ட உலக்கையால் அத்வர்யுவின் உத்திரவை அனுஸரித்து அடித்துக்கொன்று குதிரையின் காலடியில் தள்ளி குதிரையின் வலது புறமாக தண்ணீரில் விட்டு குதிரையை 400 மனுஷ்யர்கள் நீர் நொச்சியின் கிளைகளுடன் கூடிய புஷ்பித்த தர்ப்பத்தண்டுகளைக் கொண்டு கிழக்கே இருந்து மேற்கு முகமாக கரையேற்றுவதால் யஜமானன் எல்லா பாபத்தில் இருந்தும் விலகி புத்ருதி ஸம்பத்துக்களை அடைகிருன். கடைசீ காலத்தில் மரணமற்றவனுகிருன். ப்ரம்மா இது ஸமயம் ராஜாவின் கையை மந்த்ரபூர்வமாக பிடித்து இரு ஜாதிகளையும் ஒற்றுமையாக இருக்கச் செய்கிருன். அத்வர்யூவானவன் अभिजय्या என்கிற மந்திரத்தை யஜமானனை சொல்லும்படிச் செய்வதால் ஜய ப்ராப்தி ஏற்படுவதாகவும் சொல்கிறது.

अनुवाकः—५ चत्वार ऋत्विजः

இங்கு குதிரைக்கு மஹாரித்விக்குகளின் மூலம் 4 திக்குகளில் இருந்தும் தண்ணீரினுல் ப்ரோக்ஷ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ணம் விதிக்கிறது. அத்வர்யூ, கிழக்கு திக்கில் அரசர்களாக இருங்கத்தகுந்த 100 அரச குமாரர் களுடன் இருந்தும், தெற்கு திக்கில் அரசர்களாக முடியாத ராஜகுமாரர்கள் 100 பேருடன் ப்ரம்மா வும், ஸூதக்ராமணீகளின் 100 பேருடன் (ஸூதன்-தேரோட்டி, க்ராமணீ-கணக்குப்பிள்ளை) மேற்கு திக்கில் இருந்து ஹோதாவும், சூத்ரனால் வைச்ய ஸ்த்ரீயிடம் உண்டான க்ஷத்தா, கஜானாவில் பணம் சேர்க்கும் திறமையுள்ள ஸங்க்ரஹீதா இவர்களின் 100 பேருடன் உத்காதா என்பவர் வடக்கு திக்கில் இருந்து அவரவர்களின் மந்திரத் தால் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

ஹோதாவால் சொல்லப்படும் மந்திரத்தில் சில வரிகள் அதாவது बह्वी बह्वश्वायै தற்காலத்தில் ஸ்ரீ அம்பிகையின் ஆராதனையில் சொல்லப்படு கிறது. இந்த மந்த்ரம் யஜமானனின் ப்ரஜைகள் அதிகமான பசு, குதிரை, நெய், யவை, உளுந்து எள்ளு, பணம் யானை, வேலையாட்கள், சரீர பலம், மணி, முத்து முதலான உயர்ந்த வஸ்துக் களுடன் கூடினவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு அரசனாக இந்த யஜமானன் இருக்க வேணும் எனக் கூறுகிறது, விட் என்கிற பதத் திற்கு விசேஷணமாக அமைந்துள்ளதால் மற்ற பதங்கள் ஸ்திரீலிங்கமாக அமைந்தன. இதை வைத்து அம்பிகை ஆராதனையில் உச்சரிக்கப்படு வதாகக் கருதலாம். 400 பேர்கள், 4 திக்குகள் இத னால் எல்லா திசையிலும் ப்ரதிஷ்டை ஏற்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाक: ६—यथा वै हविष:

குளிப்பாட்டப்பட்ட குதிரையை கரையேற்றியதும் அதன் சரீரத்தில் இருந்து கீழேவிழும் நீர் துளிகள் பூமியில் விழுவதால் பூமியை அக்னியாகவும், குதிரையை ஹவிஸ்ஸாகவும் உபயோகப் படுத்தப் போவதால் அதனது சரீரத்தில் இருந்து விழும் நீர் துளிகளை ஹவிஸ்ஸாகவும் எண்ணி एकस्मै स्वाहा என்கிற 10 மந்திரங்களை 100 தடவை அல்லது அதற்கு மேலும் உச்சரித்து அளவில்லாத ஹோமத்தால் அளவு கடந்த ஸம்பத்திற்கு யஜமானனுக ராஜாவைச் செய்வதுடன் குதிரையின் ஸம்மந்தமான நீர் துளிகளை ஹோமம் செய்ததாக பாவித்ததால் ஹவிஸ் சிதறிய தோஷத்தில் இருந்தும் விடுபட்டவனுகச் செய்கிருன் என்பது சொல்லப்படுகிறது.

अनुवाक:—७ प्रजापतये स्वा

அத்வர்யூ மட்டும் கிழக்கு முதலான திக்குகளில் இருந்து ப்ரஜாபதி முதலான தேவர்களின் ப்ரீதிக்காக ப்ரோக்ஷிக்கிறேன் எனச் சொல்லி குதிரையை எல்லா அவயவங்களிலும் ப்ரோக்ஷணம் செய்து ஸர்வதேவதா ப்ரீதிகரமாக செய்கிருன்.

अनुवाक:—८ यथा वै हविष:

மந்த்ர பாகத்தில் ईशानाय स्वाहा என்கிற அனுவாகத்தால் அச்வசரித (சேஷ்டா-நடத்தை)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹோமமும் श्वेताय स्वाहा कृष्णाय स्वाहा என்கிற இரு அனுவாகத்தால் 48 குதிரையின் வர்ண விசேஷங்களையும் (ரூபங்களையும்) சொல்லி ஹோமம் செய்ய வேண்டும். இவைகள் ஸாவித்திரியேஷ்டியில் ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்கு முன்பு ஆஹவநீயத்தில் செய்ய வேண்டுமென்றும் விதிக்கப்படுகிறது. ரூப ஹோமத்தில் ஒரு மந்த்ரம் அதிகமாக இருப்பது அளவு கடந்த ப்ரயோஜனத்தை கொடுக்கவல்லது. மந்திரத்திலேயே ஹோம ஸாதன பதமான ஸ்வாஹாகாரம் இருப்பதே ஹோமம் செய்ததாகக் கூறப்படுகிறது. மேலும் ஸ்வாஹாகாரம் தேவையில்லை.

अनुवाकः ९—विभूर्मात्रा

குதிரையின் வலது காதில் யாகம் செய்கிற ராஜா குதிரையின் பெயர்களான विभूः முதலான 13 பெயர்களைச் சொல்ல வேண்டும். இதில் வாகனத்திற்கு உகந்தது என்கிற அர்த்தம் உடைய ययुः என்கிற பெயர் குதிரைக்கு ரொம்பவும் ப்ரியமானது. இதற்குப்பின் சில ஹோமங்கள் செய்வித்து குதிரையை தனது இஷ்டப்படி சுற்ற விடவேணும். அதுஸமயம் 4, அதாவது அரசருகத் தகுந்த 100 ராஜகுமாரர்கள், அது முடியாத 100 ராஜகுமாரர்கள், 100 வைச்யர்கள், 100 சூத்ரர்கள் ஆக 400 பேரிடம் இக்குதிரையை காப்பாற்றும்படி அனுப்ப வேணும். அவர்கள் அரசனுடன் சேர்ந்து படுத்துக் கொள்ளும் பெருமை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாய்ந்தவர்கள், வீரர்கள். ஒவ்வொரு தினமும் மாலை ராஜஸேவகன் வீட்டில் குதிரையை இருக்கச் செய்து, அதன் 4 காலடியிலும் धृतिः என்கிற ஹோமம் செய்ய வேண்டும். இதனால் அது எங்கும் துலைந்து விடாமல் காப்பாற்றப்படுகிறது. ஒரு ஸமயம் சத்ருக்களால் குதிரை திருடப்பட்டால் அதைத் திரும்பிக் கொண்டுவர முடியாவிடில் அதற்கு பரிஹாரமாக வேறு யாக யோக்யமான குதிரையை கொண்டுவரச் செய்து ப்ரோக்ஷணம் முதலியன கர்மா முதல் செய்ய வேண்டும் என்பது இந்த அனுவாகக் கருத்து.

अनुवाकः १०—प्रजापतिरकामयत अश्वमेधेन यजेयेति

அச்வமேத யாகத்தில் त्रैधातवीया என்பது தீக்ஷணீயேஷ்டி. இங்கு ப்ரக்ருதியான அக்னிஷ்டோமத்தில் இருந்து 4 ஔத்க்ரஹண ஹோமமும் இந்த ப்ரகரணத்தில் சொல்லப்பட்ட 21 வைச்வதேவ ஹோமத்தில் இருந்து ஒவ்வொரு நாளும் 3 ஹோமமும் ஆக 7 ஹோமங்கள் செய்ய வேண்டும். இது தவிர ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட 5 ஹோமம் கடைசி தினம் सर्वस्मै स्वाहा என்று பூர்ணாஹுதி மந்திரத்தால் ஹோமம். பூர்ணாஹுதி ஹோமம் எல்லா ப்ரயோஜனத்தையும் கொடுக்கவல்லதாக சொல்லப்படுகிறது. இதை கூறிய இடத்தில் செய்வதுதான் உத்தமம். ப்ரஜாபதியானவர் தான் அச்வமேத யாகம் செய்ய விரும்பி தபஸ் செய்யும் போது அவரது முகபாகத்தில் உள்ள 7 ப்ராண

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதைகளும் வெளிகிளம்பி தீக்ஷா கர்மரூபமாக ஆனதும் அவைகளை அடைய ஸ்வாஹாதிं முதலான மந்த்ரங்களினுல் 7 தினங்கள் ஹோமம் செய்து அந்த தீக்ஷா தேவதைகளை வசப்படுத்தி தீக்ஷையை அடைந்ததாகக் கூறப்படுகிறது. அச்வமேதத்தில் 7 தினங்கள் தீக்ஷையை அனுஷ்டிக்க வேண்டும். அதற்குமேல் அனுஷ்டிக்கக் கூடாது.

अनुवाकः ११—प्रजापतिरश्वमेधमसृजत

வைச்வதேவ மந்திரங்களான स्वाहाऽऽधिमाधीताय என்பவைகளின் பொருள் கூறப்படுகின்றன. ப்ரஜாபதி, ப்ரம்மா, அக்னி, ஸரஸ்வதி, பூஷா, த்வஷ்டா, விஷ்ணு என்கிற 7 தேவதைகளின் ப்ரீதிக்காக அவர்களது மூன்று வகையான ரூபங்களுக்கு ஹோமத்தால் த்ருப்தி செய்வித்து பூர்ணாஹுதியையும் செய்கிறேன் என்பது கருத்து. இந்த ஹோமங்களால் அச்வமேதம் மிகவும் உயர்வை அடைகிறது.

अनुवाकः १२—सावित्रमष्टाकपालम्

முன் சொல்லப்பட்ட தீக்ஷைக்கு முன் ஒரு வருடம் காலை, மத்யாஹ்னம், அபராஹ்னம் (ச்ராத்தகாலம்) ஸாயங்காலம், இரவு என்று ஐந்தாக பிரிக்கப்பட்ட தினத்தில் 3வது 4வது பாகங்களிலும் ப்ரதி தினம் யாக சாலையில் செய்ய வேண்டிய 3 இஷ்டிகள் சொல்லப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படுகின்றன. காலையில் செய்ய வேண்டிய இஷ்டியில் ஸவிதா தேவதை 8 கபால புரோடாசம். இது காயத்ரீ தேவதைக்கு ப்ரீதியாகவும், மத்யாஹ்னத்தில் ப்ரஸவிதா தேவதை 11 கபால புரோடாசம்; த்ருஷ்ட்டுப் சந்தஸ்ஸிற்கு ஸமமாகவும், அபராஹ்னத்தில் ஆஸவிதா தேவதை 12 கபால புரோடாசம் ஜகதீ சந்தஸ்ஸிற்கு ஸமமாகவும் (கபால எண்ணிக்கையால் சந்தஸ்ஸின் பாத அக்ஷரத்திற்கு ஸமமாவது) அநுஷ்டித்து ஸாயமக்ஷியில் த்ருதி ஹோமம் என்பதை ஆஹவனீயத்திலும் செய்ய வேண்டும்.

இது தவிர வெளியில் 400 காப்பாளர்களுடன் அனுப்பப்பட்ட குதிரையை 12வது மாதத்தில் அரசங்கட்டைகளால் தயார் செய்யப்பட்ட கொட்டடியில் கட்டி அதற்குண்டான தீனிகளைத் தர வேண்டும். இதனால் குதிரையை தன் இருப்பிடத்தில் சேர்க்கப்பட்டதாக ஆகிறது. ஒரு ஸமயம் ப்ரஜாபதி தேவதைகளிடமிருந்து மறைந்து குதிரை உருவம் எடுத்து அரசமரத்தில் ஒரு வருடம் காலம் வசித்ததால் அந்தக் கட்டைகளைக் கொண்டு தயார் செய்த இடத்தில் குதிரையை வசிக்கச் செய்வது மிகவும் பொருத்தமாகிறது.

अनुवाकः १३—आग्रहूनम्

12 வகையான பிரார்த்தனை. தீக்ஷா ஸமயத்தில் யஜமானன் கழுத்தில் உறிகட்டி 'அதில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னியை வைத்து ஸம்ரக்ஷிக்க வேண்டும். அந்த அக்னியை இந்த மந்திரங்களால் வேண்ட வேண்டும். இவனுடைய உண்மையான பிரார்த்தனையாலும், மந்திரத்தின் ஸாமர்த்தியத்தாலும் தனது எண்ணம் எந்த தேசத்தில் இந்த யாகம் நடைபெறுகிறதோ அங்கு இவைகள் அவச்யம் ஏற்படுகின்றன என்பது வேதத்தின் கருத்து.

1. உயர்ந்த ப்ராம்மணனின் வம்சத்தில் வேத சாஸ்திரம், அதனுடைய அனுஷ்டானத்தில் ஆர்வம் உள்ளவன் பிறக்க வேண்டும். 2. அரச குலத்தில் வீரனும், அம்பு விடுவதில் ஸாமர்த்தியம் உள்ளவனும், பல சூரர்களை காப்பாற்றி தன்னையும் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய ராஜ குமாரன் பிறக்க வேண்டும். 3. நன்கு பால் கறக்கக்கூடிய பசு, 4. பாரம் சுமக்கத்தகுந்த காளை. 5. நன்கு ஓடக்கூடிய குதிரை. 6. வலிமை அழகு நிறைந்த உடலை உடைய ஸ்த்ரீ. 7. ரதத்தில் இருந்து சத்ருக்களை ஜயிக்கக்கூடிய வீரன். 8. தாருண்ய வயதில் (யுவா) நல்ல படிப்பும் புத்தியும் உள்ள யுவா. 9. எல்லா விஷயத்திலும் வீரனான புத்ரன். 10. எப்போது மழையை விரும்புகிறோமோ அப்போது நல்ல மழையும், 11. நல்ல பழங்களை உடையதுகளான பயிர்களும், 12 கிடைக்காத வஸ்து கைகூடுவதும், கிடைத்ததை காப்பதுமான யோக க்ஷேமமும் ஏற்பட வேண்டுமென்று பிரார்த்தித்து அதை அவ்வரசன் அடைகிறான் என்பது பொருள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்த மந்த்ரத்தை ச்ராத்த காலத்தில் பித்ருக்களாக வரிக்கப்பட்டவர்களிடம் ப்ரார்த்தித்து அவர்கள் அப்படியே கிடைக்கட்டும் என் ஆசிர்வதிப்பது போல் இன்று பல இடத்தில் மந்த்ரத்தை க்ருஹஸ்தன் சொன்னதும் பொருளைச் சொல்லக்கூடிய இந்த அனுவாகத்தை வரித்த வேத வித்வான்கள் சொல்வதும் ஸம்ப்ரதாயத்தில் இருந்து வருகிறது. உயர்ந்த ப்ரார்த்தனை.

अनुवाकः १४—प्रजापतिः देवेभ्यः

ப்ரஜாபதி தனக்கென்று அச்வமேதத்தை வைத்துக் கொண்டதும் மற்ற தேவர்கள் இதில் பங்கு கேட்டார்கள். அவர்களுக்கு இந்த அன்ன ஹோம மந்திரத்தை கொடுத்து திருப்தி செய்வித்தார்.

10 வகையான த்ரவ்யங்களால் இரவு பூராவும் 36 ஹோம கர்த்தாக்கள் சிறிய படுக்கையில் ஆஹவனீயத்தை சுற்றி இருந்து கொண்டு; விடியும்வரை செய்ய வேண்டும். முறையே அக்னி-நெய்; மஹாதேவன்-தேன்; வஸுக்கள்-அரிசி; ருத்ரர்கள்-அவல்; ஆதித்யர்கள்-பொறி; விச்வேதேவர்கள்-கரம்பம் (நெய்கலந்த சத்து மாவு); நக்ஷத்ரங்கள்-யவா: அதாவது வருத்த யவை அரிசி; ப்ரஜாபதி-வருத்த அரிசி மாவு; எல்லா தேவதைகள்-மஸூஸ்யாணி (இந்தப் பெயருடன் வடதேசத்தில் ப்ரஸித்தியாக உள்ள

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தான்யம் இதனால் அங்கு பருப்பு தயார் ஆகிறது). குதிரையின் அவயவங்கள்-ப்ரியங்கு தண்டுலம் (தங்க நிறமான அரிசி) இந்த 10 தேவதைகளுக்குப் பிரியமான 10 த்ரவ்யங்களால் இரவு பூராவும் திரும்பத் திரும்ப ஹோமம் செய்து அவர்களுக்கு ப்ரியத்தை ஸம்பாதிக்க வேணும். (முதலில் தேவதை, இரண்டாவது த்ரவ்யங்கள்) இதனால் எல்லாவிதமான அன்ன ப்ராப்தி ஏற்படுகிறது.

अनुवाकः १५—प्रजापतिरश्वमेधमसृजत

முன் அனுவாகத்தில் சொல்லப்பட்ட அன்ன ஹோமத்திற்கு காலமும், மந்த்ரமும் அதன் ஸாமர்த்தியமும் சொல்லப்படுகிறது. ப்ரஜாபதியால் உண்டாக்கப்பட்ட அச்வமேத யாகத்தை ராக்ஷஸர்கள் இரவில் நாசப்படுத்தி அழித்தார்கள். ஆகையால் அவர்களை ஒடுக்க இந்த நக்த ஹோமத்தைச் செய்தார்கள். இரவில் செய்வதால் ராக்ஷஸர்கள் செய்வதறியாமல் மந்த்ர வீர்யத்தால் ஓடினார்கள். இதற்கு ஏழாவது காண்டம் 8-வது ப்ரச்னத்தில் கடைசியில் சொல்லப்பட்ட एकस्मै स्वाहा முதலான 10 அனுவாகங்கள் மந்த்ரமாக சொல்லப்படுகிறது. முதல், கடைசி இரு அனுவாகத்திற்கும் நெய் த்ரவ்யம், ஆரம்பத்திலும் முடிவிலும் நெய் ஹோமம் செய்வதால் ப்ராணன் ரக்ஷிக்கப்படுகிறது. மற்ற அனுவாகங்களில் இரட்டைப் படை அனுவாகத்திற்கு மற்ற; தேன் முதலான அன்ன த்ரவ்யம், ஒத்தப்படை அனு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாகத்திற்கு நெய் த்ரவ்யம், இவ்விதம் மாற்றுச் செய்வதால் இருவிதமான நெய், அன்ன ப்ராப்தியும், ஒருமை இருமை இலக்யங்களை சொல்லக் கூடிய மந்த்ர ஹோமத்தால் இஹலோக, ஸ்வர்க்கலோக வாழ்வும் அபரிமிதமான ஆயுளும் கிடைக்கிறது.

अनुवाक: १६—प्रजापति वा

அன்ன ஹோம மந்த்ரங்களான எண்ணிக்கை தெரிவிக்கக் கூடியதுகளை விவரிக்கப் படுகிறது. ப்ரம்மா ஒருவர், அதை ஒன்று என்கிற एकस्मै स्वाहा என்பதால் ப்ரீதி செய்வித்து அவராகவே ஆகிறார். இது போன்று மற்ற மந்த்ரங்களால் அந்தந்த எண்ணிக்கை உடைய வஸ்து ப்ராப்தி. மேலும் கடைசீ அனுவாகத்தில் நூறு அதன் பத்து மடங்கு என பல எண்ணிக்கைகள். அவைகளினால் அதனதன் ப்ராப்தி. அதாவது एकस्वादि परार्धपर्यन्ता என எண்ணிக்கையை ஒன்று முதல் பரார்த்தம் வரை என்று சாஸ்த்ரம் கூறுகிறது. அதுவரை செய்து விடியற்காலையில் 4 ஹோமங்களை அதனதன் பிரிவு காலத்திலும் ஸூர்ய உதயம் ஆனதும் அப்பொருளைக் கூறும் 3 மந்திரங்களால் ஸூரியன் உதித்த பிறகும் செய்யவேண்டும். பிறகு பூர்ணாஹுதி ஹோமம், இவ்விதம் பிரித்துச் செய்வதால் பகல், இரவின் மாறுதல் நன்கு தெரிவதாகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः १७—विभूवसि

அச்வமேத மந்த்ரங்களில் ஸ்வாஹாகாரத்துடன் கூடிய பல மந்த்ரங்கள் 7-வது காண்டத்தில் எல்லா ப்ரச்னங்களிலும் சொல்லப்பட்டுள்ளன. அவைகளில் 2-வது ப்ரச்னத்தில் சொல்லப்பட்ட மந்த்ரங்களின் கருத்தை முன் அனுவாகங்களில் கூறப்பட்டது.

இந்த அனுவாகத்தில் மற்ற ஸ்வாஹாகார மந்த்ரங்களின் பெருமைகளையும் அவற்றின் பெயராலேயே அதனதன் ப்ராப்தியும் சொல்லப்படுகிறது. இதன் விபரமும் பெயர்களும் 7-வது காண்ட சுருக்கத்தில் காணலாம். இவைகள் அன்ன ஹோமங்கள்.

अनुवाकः १८—अक्रमा॑सि

மந்த்ர பாகத்தில் क्रम!, एक: मह: என மூன்று மந்திரங்கள் பன்மையில் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஹோமங்களால் அக்னி ப்ரகாசம், வஸுக்களுடன் சேர்ந்திருப்பது, இந்த லோகத்தில் வேண்டியதை அடைவது முதல் ஹோமத்தால், 2-வது ஹோமத்தால் அப்பெயருடைய அந்தரிக்ஷ லோகத்தையும், வாயுவின் ப்ரகாசத்தையும் (பெருமை) ருத்ரர்களின் ஸ்வரூபத்தையும், மூன்றுவது ஹோமத்தால் ஸூர்ய ப்ரகாசம், ஸ்வரூபம், உலகம் இவைகளும் அடைகிறான். இது போன்று அடுத்து வரும் மந்த்ரங்களில் இருக்கும் சப்தத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தால் (யவ்யம் கவ்யம், ஸந்ததி, ப்ரமுக்தி, அங்கம்) அந்தந்த ஹோமங்களினுல் அவற்றை அடைகிருன். कस्त्वा என்கிற 3 மந்திரங்களினுல் 3 பரிதிகளையும் தொட்டு அதன் பிறகு வரும் மந்த்ரங்களால் ஹோமம் செய்ய வேண்டும். மஹிமா, ப்ரம்மவர்சஸ் ஸந்ததி என்கிற மந்த்ர ஹோமங்கள் ப்ராம்மண பாகத்தில் சொல்லப் பட்ட தனி இரு ஹோமங்கள். அச்வஸ்தோமீயம் என்கிற यदक्रन्दः முதல் 3 அனுவாக ஹோமங்கள் (4-வது காண்டம் 6 ப்ரச்னத்தில் படிக்கப்பட்டது) செய்ய வேண்டும். இவைகள் யாவும் அன்ன ஹோமத்தில் சேர்ந்தவை. இரவு ஆரம்பத்தில் ஒரு தடவை எண்ணிக்கை ஹோமம் செய்து இவைகளையும் செய்து மிகுதி இரவு இருந்தால் மறுபடியும் எண்ணிக்கை ஹோமம். கடைசியில் ஒரு தடவை விடியற்காலையில் விடிந்து செய்ய வேண்டிய ஹோமங்களை செய்யும்படியும் அதன தன் ப்ரயோஜனத்தையும் விரிவாக சொல்லி யுள்ளது.

अनुवाकः १९—एक यूपः

ப்ரதானமான 3 தினங்களுடைய அச்வமேத யாகத்தில் முதல் தினம் இரவில் செய்யவேண்டிய அன்ன ஹோமங்கள் சொல்லப்பட்டன. இனி முன் தினம் குதிரை, மற்றும் க்ராம்ய, ஆரண்ய பசுக்களை உபயோகப்படுத்த யூபம் என்கிற மரத் தின் விசேஷங்கள் சொல்லப்படுகிறது. அச்வ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேதம் தவிர மற்ற யூபம் உள்ள யாகங்களில் 1 அல்லது 11 யூபங்கள் நட வேண்டும். அச்வ மேதத்தில் 21 யூபங்கள்.

இதில் ப்ரதானமான யூபம் ஆஹவனீயத்தின் எதிர்புரம் உள்ளது. ராஜ்ஜுதாலம் அதாவது ச்லேஷ்மாதகம் என்கிற மற்ருெரு பெயருடைய மரத்தில் செய்யப்பட்டதாயும் 21 அரத்னி (முன்சொல்லப்பட்ட அளவு) உயரமுடையதாகவும் இருக்க வேண்டும். மற்ற யாகங்களில் ஆங்காங்கு சொல்லப்பட்டது உயரமும், பில்வம் கருங்காலி, புரசு இவைகளில் ஏதாவது ஒரு மரத்தால் தயாரானதும் ஒன்றுமட்டும் என்பது மாறுபாடு. மேலும் மற்ற பசு யாகங்களில் ரத்தத்தை எடுப்பது கிடையாது. இங்கு குதிரை ரத்தம் எடுக்க தனியாக ஒரு மரகரண்டி. அதன் பெயர் ஸ்ரீ, இதனுல் ரத்தம் எடுப்பதால் பாப பரிஹாரம் ஏற்படுகிறது. மற்ற பசுக்களின் அவயவங்களை (ப்லக்ஷம்) இச்சிக் கொத்தில் எடுத்துவைக்க வேண்டும். குதிரையின் அங்கங்களை நொச்சிக் கொத்தில் வைக்கவேண்டும். இரண்டும் உண்டான இடம் ஜலம் அதனுல் சமமாகிறது. ஐந்தாவது காண்டத்தில் சொல்லப்பட்ட இந்திராய ராக்ஞேஸூகர என்கிற ஆரண்ய பசுக்களை 21 யூபங்களின் நடுபாகம் (வெற்றிடத்தில்) மனுஷ்யர்கள் கயற்றில் கட்டிபிடித்துக் கொள்ள வேண்டும். 20 யூபங்களில் க்ராம்ய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பசுக்களை ரோஹிதோ தூம்ரரோஹித: என்பவை களை கட்ட வேண்டும். இவற்றில் க்ராம்ய பசுக் களை ஹோமத்திற்கு உபயோகமாகவும், ஆரண்ய பசுக்களை பர்யக்னிகரணம் முடிய செய்து அதனிஷ்டப்படி விட்டு விடுவது பாப பரிஹார மாகும் என்பவை சொலலப்பட்டது.

अनुवाकः २०—राज्जुदालं

ஆஹவனீயத்தின் எதிரில் ராஜ்ஜுதால மரத் தால் ஆனதும் அதன் இருபுறமும் தேவதாரு என் கிற வாசனை மரத்தால் தயார் செய்யப்பட்டதும் ஒவ்வொன்றும் அதன் இருபுரமும் மும் மூன்று பில்வ மரத்தால் ஆனதும் அதன் இருபுறம்கருங் காலி மரத்தால் உண்டாக்கப்பட்ட மூன்று மூன்று யூபங்களும், அதன் இருபுறமும் புரச மரத்தால் நிர்மானம் செய்யப்பட்ட மூன்று மூன்று யூபங் களும் நடவேண்டும். ஆக 21 யூபங்கள் இருக் கின்றன. இதில் ச்லேஷ்மாதகத்தால் கர்பவத தோஷமான ப்ருணஹத்தியை ஒழித்து சுகந்த மான தேவதாருவால் யஜமானனிடம் சுகந்தமான புண்யத்தையும் பில்வத்தால் ப்ரம்மவர்ச்சஸ்ஸை யும், கருங்காலியால் சரீரகாந்தியையும், புரசால் ஸோமபானத்தையும், 21 என்கிற எண்ணிக்கை யால் 12 மாதம் 5 ருதுக்கள் 3 உலகங்கள் 1 ஸூர்யன் ஆக இதுபோன்ற ஸ்வர்க்க ப்ராப்தியும் ஏற்படுகிறது. மேலும் அச்வமேதத்தில் ஆங் காங்கு அனுஷ்டிக்க வேண்டியதாக சொல்லப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பட்ட பசுக்கள் 100க்கு மேல் இருப்பதால் யஜ மானன அரசன் பூர்ணமான ஆயுஸ்ஸை அடை கிறான்.

வேத வித்வான்களின் சர்ச்சை, அக்னியின் வடபுறம் குதிரை, கொம்பில்லாத வெள்ளாடு, கொம்புடன் கூடியதும், துஷ்டையுமான காளை (கோம்ருகம் என்பது, பசு அல்லது மான் இவை இரண்டிற்கும பிறந்தது கோம்ருகம் இவைகளின் அவயவங்களை வைக்கப்படுகிறது. மற்ற பசுக்களின் ஹவிஸ்ஸை (அக்னிக்கு) தென் புறம் வைக்கப்படுகிறது. ஏனெனில் வடக்கு திக்கும், குதிரையும் வருணன் தேவதையாக உடையது. அதனுல் அந்த திக்குக்கு பொறுத்த மானதும், தேவ மனுஷ்யர்களுக்கு சாந்தியை கொடுக்கக் கூடியதும் ஆகும். மற்ற பசுக்களின் ஹவிஸ்ஸை தென்புறம் வைப்பதால் பல தேவதை களை உடையயாக ப்ரயோஜனத்தை அடையலாம் என்பதால், இது போன்று மாறுதலாக வைக்கப் பட்டது என தீர்மானித்தார்கள். மேலும் மந்திரங் களாலும், கற்களாலும் தயார் செய்யப்பட்ட மேடையில் நொச்சிக் கிளையில் பாய் பரத்தி அதில் குதிரையின் அவயவங்களை வைப்பதால் தனது பிறப்பிடத்திற்கே அனுப்பியது போல் ஆகிறது. அச்வ ஹவிஸ்ஸிற்கு கிழக்கில் மேற்கு முகமாக தூபர ஹவிஸ்ஸையும் மேற்கு புறம் கிழக்கு முக மாக கோம்ருக ஹவிஸ்ஸையும் வைத்து ப்ராஜு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாணனை ஸரிவர இருக்கும்படி செய்கிறான். இம் மூன்று பசுக்களின் ஹவிஸ்ஸை முழுமையாக யாவற்றையும் மிகுதி இல்லாமல் ஹோமம் செய்து விடவேண்டும். இதற்கு மேல், 5வது காண்டத்தில் சொல்லப்பட்ட ஸாஹா என்கிற பெயருடைய ஸ்தேகாந் என்கிற மந்திரங்களால் ஹோமமும், அதன் பிறகு இரு மந்த்ரங்களால் இரு ஹோமமும் செய்து, பல உலகங்களை ஜயிப்பதும், குதிரையை உயிருடன் இருப்பதகாச் செய்வதும், பணப் பெருக்கையும் அடைந்து பல வருடங்கள் ஜீவித்து மூப்புதன்மையில் வேண்டிய உயர்ந்த உலகத்தை அடைவதாகக் கூறப்படுகிறது.

अनुवाकः २१—एकविंशोऽग्निः

அச்வமேதத்தில் 21 புருஷர்களால் (வேதவித்வான்களால்) மந்த்ரபூர்வமாக தயார் செய்யப்பட்ட மேடையும் (அக்னியும்) 21 எண்ணிக்கை உடைய ஸ்தோமமும் 21 யூபங்களும் ஸம்பந்தப்பட்டவைகளாக செய்ய வேண்டும் என்பதுதான் தீர்மானம். ஆனால் இதைமாற்றி 12 பேர்களால் தயார் செய்யப்பட்ட மேடை (அக்னியும்) 12 எண்ணிக்கை உடைய ஸ்தோமமும் 11 யூபமும் இருக்க வேண்டும் என்பது ஒரு சாரரின் கருத்து. இதன் ப்ரயோஜனம் 12 என்கிற எண்ணிக்கையால் மாத எண்ணிக்கை மூலம் வருட ப்ராப்தியும் யூப எண்ணிக்கை 11ல் 10 என்பதால் இந்த எண்ணிக்கையை ஒவ்வொரு பாதத்திலும் உள்ள

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விராட் என்கிற சந்தஸ் ப்ராப்தியும் அதன்மூலம் அன்ன ப்ராப்தியும் மிகுதி 1 எண்ணிக்கையால் ஸ்தன ரூபமாகச் சொல்லி இஷ்டத்தை அதன் மூலம் அடைவதாகவும் சொல்லப்பட்டது. 21 என்பது அதிகமான எண்ணிக்கை எல்லாவற்றி லும் இருப்பது. முரட்டுப் பொதிகாளை பெண் மாடு அல்லது பொதி குதிரை பெண் குதிரையைக் கண்டதும் தனது வீர்யத்தை வீணடிப்பது போல் ஆகிவிடும். அந்த தோஷம் 12 எண்ணிக்கையில் இல்லை என்பது கருத்து.

இருப்பினும் 12, 11 என்கிற வித்யாஸமான எண்ணிக்கையானது, பொருத்தமில்லாத மாடு களை கட்டி, கரடுமுரடான வழியில் அதிக பாரங் களை ஏற்றிச் செல்லும் வண்டி போல் ஆகும். ஆதலால் ஸமமான வழியில், ஸமமான வாகனத் தில் எவ்வளவு பாரமானாலும் கொண்டு செல்ல முடியுமாதலால் 21 எண்ணிக்கையே ஸரியாகும். அதுவும் ஒருமுறையில் காளையின் திமிள் போன்று 3 உயர்ந்த அவயவங்களுடனும் அதுபோன்று 3 சிரஸ் உடையது போன்றும் அச்வமேதம் இருப் பதால் எஜமானனும் திமிள் போன்று நிமிர்ந்த வனாகவும், சிரஸ் போன்று முக்கியமாகவும் ஆவதால் 21 எண்ணிக்கையே அக்னி, ஸ்தோமம், யூபம் இவைகளில் இருப்பதுதான் ஸரி என நிர்ணயம் செய்யப்படுகிறது. 21 எண்ணிக்கை யின் பெருமையை 21-வது அனுவாகத்தில் சொல்லியுள்ளது மிகப் பொருத்தம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अनुवाकः २२—देवा वा अश्वमेधे

ஒரு ஸமயம் தேவர்கள் அச்வமேதத்தை அனுஷ்டித்தும் ஸ்வர்க்கத்தைக் காணமுடியவில்லை. ஆனால் அதில் ஸம்மந்தப்பட்ட குதிரையோவெனில் ப்ரஜாபதி தேவதாகமானதால் ஸ்வர்க்கத்தை அறிந்தது. ஆகையால் பஹிஷ்பவமான ஸ்தோத்திரம் சொல்வதற்கு குதிரையை முன்கொண்டு அதன்வாலை பிடித்தவர்களாக ரித்விக்குகள் வடக்கு நோக்கி செல்ல வேண்டும். மேலும் தேவர்களே அறியாத ஸ்வர்க்கத்தை மனுஷ்யன் அறிய முடியாததாலும், குதிரை அறிந்துள்ளதாலும் அதை ஸ்வர்க்கத்தை அடைய மனுஷ்யனுக்கு உத்காத்ருவரணம் (ஸாமகானம் செய்ய) கொடுக்காமல் குதிரையை உத்காதா என்கிற ரித்விக்காக வரணம் செய்து அதன் முன்பு பெண் குதிரைகளை நிறுத்த வேண்டும். அதைப்பார்த்ததும் ஆண்குதிரை கனைத்தால் அதுவே ஹிங்காரமான ஸாமகான ஆரம்பமாகவும், பெண் குதிரை எதிர்கனைப்பு கனைத்தால் அதுவே பஹிஷ்பவமான ஸ்தோத்ரகானமாகவும் எண்ணி அத்வர்யூ இக்குதிரை கானம் செய்தது என்று சொல்லி உத்ஸாகப்படுத்தி உக்திய ஸம்ஸ்தாகமான இரண்டாவது ப்ரதான யாக தினத்தை ப்ரயோஜனமுடையதாகச் செய்கிறான். மேலும் முதல் யாகமான அக்னிஷ்டோமத்தில் தர்ப்ப முஷ்டியை உத்காதாவிடம் கொடுத்து ஸ்தோத்திரத்தை ஆரம்பிக்கச் செய்கிறான். இங்கோ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெனில் தங்கத்தை கொடுத்து ஆரம்பிக்கச் செய்ய வேண்டும். இதனுல் தங்கம் போல் மினு மினுப்பான ப்ரகாசத்தை அரசனிடமும், ப்ரஜை களிடமும் சேர்ப்பதோடு அதே மினு மினுப்புடன் யாகம் செய்பவன் ஸ்வர்க்கத்தை அடைகிருன்.

अनुवाकः २३—पुरुषो वै पशुः

ப்ரஜாபதியால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட யக்ஞனார் யங்களைச் செய்வதால் செய்யும் மனிதனிடம் யக்ஞமாகிருன், அதுபோல் அச்வம் ப்ரஹஸ்பதி தேவதையாக இருப்பதால் அதனிடத்தில் கட்டப் படுவதாக த்யானம் செய்வது யக்ஞத்தை யக்ஞத் தாலேயே தொடரப்படுகிறது. குதிரையின் ஸமீபத்தில் நடு யூபத்தில் குதிரை, கொம்பற்ற வெள்ளாடு கோம்ருகம் இவைகளையும், கழுத்தில் கருப்புள்ள வெள்ளாட்டை அக்னி தேவதைக்காக குதிரையின் நெற்றியிலும், பூஷ தேவதாகமான அஜத்தை அதனை அனுசரித்து பின்புறமும், குதிரையின் மேல்பாகத்தில் இந்திரன், பூஷா இவர்களை தேவதையாக உடைய பசுவையும், குதிரையின் முன்கால்பக்கம் கழுத்தில் கருப்பு உள்ளதும், அக்னி தேவதாகமான இரு பசுக்களை யும், மயிர் அடர்த்தியான துடை பாகங்களை உடையதும், த்வஷ்டாவை தேவதையாக உடைய துமான இரு வெள்ளாடுகளை குதிரையின் தொடை பக்கத்திலும், வெளுப்பான மேல்பாகத்தை உடை யதும், ப்ருஹஸ்பதி தேவதாகமான துமான இரு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெள்ளாடுகளை குதிரையின் ஒருபுறமும், வெளுப் புப்புள்ளியை வயிற்றில் உள்ள அஜத்தை தாத்ரு தேவதாகமாகவும், குதிரையின் அடிப்புறமும் ஸௌர்ய தேவதாகமாயும், வெளுப்பான ஆண் வெள்ளாட்டை குதிரையின் வால்புறத்திலும் கட்டப்பட்டதாக த்யானம் செய்ய வேண்டும்.

இதுபோன்ற தியானத்தால் முறையே ஸேனையில் வீரர்களான புருஷர்களை முன்பு அனுப்புவதுடன், ராஜாவும் வீரனுகத் திகழ்கிறுன், அடுத்த பசுவின் மகிமையால் ஆஹவனீயத்தை கிழக்கில் ப்ரதிஷ்டை செய்தவனுகவும், பூஷ தேவதாகமான பசுவால் அன்ன ஸம்ருத்தியையும், அடுத்த பசு கட்டப்படுவதால், தான் எதையும் சாய்பிடும் சக்தியுடையவனுகவும் குதிரையின் முன்காலாகிற கைகளில் கட்டப்படுவதாக தியா னிப்பதால் யஜமானன் பலமுள்ள கைகளை உடை யவனுகவும், துடையில் கட்டப்படுவதாக நினைப் பால் அரசன் துடையில் பலத்தோடு கூடியவனுக வும், வெளுத்த மேல்பாகத்தை அடைய அஜங் களை கட்டுவதால் யாகம் செய்பவன் ப்ரம்மவர்ச ஸம் என்கிற காந்தியை பெற்று, யுத்தத்தில் கவசம் பூண்டவனுக தனது பராக்ரமத்தை காட்டு பவனுகவும், குதிரையின் வயிறுபாகத்தில் கட்டப் படுவதால் பூமியில் நிலையாக இருப்பவனுகவும், பின்புறம் உயரே உள்ள ஸௌர்ய தேவதாகமான பசுவை கட்டுப்படுவதாக த்யானம் செய்வதால்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உலகத்தில் பெரிய பயம் ஏற்படும் ஸமயம் ப்ரஜைகள் உயர்ந்ததான இடத்திற்கு சென்று பயம் நீங்கியவர்களாக ஆவது போல் இந்தக் குதிரையும் உயரமான இடத்தில் இருப்பதாகச் செய்து மேலே சொன்ன ப்ரயோஜனங்களை அடைகிறான்.

ஒன்பதாவது ப்ரச்னம்

அச்வமேத ப்ராம்மணம் (2)

க்ரதுகளில் உயர்ந்ததான அச்வமேதம் ப்ரதானமான மூன்று தினங்களை உடையது. 1. அக்னிஷ்டோம ஸம்ஸ்தாகம் 2 உக்த்ய ஸம்ஸ்தாகம் 3 அதிராத்ர ஸம்ஸ்தாகம் என்பன. இவைகளில் முதல் தினத்தின் முன் வருடத்தில் நடக்க வேண்டிய ஸாங்க்ரஹனேஷ்டி முதல் பலவிதமான அங்க யாகங்களை முதல் ப்ரச்னத்தில் இரண்டாவது ப்ரதான தினத்தில் செய்ய வேண்டிய பசுக்களின் உபாகரணம் வரை கூறப்பட்டது. மிகுதியாக உள்ள தினங்களில் அனுஷ்டிக்க வேண்டிய கார்யங்களை இந்த ப்ரச்னத்தில் காணலாம்.

अनुवाकः १—प्रजापतिः अश्वमेधमसृजत (१)

ப்ரம்மாவினால் ஸ்ருஷ்டி செய்யப்பட்ட அச்வமேதயாக தேவன் ஏதோ காரணத்தால் அவனை விட்டு மறைந்தான். அவனை அடைய ரோஹிதோ என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆரம்பமாகிற 10 அனுவாகத்தில் சொல்லப்பட்ட பசுக்களை ஆலம்பனம் செய்து அதன் மூலம் அச்வ மேதத்தை அடையப் பெற்றதால், இப்பொழுது அனுஷ்டிப்பவனும் அதை அனுஷ்டித்து யாக பலனை அடைய வேணும். இந்த பசுக்கள் ஒவ்வொரு அனுவாகத்திலும் 18 சொல்லப்பட்டுள்ளதால் இவைகளை அஷ்டாதசின: எனக் கூறப்படுகிறது.

இவைகளை, 1 யூபத்தில் 9 வீதம் ஆஹவனீயத்தின் எதிரில் இருப்பதை அச்வம் முதலியவைக்காக விட்டு இரு புறமும் இருக்கும் மற்ற 20 யூபங்களிலும் கட்ட வேண்டும், இதனால் ஸம்வத்ஸர ப்ராப்தி, ஆலஸ்ய மின்மை, யஜமானன் வீர்யவானாகவும் ஆவது ப்ரயோஜனமாகக் கூறுகிறது. இவைகளை பூர்ணமாக அனுஷ்டிக்க வேண்டும். யூபங்களின் மத்தியில் நிறுத்தியுள்ள ஆரண்ய பசுக்களை பூர்ணமாக அனுஷ்டித்தால் காடுகள் மூலம் ஏற்படும் பல பயங்கள் ஏற்படுகிறது. மேலும் தகப்பன் பிள்ளைக்குள் விரோத மனப்பான்மை, வழிபறிக்கொடுமை, பல துஷ்ட ஜந்துக்களின் ஆக்ரமிப்புகள் இவைகள் ஏற்படும், மேலும் காட்டுப் பசுக்களை ஹிம்ஸிப்பதால் எஜமானனை, அவனைச் சேர்ந்தவர்களை காடு எனச் சொல்லப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்ல நேரிடும். அனுஷ்டிக்காமல் இருந்தாலோ யக்ஞ நாசம். ஆகையால் பர்யகரணம் வரை செய்து ஆரண்ய பசுக்களைவிட்டு, நாட்டுப் பசுக்களான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவைகளால் பூர்ணமாக அனுஷ்டானம் செய்தால் முன் சொன்ன எல்லாவித தோஷங்களுக்கும் பரிஹாரமாகிறது என்பது இந்த அனுவாக விஷயம்.

अनुवाकः २—प्रजापतिरकामयत

ஸூத்ரத்தில் தெரிந்து அனுஷ்டிக்க வேண்டிய சாதுர் மாஸ்ய பசுக்களும் ஐகாதசின பசுக்கள் தசத பசுக்கள், இவைகளை அனுஷ்டித்து இஹ லோக பரலோக ஸௌக்யத்தை யஜமானன் அடைகிறான். அவைகள் பல தேவதாகமாகவும், பல வர்ணங்களோடும், பல பிரிவுகளை உடையதாக இருப்பது இது போன்ற ப்ரயோஜனத்தை அடையக் காரணமாவதாகக் கூறுகிறது.

अनुवाकः ३—अहवै वै षोडाय

க்ராம்ய, ஆரண்ய பசுக்களின் அனுஷ்டானத்தால் இருவிதமாக உள்ள, இஹ பரலோக ப்ராப்தி அதுபோன்று நாடு, அரண்ய இவைகளில் உண்டாகும் அன்னப்ராப்தி இருவித பசுப்ராப்தி இவைகளை சொல்லி க்ராம்ய பசுக்களின் வபா ஹோம ஸமயத்தில் ஒவ்வொரு தேவதைக்கும் மூன்று பசுக்கள் இருப்பதால் மூன்று வபையும் சேர்த்து ஹோமம் செய்ய வேண்டும். இதனால் மூன்று உலக ஸம்பந்த இஷ்டப்ராப்தி. மேலும் பல விதமான பசுக்களை அச்வமேதத்தில் உபயோகப் படுத்துவதால் ஜனங்களுக்கும் அதை அனுசரித்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பலவித ஆசைகள் நிறைவேறுகின்றன. க்ராம்ய பசுபோல் ஆரண்ய பசுவின் வபாஹோமம் கூடாது. பர்யக்னிகரணம் முடியச் செய்து அவைகளை ஹிம்ஸிக்காமல் விட்டு'விடவேண்டும் எனக் கூறுகிறது.

अनुवाकः ४—युञ्जन्ति

மந்த்ர பாகத்தில் உள்ள பல மந்த்ரங்களுக்கு பொருள் கூறும் விதத்தில் ஆதித்யன், அக்னி, வாயு போன்ற பல தேவதைகளால் இந்த குதிரையானது ரதத்தில் சேர்க்கப்படுவதாகவும், இதன் பக்கவாட்டில் இதற்கு அனுகூலமாக மேலும் இரண்டு குதிரைகளை கட்டச் சொல்லியும், ரதத்திற்கு கொடிகட்டும் படியும், சில மந்திரத்தால் அச்வத்தை உத்ஸாஹப் படுத்துவதையும், யஜமானனுக்கு மந்திரத்தை சொல்லி வைப்பதையும், பல பத்னீக்களை உடையவனானதால் அதில் ப்ரதானமான மஹிஷீ, வாவாதா, பரிவ்ருத்தீ என்கிற மூவர்களால் தங்கமயமானதும், வெள்ளிமயமானதும், ஸமுத்திரத்தில் இருந்து கிடைக்கக்கூடிய மணிகளால் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட இடங்களில் பல மணிகளை கட்டி; ஹவிஸ்ஸாகிற குதிரையின் மேலிருந்து விழுந்த மயிர்களை அவ்வப்பொது எடுத்து'ஹவிஸ்ஸை பரிசுத்தமாகச் செய்வதையும். அவைகள் ஆயிரக்கணக்காக இருக்க வேணும் மென்பதையும்,'ப்ராணிகளும் 3 வித புல்களால் 3 இடத்தில் நெய்யை மந்தரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சொல்லித் தடவுவதால், யஜமானனை தேஜஸ் முதலானதொடு கூடினவாகச் செய்வதையும், குதிரைகளை தண்ணீர் இருக்குமிடம் அழைத்துச் சென்று அதுவாக தண்ணீரை நுகராவிடில் மந்த்ரம் சொல்லி நுகர்ந்ததாக செய்வதையும், சில மந்த்ரங்களால் அச்வத்தை அனுமந்த்ரித்தும், அச்வஸம்பந்த ஹவிர்ஹோமத்திற்கு வேண்டிய மந்த்ரங்களையும் விதிக்கப்படுகிறது. இதை குதிரை அலங்காரமாக சொல்லப்படுகிறது.

अनुवाकः ५—तेजसा वा

ஜகத்காரண ப்ரம்ம ஸம்மந்தமான பல கேள்விகளும், பதிலுமாக அதிக உழைப்பால் செய்யப்படுகிற யஜமானின் காந்தி முதலானது வீணாவதை சேர்த்துவைக்க ப்ரம்மோத்யம் என்கிற ப்ரயோகம் சொல்லப்படுகிறது. இதில் கேள்வி பதில் ரூபமாக மந்த்ரம் அமைந்துள்ளது. அதன் பொருளைக் கூறும் இடமான 7வது காண்டத்தில் காணலாம். கேள்வி கேட்கும் ஹோதா என்கிற ரித்விக்கு நடு யூபத்திற்கு வடக்குபக்கத்திலும், பதில் சொல்கிற ப்ரும்மா தெற்கு பக்கத்திலும் உட்கார்ந்து விசாரித்து அறிவதே ப்ரம்மோத்யமாகும். 12 கேள்விக்கும் பதிலும் மந்திரத்திலேயே உள்ளன. ப்ரம்ம ஸம்பந்தமாகவும், அறிந்து கொள்ள வேண்டிய அவச்யத்தாலும் இம்மந்திரத்தை ச்ராத்தகர்த்தா கேள்வியைக் கேட்டதும் ச்ராத்த போக்தாக்களான வேதவித்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வான்கள் பதிலான மந்திரத்தைச் சொல்லி ப்ராம் மணபாகமான இந்த அனுவாகத்தையும் (வேத வித்வான்களான போக்தாக்கள்) சொல்வது இன்று ஸம்ப்ரதாயத்தில் இருக்கிறது.

अनुवाकः ६—अपवा

குதிரையை ஸம்ஞபனம் செய்யும் ஸமயம் செய்ய வேண்டிய சில ஹோமத்தால் கடுமை யான யாகம் செய்யும் யஜமானனின் ப்ராணங் களை ஸ்திரமாக இருக்கச் செய்கிறான். குதிரை இறந்ததும் ப்ரதிப்ரஸ்தோதா अम्बे, अम्बालि, अम्बिके என்கிற சப்தங்களால் 3 வித ராஜ பத்னிகளைக் கூப்பிட்டு அந்தக் குதிரையை வலமாகவும், இட மாகவும், மறுபடி வலமாகவும் சுற்றிவரச் செய்து அதை எழுந்திருக்கும்படி செய்யச் சொல்கிறான். அதுவும் எழுந்திருப்பது போன்று மந்த்ரம் இருப் பது என்பது உபசாரமான கார்யங்களாகக் கருதப் படுகிறது. பிறகு தங்கம், வெள்ளி, இரும்பு, இவைகளால் தயாரான மூன்று கத்திகளால் ஸூத்ரத்தில் சொல்லப்பட்டபடி 3 ராஜ பத்னி களுக்கும் மந்த்ரம் சொல்லி கோடுகளை இழுக்க வேண்டும். இறந்த குதிரையோடு மஹிஷீ என் பவளை வஸ்த்ரத்தால் சற்று நேரம் மூடி, சில மந்த்ரத்தால் தனது எண்ணத்தையும், வருத்தத் தையும் தெரிவிக்க வேண்டும். कस्त्वा छ्यति என்கிற மந்த்ரத்தால் தோலைக் கிழித்து சந்த்ரன் என்கிற பெயரை உடைய குதிரைக்கு வலிமை தரும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ரவ த்ரவ்யத்தை எடுக்க வேண்டும். இவை யாவும் இறந்த குதிரையின் உபசாரம் என கூறப் படுகிறது.

अनुवाक: ७—अपणा (२)

இறந்த குதிரையை தேவதா ஸ்வரூபமாகக் கருதி, அந்த தேவதையுடன் மஹிஷீ என்ப வளுக்கு இஹலோக சிற்றின்ப அனுபவங்கள் ஏற்படுவதாகவும், வேத்தில் சொல்லப்படாதது இல்லை என்பதை விளக்க இந்தச் சிற்றின்பத்தை அனுபவிக்க வேண்டிய முறைகளையும் சொல்லி, யாக மத்தியில் இது போன்ற க்ராம்ய செய்கை களை ஞாபகம் கொண்ட பாபம் விலக எல்லா ராஜ ஸ்திரீகளும், ஸுரபி சப்தத்தை உடைய "ஏரிஷ்ணு:" என்கிற மந்த்ரத்தை சொல்லி, இந்திரியங் களை ஸ்வவசப்படுத்தி ஆபோஹிஷ்டா என்கிற 3 மந்த்ரங்களால் பாப பரிஹாரமாக அவரவது உடலை தீர்த்தங்களால் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். இந்த அனுவாகம் இறந்த குதிரை யின் உபசாரமாகக் கூறப்படுகிறது.

अनुवाक: ८—प्रजापति: प्रजा: सृष्ट्वा

ஒரு ஸமயம் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்த ப்ரஜா பதி அவர்களிடம் இருந்த அன்பினால் அவர்களின் சரீரத்தில் ப்ரவேசித்து வெளிவர முடியாமல் ச்ரமப்பட்டார். அதுஸமயம் என்னை வெளிக் கொண்டு வருபவர் ஸம்ருத்தியுடன் இருப்பார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்றதும் தேவர்கள் அச்வமேதத்தை அனுஷ்டித்து அதன் ப்ரயோஜனமாக ப்ரஜாபதியை வெளிவரச் செய்து ஸம்ருத்தியோடு கூடினவர்களானார்கள். இதை அனுஷ்டிப்பவனும் அறிபவனும் இது போல் ஆவான். மேலும் இதில் ஸ்த்ரீயை ஆலம்பனம் செய்யும்படி விதி உள்ளது. இது போன்று பல வகையான மனுஷ்ய, குதிரை, கோ, வெள்ளாடு செம்மறியாடு போன்ற வகைகளை ஆலம்பனம் செய்வதையும் அதனால் ஏற்படும் ப்ரயோஜனத்தையும், ஆரண்ய பசுவைப் போல் மனுஷ்ய பசுவையும் பர்யக்னிகரணம் செய்து விட்டு விடவேண்டும் எனவும் கூறுகிறது. இவைகள் தேவதைகளுக்கு ப்ரியமானதுகளாக ஆகின்றன,

अनुवाक: १—ध्रुवेण वा एष:

த்ருவ்ருத், பஞ்சதச, ஸப்ததச, ஏகவிம்ச என்கிற 4 வித ஸ்தோத்ரத்தை உடைய அக்னிஷ்டோம ஸம்ஸ்தாகத்தால் முதல் தினம் அனுஷ்டித்து ஸம்ருத்தியை யடைந்த அச்வமேதயாககர்தா 21 ஸ்தோத்ரத்தை உடைய மற்ற இரு தினங்களில் ப்ரதிஷ்டையை அடைகிறான். இரண்டாவது தினமான உக்த்யத்தில் சாக்வர ஸாமகானம் செய்யவேண்டும். மேலும் அச்வமேதத்தில் கோரூபமான பல பசுக்களை அனுஷ்டிக்க வேண்டும். இவைகள் 5வது காண்டத்தில் 6வது ப்ரச்னகடைசி 3 அனுவாகத்தால் சொல்லப்பட்டவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெள்ளாடு, செம்மறி இவைகளைக் காட்டிலும் இது போன்ற பசுக்களையே முக்ய பசுக்களாகச் சொல்லப்படுவதால் அவைகளை அனுஷ்டித்து பலவித பசுக்களையும் ருது போகங்களையும் யஜமானன் அடைகிறான். இவைகள் 3வது ப்ரதான தினத்தில் அனுஷ்டிக்க வேண்டியவை. அவப்ருதம் ஆனதும் ஸூர்ய தேவதாகமானதும் வெளுப்பானதும் மலடியானதுமான 3 பசுக்களை (கோ) அனுஷ்டிக்க வேண்டும். ஆட்டுக் குட்டியையும் கருப்புப் பொட்டுள்ளதும், தித்திரி என்றும் பக்ஷியையும், வெள்ளைக் கொக்கையும் த்வஷ்டாவின் ப்ரீதிக்காக ஆலம்பனம் செய்து இவைகளை விட்டு விடவேண்டும். இது போன்று பல வகையான ஜீவராசிகளுக்கு அச்வமேதத்தில் ஸம்பந்தத்தை கொடுத்து ஜன்மாவை பரிசுத்தமாகவும், ப்ரயோஜனமாகவும் செய்விக்கிறான்,

अनुवाक: १०—प्रजापतिरकामयत

ப்ரஜாபதியானவர் எல்லோரையும் விட பெருமை வாய்ந்தவராகவும், எதையும் சாப்பிடும் சக்தி உள்ளவராகவும் இருக்க விரும்பி, இரு மந்த்ரங்களால் மஹிமா எனக் கூறப்படுகிற இரண்டு க்ரஹங்களை க்ரஹித்து (தங்கம் வெள்ளி க்ரஹத்தால்) அவ்விரண்டில் ஒன்றை வபா ஹோமத்திற்கு முன்பும் ஒன்றை பின்பும் ஸ்வாஹாகாரத்தை முன், பின்னாக உள்ள இரு மந்திரங்களால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹோமம் செய்து அந்த தேவதைகளை த்ருப்தி செய்விக்கிருன்.

अनुवाकः ११—वैश्वदेवो वा अश्वः

स्तेगान् दंष्ट्राभ्यां என்கிற 14 அனுவாக மந்த்ரங்களாலும அருணத்தில் சொல்லப்பட்ட [illegible] என்கிற அனுவாகத்தாலும், நெய் த்ரவ்யத்தால் பிணைத்துக் கொண்டு சரீர ஹோமங்களையும், கோம்ருகத்தின் கழுத்தை அதன் உயிரைப் போக்கும் ஸமயம் பிணைவாக பத்ரப்படுத்தி அதனுலும் குதிரையின் குளம்பால் இரண்டாவதும், இரும்பால் செய்யப்பட்ட கிண்டியால் மூன்ருவதுமான ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தையும் இங்கு சொல்லப்படுகிறது. குதிரையினிடம் எல்லா தேவதைகளும் சேர்ந்திருப்பதாக முன்பு சொல்லப்பட்டுள்ளதால் அதை ப்ரஜாபதிக்கு மட்டில் ஸமர்ப்பித்தால் தேவதா ஸமூகத்திற்கும் ப்ரஜாபதிக்கும் சண்டை ஏற்படும். அதற்காக மற்ற எல்லா தேவதைகளுக்கும் சரீர ஹோமத்தால் த்ருப்தி செய்வித்து குதிரையை ப்ரஜாபதிக்கு கொடுத்து ஸமாதானப் படுத்தப்படுகிறது.

ஒரு ஸமயம் தேவாஸுர சண்டை மூண்ட போது ஸ்விஷ்ட க்ருதி தேவதைகள் யாக ஸம்பந்த குதிரையின் சரீரத்தில் இருந்து தேவதைகளுக்கு பொதுவாக இல்லாததும் உயர்ந்ததுமான ரத்தத்தை தங்களுக்காக எடுத்து அவர்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அசுரர்களை ஜயித்ததால் அச்வமேத யாகத்தில் ரத்தத்தால் 3வித ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்து முதல் இரு ஹோமங்களால் ருத்ரனிடமிருந்து பசுக்களையும், கடைசீ ஹோமத்தால் ப்ரஜைகளையும் காப்பாற்றப்பட்டது. இவ்விதம் செய்வது இந்த ப்ரயோஜனத்தை அடைய வழியாகும்.

अनुवाक: १२—अश्वस्तपरा

அச்வமேதக் குதிரையின் ஸாரமான பாகத்தில் இருந்து ஏற்பட்ட यदक्रन्दः என்கிறது முதல் 35 மந்த்ரங்களை உடையதும் 36 வதாக क्रमैः என்கிற மந்த்ரத்தாலும் அச்வ ஸ்தோமீயம் என்கிற ஹோமங்களை நெய்யால் செய்ய வேண்டும். ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்கு முன்பும் நாஸிஷ்ட ஹோமத்திற்குப் பிறகும் அருணம் முதல் ப்ரச்னத்தில் சொல்லப்பட்ட இரண்டு பாதங்களை உடைய इमानुकं என்கிற 3 ஹோமமும் செய்யப்பட வேண்டும். மத்யத்தில் வேறு ஹோமம் செய்யக் கூடாது. 3 தான் கடைசீ.

अनुवाक: १३—प्रजापतिरश्वमेधं

குதிரையை அதனிஷ்டப்படி சுற்ற வெளியனுப்பி அந்த வருடம் பூராவும் செய்யப்படுகிற ஸாவித்ரேஷ்டியையும், மாலையில் செய்யபடுகிற த்ருதி ஹோமத்தையும் புகழப்படுகிறது. ப்ரஜாபதியால் யாகத்திற்காக உண்டுபண்ணப்பட்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குதிரை தனது உயிரைக்காத்துக்கொள்ள ஓடினதாகவும், அதை யூபத்தோடு கூடிய யாகத்தால் பிடிக்க முடியாமல் இஷ்டிரூப ஹோமங்களால் அடைந்ததால் இதை அவச்யம் (3 இஷ்டியையும்) செய்ய வேண்டும். காணாமல்போன பதார்த்தங்கள் அநேகமாக பூமியில் இருந்துதான் நாளடைவில் கண்டுபிடிக்கப்படுவது இயல்பாக இருப்பதால் பூமி தேவதாகமான இஷ்டிகளால் குதிரையை தன்வசப்படுத்துகிறான் என்றும் பலவாராக புகழப்படுகிறது.

अनुवाकः १४—अपवा (२)

ஸங்கல்பம் முதல் அத்வர்யூவிடம் ராஜ்ய பாரத்தை ஒப்புவித்து வெகுகாலமாக யாகத்தில் ஈடுபட்டதால் இந்த அரசனிடமிருந்து ராஜ்யமும், ஐச்வர்யமும் ஒதுங்கிவிடுகிறது. அவைகளை அடைய ஸாவித்ரேஷ்டிகளை அனுஷ்டிக்கும் ஒரு வருட காலமும் ஐச்வர்ய ஸ்வரூபமான வீணையைக் கொண்டு பகலில் ப்ராம்மணன் தனது ஸ்வபாவத்தால் இவ்விதம் பல கிராமம், பசு, தங்கம் முதலானதை ப்ராம்மணனின் பொருட்டு தானம் செய்தாய், மேலும் உயர்ந்த யாகங்களை இவ்விதம் விமர்சையாகச் செய்தாய், பக்ஷ்ய, போஜ்யம் என்பவைகளுடன் உயர்த ஆஹாரம் செய்வித்தாய் என்பது போன்ற பலவிதப் பெருமைகளை கானம் செய்ய வேண்டும். இரவில் அரசகுலத்தில் உதித்தவன் ஏ! அரசே! இவ்விதம் உயர்ந்தப்ருது,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பரதன், தசரதன், முதலானவர்களுக்கு ஸமமாக சத்ருக்களை ஜயித்தாய், சதுரங்க சேனைகளுடனும், பலவித ஆயுதங்களுடனும், வீரர்களுடனும் யுத்தம் செய்தாய். யுதிஷ்டிரர், துஷ்யந்தன் போன்ற உயர்ந்த சக்ரவர்த்திகளை போல் யுத்தம் செய்து, பல தேசங்களைக் கைப்பற்றி அரசர்களை, துஷ்டர்களை அழித்தாய் என கானம் செய்து அரசனை உத்ஸாஹப்படுத்துவதன் மூலம் அவனிடம் அஹோராத்ரமும் ஐச்வர்யத்தையும் ராஜ்யத்தையும் இருக்கச் செய்கிறார்கள். இவ்விதம் ஒரு வருடம் கானம் செய்து பூர்த்தி செய்த இருவர்களுக்கும் தக்ஷிணையாக வண்டியில் கட்டப்பட்ட இரு பசுக்களையும் மேலும் 200 பசுக்களையும் கொடுத்து பல நூற்றாண்டுகள் இந்த்ரியாதி சக்திகளுடன் அரசன் யாககர்த்தா வாழ்வதாக கூறப்படுகிறது.

अनुवाकः १५—सर्वेषुवा एषु

அவப்ருத காலத்தில் செய்ய வேண்டிய 3 ஹோமங்கள், அதன் மந்திரங்கள், ஹோமம் செய்ய வேண்டிய இடம் இவைகள் ப்ரதிபாதனம் செய்யப்படுகின்றன. எல்லா உலகத்திலும் உள்ள ஸகல ஜீவராசிகளுக்கும் வ்யாதி ரூபமாக யமன் பிடித்து அழைத்துச் செல்கிறான். அவ்வித ம்ருத்யுவிற்கு ஹோமம் மூலம் த்ருப்தி செய்விக்காவிடில் ஆபத்து. அதைப் போக்க தனித்தனியாக வ்யாதி, தரித்ர ரூபமான ம்ருத்யுவைக் குறிக்காமல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரே ம்ருத்யுவின் பொருட்டு ஒரு ஹோமம் செய்தால் அதுவே எல்லா ம்ருத்விற்கும் உயர்ந்த பசியாகிற ம்ருத்யுவை நாசம் செய்கிறான். இரண்டாவது ஹோமத்தால் கர்ப்பத்தை நாசம செய்த பாவம், அல்லது மூன்று வேதத்தை கல்பஸூத்ரத்துடன் அறிந்தவனோ அல்லது தனது சாகையைப் பயின்ற ப்ராம்மணனையோ கொன்ற ப்ருணஹத்தி பாபத்தை போக்க அதே சப்த மந்த்ரத்தால் ஹோமமும், இதை கர்ம மத்யத்தில் செய்வது ஸரி இல்லை என்பதும், கூச்மாண்ட ஹோமம் போல் கர்மாரப்ரம்பத்திலேயே செய்ய வேண்டும் என்றும் ஜலத்தை மட்டும் ஆஹாரமாக உடைய உதங்யு என்ற ரிஷியின் புத்ரன் முண்டிபன் இந்த ஹோமத்தை நினைப்பது போல் அச்வமேதத்தில் மட்டுமல்லாமல், ஏதாவது காரணம் தெரிந்தோ தெரியாமலோ ப்ராம்மண வதம் நேரிடில் அதற்கு பிராய்ச்சித்தமாக நினைப்பதாக ஸ்ரீவித்யாரண்யரின் அபிப்ராயம். மூன்றுவதாக செய்யும் ஹோமம் அவப்ருத தேவதையான வருணனின் பொருட்டு. இந்த ஹோமத்தை வருணனின் ஸ்வரூபமான வழுக்கை மண்டையும், எப்பொழுதும் வேர்வையுடன் இருப்பவனும், வெண்குஷ்டரோகியும், மஞ்சள் கண்களையுடையவனுமான புருஷனின் சிரஸில் செய்து வருணனை த்ருப்தி செய்து பாபங்களில் இருந்து விடுபடுகிறான். இவ்விரண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகமும் ம்ருத்யு ஸூக்தமாக ஜபிக்கப்படு கின்றன.

अनुवाकः १६—वारुणो वा अश्वः

குதிரையை உபாகரணம் செய்யும் போது சொல்ல வேண்டிய மந்த்ரத்தின் விரிவுரை. பசு புரேடாசத்தைச் செய்து தொடர்ந்து 10 தேவதை களுக்கு ஒரே இஷ்டியில் ஹவிஸ்ஸை கொடுக்கக் கூடிய இஷ்டியையும் அதனதன் யாஜ்யா புரோனு வாக்கிய ஸ்தலத்தையும் சொல்லப்படுகிறது. அக்னி, இந்த்ராக்னி, அச்வினீ தேவதைகளுக்கு ரிய பசுக்களின் ஆலம்பனம் கூறப்பட்டுள்ளது, வருணனை அதிபதியாக உடைய தீர்த்தங்களில் இருந்து உண்டானதால் வருணனுக்கு ப்ரீதியாக மந்த்ரமும், ப்ரஜாபதியின் கண்ணில் இருந்து உண்டானதால் அவரது ப்ரீதிக்காக ஆலம்பன மும் சொல்லப்படுகிறது.

अनुवाकः १७—यद्यश्वमुपतपत्

குதிரையின் ஆரோக்யத்திற்காக பல இஷ்டிக ளும, பல பாப பரிஹாரங்களும் குதிரையின் நடத்தையை அறிந்து செய்ய வேண்டிய ஹோமங் களும் விதிக்கப்படுகின்றன. குதிரைக்கு ஜ்வரம் ஏற்படின் அக்னி தேவதை, அஷ்டா கபாலம் த்ரவ்யம், ஸோமதேவதை அன்ன த்ரவ்யம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸவிதா தேவதை அஷ்டா கபாலம் த்ரவ்யம் இந்த 3 இஷ்டிகளால் ஜ்வர நிவ்ருத்தி. பூஷா தேவதை சரு த்ரவ்யம் இந்த கர்மாவால் குதிரையின் தோல் வ்யாதி குணமாகிறது. ருத்ரன் தேவதை சரு த்ரவ்யம் இதனுல் தேவதோபத்ரவ நிவ்ருத்தி. ஹோம தினத்தன்று குதிரை யாகசாலை வந்து சேராவிடில் 12 கபால த்ரவ்யத்தை வைச்வாநர தேவதைக்கு அக்னி கொடுப்பதால் குதிரை தனது ஸ்தானத்திற்கு வந்து சேருகிறது. பெண் குதிரையை நினைத்து வருந்திஞல் (ஆஹாராதி களை க்ரஹிக்காமல் இருப்பது இதற்கு ஸூசகம்) அகும்ஹோமாக்னி தேவதை 8 கபால த்ரவ்யம் ஸூரியதேவதை யால் த்ரவ்யம், நெய் த்ரவ்யம் வாயூ தேவதை இந்த மூன்றையும் அனுஷ்டித்து, அந்த தேவதா ப்ரஸாதத்தால் குதிரையின் புத்தியை ஸமாதானப் படுத்தி அச்வமேதத்தை முறைப்படி அனுஷ்டித்து தனவாஞக ஆகிருன்.

अनुवाकः १८—यो वै स्वदाहुः

அச்வமேதம் பூர்த்தியானதும் அரண்மனை சேர்ந்து 12 ப்ரம்மௌதனங்களையோ அல்லது அக்னி முதலான தேவதைகளையுடைய 12 இஷ்டிகளையோ அனுஷ்டிக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் கருத்து. இதில் இஷ்டியை அனுஷ்டிப்பதால் பெரிய கர்மாவில் பலவிதமான சந்தஸ்களையும் மந்த்ரங்களையும், வாக்கையும் உபயோகப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படுத்தி அதுமுடிந்ததும் இஷ்டிகர்மாவில் இவை களை உபயோகப்படுத்தினால் அவைகளுக்கும் உழைப்பிற்குமேல் உழைப்பாகிற ச்ரமத்தால் எதிர்பார்க்கும் ப்ரயோஜனம் கிடைப்பது ச்ரமம், கிடைக்காது. ஆகையால் ஆதான ப்ரகரணத்தில் சொல்லப்பட்ட ப்ரம்மௌதன ப்ரயோகத்தை 12 தடவை அனுஷ்டித்து அதனால் முன் சொன்ன தோஷங்கள் இல்லாததால் யக்ஞபலத்தை அடை வதுடன் எண்ணிக்கை மூலம் ஸம்வத்ஸரகால ப்ரயோஜனத்தை மாதங்களின் மூலம் அடை கிறான்.

अनुवाकः १९—एषवै विभूः

இந்த அச்வமேத யாகமானது विभूः முதலான 12வித குணங்களுடன் கூடியதாக இருக்கிறது என்று புகழப்படுகிறது. ஸமீபத்தில் சொன்ன 12 ப்ரம்மௌதனமும் இதனால் பெருமையுடைய தாகிறது. இவ்வளவு உயர்ந்த குணங்களுடன் கூடியது இந்த யாகம் என்பது பொருளாகும்.

अनुवाकः २०—तार्प्येणाश्वं

குதிரையின் உயிர்போகும் தருவாயில் அதன் கீழ் நெய்யில் நனைக்கப்பட்ட கம்பளம், அதற்கு மேல் பெரியதோல், அதன் மேல் தங்கத்தால் இழைக்கப்பட்ட படுக்கை, அதன்மேல் தங்கப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

பலகை, அதன்மேல் குதிரையை நிறுத்தி உயிரைப் போக்க வேண்டும். இவ்விதம் ஸம்பா ரங்களால் முறையே மூன்று உலக ப்ராப்தி. ஸூர்ய ப்ராப்தி, ப்ரஜாபதியுடன் சேர்ந்த வாஸம், ஒரு உலகத்தில் இருப்பது சமானமான ஐச்வர் யத்தை அடைவது போன்ற ப்ரயோஜனத்தை அடைகிறான்.

अनुवाकः २१—आदित्याश्च

குதிரையின் பெயர்களில் சிலவற்றிற்கு காரணங்களையும் உத்தரவேதி என்கிற ஆஹவ நீயத்தை (இடத்தை) தயார் செய்வதும் சொல் லப்படுகிறது. ஒரு ஸமயம் ஸூர்ய கணதேவதை அங்கிரஸ் என்கிற தேவதை இவர்களில் யார் முத லில் ஸ்வர்க்கத்தை அடைவோம் எனப் பந்தயம் ஏற்படுத்தி அதில் ஆதித்யர்கள் முதலில் ஸ்வர்க் கத்தை அடைந்தார்கள். தங்களது வேண்டு தலால் நம் கண்ணிற்கு தெரியும் ஸூரியனை குதிரையாகச் செய்து, ஆதித்ய கணத்தவர்களின் பொருட்டு தக்ஷிணையாக அங்கிரஸ்கள் கொடுத் தார்கள். அதைப் பெற்றுக்கொண்ட தேவதைகள் ரொம்பவும் உயர்ந்த வஸ்துவை எங்களின் பொருட்டு கொடுத்தீர்கள் என சந்தோஷத்துடன் கூறினார்கள். அப்பெயரே உயர்ந்தது எனப் பொருள்படும் वरः என ஆயிற்று. இதை வைத்தே

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குதிரையின் உயர்ந்த குணங்களை அறிந்து அது களோடு கூடின குதிரையை ஸ்வ்ய: என தேசங் களில் கூப்பிடுவதாக தெரிகிறது. இவ்விதம் குதிரைக்கு ஸவர்ய என்கிற பெயர் ஏற்பட்டது. இதனால் உயர்ந்த பதார்த்தத்தை வரன் என்கிற பெயரால் யக்ஞங்களில் தக்ஷிணையாக கொடுக்கப் படுகிறது.

இதுபோன்று ப்ரஜாபதியை ஒரு ஸமயம் குதிரையாகச் செய்து யாகத்தில் (அடுத்த அனு வாகத்தில் விபரம்) ஆலம்பம் செய்ததால் அடை வது என்கிற காரணத்தால் அச்வம் எனப் பெயர் பெற்றது. (எல்லாவற்றிலும் ஸம்பந்தப்படுவது எனப் பொருள்) ஒரு ஸமயம் ப்ரஜாபதியின் கண் பெருத்து அதில் இருந்து உண்டானதால் அருர் எனப் பெயர் ஏற்பட்டது. உண்டான மாத்திரத் திலேயே வேகமாகச் சென்று அன்னத்தை அடைந்ததால் வாஜீ எனப் பெயரும் உண்டா யிற்று.

தேவாஸுர யுத்தத்தில் அசுரர்களை ஜயித்து தேவஸம்பந்தமான உலகத்தை அவர்களிடம் வாங்கி கொடுத்ததால் ஆதித்யன் எனப் பெயரை அடைந்தது.

அக்னியைக் கொண்டே யாகங்கள் செய்ய வேண்டி இருப்பதால், அச்வமேதத்திற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரணம் அக்னி, அவருக்கு காரணம் ஸூர்யன். அவரின் தேஜஸ்ஸை அடைந்து பிரகாசிப்பதாக இருப்பதால் மந்த்ரங்களால் வைக்கப்பட்டு கற்களால் நிர்மானிக்கப்பட்ட இடத்தில் உத்தர வேதியை நிர்மானிக்க வேண்டும். இதனால் அதனதன் காரணத்தை அடைவதாகும். இதை அறிந்தவனும் சொந்த ஸ்தானத்தை உடையவனாகவும், காரணம் அறிந்தவனாகவும் ஆகிறான். ப்ராணாபான வ்ருத்திக்களைக் கொண்டே ஸர்வகார்யமும் ஏற்படுகிறது. அந்த ஸ்தானமாக ஸூர்யனும், அச்வமேதமும் தேவர்களுக்கு ஆகிறது. இதனால் ப்ராணாபான விருத்தி நேர்வழியாக இருப்பதின் பலத்தை அடைகிறான், அதுபோல் சரீரத்தில் பலத்திற்கு காரணமான ஓஜஸ் என்கிற தாதுவையும் அடைகிறான், இதனால் இஷ்டகைகளால் சயனம் செய்யப்பட்ட இடத்தில் உத்தர வேதியை அடைந்து அசைவற்றதான ஸ்திர தன்மையை அடைகிறான்.

अनुवाकः २२—प्रजापति वै

ஆரம்பத்தில் ஒரு வருட காலம் குதிரையை ப்ரோக்ஷணம் செய்யும்படி சொல்லப்பட்டது, அதற்குக் காரணமும், குதிரையைப் புகழ்வதும், ஆரம்பத்திலேயே அனுஷ்டிக்க வேண்டிய ரிஷிபாலம்பனத்தையும் (காலை) சொல்லப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ப்ரஜாபதி ஒரு குதிரையாக ஆனார். அதை காலையில் தேவதா ப்ரீதிகரமாக யாகத்தில் உபயோகப் படுத்துவோம் எனக் கருதி அதன் ஸமீபத்தில் ஒரு தினம் தேவர்கள் இருந்தார்கள், நமது வருடமும் தேவர்களது ஒரு தினமும் ஸமம். ஆகையால் தான் ஒருவருட காலம் மனுஷ்யர்கள் ப்ரோக்ஷணம் செய்வது என்பது தேவர்களுக்கு ஒரு தினம் செய்ததாக ஆகிறது. இதுவே இதற்கு ஒரு வருஷ ப்ரோக்ஷணத்திற்கு காரணம். இதை அறிந்தவன் நன்றாக ஓடும் குதிரையை அடைகிறான். ப்ரஜாபதியே குதிரையாக ஆனதைத் தெரிந்து கொள்வதால் குதிரை பசுக்களுக்குள் உயர்ந்ததாகவும், தனக்கு ஸமமான புத்ரனையும் அடைகிறான். குதிரை ப்ரஜாபதி ஸ்வரூபமானதால் அதை ஆலம்பனம் செய்வதால் ஸர்வ ப்ராணிகளையும் ஆலம்பம் செய்தவனாகிறான். இதை அறிந்தவனை சரீர காந்தியோடும், வேத வித்வானாகவும் தேவர்கள் செய்கிறார்கள். யக்ஞரூபமான ப்ரஜாபதியை (குதிரையை) யக்ஞத்திலேயே உபயோகப்படுத்தியதால் அந்த யாகம் இவனுக்கு வேண்டியதைக் கொடுப்பதாக ஆகிவிடுகிறது. இதனால் இவன் மறுபிறப்பை விரும்பாமல் செய்து, மறுபிறப்பு இல்லாமல் தேவனாகிறான். மேலும் ப்ரஜாபதியின் ஸ்வரூபமாகவும் ஆகிறான். ஆரம்பத்தில் சொன்ன ஸாங்க்ரஹணீ, ஸம்ஞானீ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவ்விரண்டு இஷ்டிகளுக்கும் மத்யத்தில் வைசாக மாத பூர்ணிமா தினத்தில் ரிஷபாலம்பனம் செய்ய வேண்டும். அது கொம்பற்றதும் பலவித வர்ணத்துடனும் இருப்பது அவச்யம், இதனால் ஸர்வகாம ப்ராப்தி ஜயசீலனாகிறான். இவ்விதம் அச்வமேத ஸ்வரூபத்தை அறிந்தவன், அனுஷ்டிப்பவன் இருவருமே எல்லாவற்றையும் ஜயித்து எல்லா ஆசைகளையும் அடைந்தவனாகிறான் எனத்தெரிகிறது.

अनुवाकः २३—यो वा अश्वस्य—உபாஸனம்.

யாகத்தில் ஈடுபடுத்தப்படுகிற குதிரையின் இரு புறமுள்ள ரோமங்களை அஹோராத்ர ரூபமாக த்யானம் செய்யும் இக்கால அக்னி ஹோத்ரீ, தான் இருகாலத்திலும் செய்யும் அக்னி ஹோத்ர ஹோமத்தை குதிரையின் ரோம எண்ணிக்கைக்கு ஸமமாகச் செய்கிறான். இதை தேவர்கள் தங்களது வலிமையினால் (சக்தி) ரோம எண்ணிக்கை அறிந்து அவ்விதமே செய்தார்கள். தற்போது அந்த சக்தி அற்றதால் த்யானத்தால் அவ்விதப் பலனை அடைகிறான்.

இது போன்று குதிரையின் குளம்பு அடிகளை தர்சபூர்ணமாஸ இஷ்டி ஹோமமாக நினைத்து அதன் காலடிகள் எவ்வளவு உண்டோ அவ்வளவிலும் ஹோமம் செய்த பலனை த்யானத்தால் அடைகிறான்.

 Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூன்றாவதாக வெளியில் பல இடங்களைச் சுற்றிவந்த குதிரை அந்த ச்ரமத்தைப் போக்கிக் கொள்ள மணலில் புரளும், இவ்விதம் புரளுவதை ஸூர்யன் ஒவ்வொரு தினமும் ஆஹவனீயாக்னியை அடைவதை த்யானமாகச் செய்ய வேண்டும். இது போன்று அக்னிஹோத்ரத்தையும் அறிய வேணும். இவ்விதம் தியானம் செய்வதால் குதிரையின் ஒவ்வொரு புரளும் சேஷ்டையில் அனுஷ்டித்தவனாகிறான்.

ஏகாதசீ வ்ரததினத்தில் பாராயணம்

திதிகளில் ஏகாதசீ விஷ்ணு ஸம்பந்தி, ப்ரீதிகரம் என்பது யாவரும் அறிந்த விஷயம். யாகத்தில் தெரிந்தோ, தெரியாமலோ விட்டுப் போனால் ஏற்படும் தோஷத்திற்கு பரிஹாரமாக விஷ்ணு ப்ரீதிபாதகமான மந்திரத்தை इदं विष्णुः சொல்லும்படி ஸம்ஹிதை 6ம் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. இது போன்ற விட்டுப்போனதும், அந்தந்த இடத்தில் தேவையானதுமான மந்த்ர ஸமூகத்தை அச்சித்ர ப்ரச்னம் நமக்கு அளிப்பதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீவிஷ்ணுவின் ஸ்வரூபமாகவே ஸம்ஹிதை முதலான இடங்களில் யாகத்தை சொல்லப்படுகிறது. யாகங்களில் உயர்ந்தது என்பதை பல காரணங்களால் அச்வமேத விஷயத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. வேதம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சொல்வது புண்யம். அதுவும் அச்வமேத ப்ராம் ணம் ஆரம்பத்தில் சொல்லப்பட்டபடி காலம், தசம் இவைகளால் அதிக புண்யம் தரவல்லதா றது. இவ்வித காரணங்களைப் பார்க்கும் போது ிஷ்ணு ஸம்பந்தமான இந்த 3 ப்ரச்னங்களையும் ிஷ்ணு ஸம்பந்தமான ஏகாதசீ வ்ரதத்தில் பாரா ணம் செய்வது என்பது அதிக புண்யம் தர ல்லது என்பதுடன் ஸம்ப்ரதாயத்தில் நம் ிக்கை உடையதும் காரணமாகிறது.

ंदार्थस्य प्रकाशेन तमो हार्दं निवारयन् ।
ुरर्थान् चतुरो देयात् विद्यातीर्थ महेश्वरः ।।

வேதார்த்தத்தை வெளியிடுவதின் மூலம் ற்ருதயத்திலுள்ள அக்ஞானத்தை போக்கி ர்மார்த்த, காம, மோக்ஷம் என்ற 4 புருஷார்த்தங் ளை வித்யாதீர்த்த மஹேச்வரர் அளிக்கட்டும்.

சுபம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
38	1	ஸ்மாணத்த்ரல்	ஸ்மரணத்தால்
64	12	ஆஹதறிய	ஆஹவநீய
64	17	इद्रोवृत्रमहन्	इन्द्रोवृत्रमहन्
69	5	அவனிடமிருந்து 'சொத்தப்பல்ல னிடமும்'	அவனிடமிருந்து 'சொத்த நகமுள் ளவனிடமும்'
70	3	பிரபணியை	பிராணியை
79	11	ருதி	ருத்
81	5	ஸ-ரனவாகாரம்	ஸ்வெளவர்காரம்
83	18	தானம்	தரனம்
83	20	—	செய்தும் வார்த்தைக்கு பிறகு 6 சேர்க்கவும்.
84	7	த்ருக்	சத்ருக்
86	2	காரியம்	விட்டுவிட வேண் டியது.
86	4	सयायुषा	समायुषा
110	6	सत्यं प्रपद्यं	सत्यं प्रपद्ये
119	24	भुवासवासाः	युवासुवासाः
192	17	सर्वेषुवा	सर्वेषु

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1. ஸ்துதிகுஸுமாஞ்ஜலி:
2. க்ஷேத்திராடனம் பாரதம்
3. லீலாவிபூதிகள் மூன்று பாகங்கள்
4. விவாஹம் 3 பாகங்கள்
5. கிருஷ்ண யஜுர்வேத ஸாரம் 16 பாகங்கள்
6. கபர்திகாரிகை
7. ஸ்ரீ மஹாகணபதி ஹோமம்
8. மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்
9. புருஷ ஸூக்த ஹோமம்
10. ஸ்ரீ மஹாஸுதர்சன ஹோமம்
11. ஸ்ரீ ஸூக்த ஹோமம்
12. ஸ்ரீ சண்டி ஹோமம்
13. ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்கள் சுருக்கம்
14. ஸ்ரீருத்திரம் ஜடை
15. மந்த்ரப்ரச்னம்
16. ஸ்ரீருத்திரம் சமகம் கனம்
17. க்ருஷ்ண யஜுர்வேத ஆபஸ்தம்ப ஸூத்ர ஸம்ஸ்கார 47 புத்தகங்கள்

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்கும் இடம் :

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு; சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi